# டாட் 1

# Da'at

70 கட்டுரைகள், 70 துணுக்குகள்

ஜெயராஜ் விஜய்குமார்



## ஆசிரியர் உரை



ஈடு இணையற்ற இறைமகன் இயேசுவின் நாமத்தினால் உங்களை "**டாட் (Da'at)** " எனும் இந்த நூலின் முதல் பாகத்திற்கு அன்புடன் வரவேற்கிறேன். Da'at என்ற எபிரேயப் பதத்திற்கு **தெய்வீக ஞானம்** அல்லது **அறிவு** என்பது பொருள். சபை கர்த்தரை அறிகிற அறிவில் வளர வேண்டும், தேவஜனங்கள் தேவகிருபையில் பெலப்பட்டு வெற்றியுள்ள ஆவிக்குரிய மற்றும் இம்மைக்குரிய வாழ்வை வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கில், கர்த்தருடைய பெரிதான சித்தத்தின்படி **"சேனல் ஆஃப் பிளஸ்ஸிங்"** என்ற நமது ஊழியம் செயல்பட்டுவருகிறது.

புத்தகங்கள், இணையதளம், மற்றும் சமூக வலைதளங்கள் வழியாக தேவஜனங்களை சந்தித்து சத்தியத்தின் மூலம் அவர்களது ஆவிக்குரிய வாழ்வை ஊன்றக் கட்டுவது. கருத்தரங்குகள், கன்வென்ஷன்கள், வாலிபர் முகாம்கள், குடும்ப ஆலோசனைக் கூட்டங்கள் வழியாக இறைவார்த்தையை பகிர்வது, புதிய பாடல்களை உருவாக்கி அவற்றை சபைக்கு அர்ப்பணிப்பது ஆகியன தற்பொழுது நானும் எனது மனைவி ஹெலன் அவர்களும் இணைந்து செய்துவரும் ஊழியங்கள்.

நமது தாலந்துகள் கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் கட்டுமானப் பணிக்கு பயன்பட வேண்டும். தகுதியற்ற நம்மை கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாக மாற்றி, நம்மை அதன் மூலம் தகுதிப்படுத்தி அவருக்கு ஊழியம் செய்யும் வாய்ப்பை அளித்திருப்பது கர்த்தருடைய மகத்தான கிருபை. இந்தப் புத்தகத்தை உங்கள் சபைக்கும், நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

எங்களைத் தொடர்பு கொள்ள விரும்பினால் **vijaykumar.jeyaraj@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு எழுதுங்கள்.

தற்சமயம் தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டையில் வசித்துவருகிறோம், கர்த்தர் எங்களுக்கு சாமுவேல், ஏஞ்சலின் என்ற இரு குழந்தைகளைத் தந்து ஆசீர்வதித்திருக்கிறார். எங்கள் குடும்பத்துக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் சத்தியத்தை அறியும் அறிவில் நடத்தி அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

**Our Website:** www.brovijay.com
**Facebook:** facebook.com/brovijay
**Twitter:** twitter.com/brovijay1976
**LinkeIn:** linkedin.com/in/brovijay

## 1. ஜெபம் என்பது உழைப்பா, உறவா?

ஏதேனுக்கு வெளியே நெற்றி வியர்வை சிந்த ஆதாம் உழைத்தானே அந்த அனுபவமல்ல, ஏதேனுக்குள்ளே குளிர்ச்சியான வேளையில் தேவனோடு உலவினானே, அந்த அனுபவமே ஜெபம்!

ஜெபம் என்பது உழைக்கும் அனுபவமல்ல, உறவாடும் அனுபவம். புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள் எதுவும் உழைப்பின் வழியாக நமக்கு வருவதில்லை, பிள்ளை எனும் உரிமை வழியாகவே வருகிறது!

“கேளுங்கள்” என்று இயேசு சொன்னதன் பொருள் “கேட்டு கதறுங்கள்” என்பதல்ல, கேட்கும் உரிமை பெற்று விட்டதால் கவலைகெளையெல்லாம் உதறுங்கள் என்பதே!

ஜெபம் என்பது தேவனை உலுக்குவதல்ல, அவரை உயர்த்துவது. அவரை இணங்க வைப்பதல்ல, அவரோடு இசைந்திருப்பது!

“ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது” என்று சொல்லிவிட்டு இயேசு கெத்சேமனேயின் மாதிரியைக் காட்டவில்லை, மாறாக “பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே...” என்று உறவோடு தொடங்கும், சிறுபிள்ளைக்கு கூட எளிதான ஜெபத்தையே கற்றுக் கொடுத்தார்.

சாத்தானின் சிண்டைப் பிடித்து அவனோடு மல்லுக்கட்டி உருளும் அனுபவமும் அல்ல ஜெபம், அவன் மண்டை நசுக்கப்பட்டதை அவனுக்கு நினைப்பூட்டி வெற்றி முழக்கமிடும் அனுபவமே ஜெபம்.

செடியோடு ஒட்டப்பட்ட திராட்சைக் கிளைக்கு, செடியின் சாரத்தைப் பெற உழைக்கும் அவசியம் இல்லை, செடியின் வேருக்கும் சாருக்கும் அது பங்காளி!

ஜெபத்தின் வழியாய் வருவதல்ல ஜெயம், இயேசு பெற்ற ஜெயத்தின் வழியாக நாம் பெற்ற உரிமைதான் ஜெபம். இல்லாவிட்டால் காணியாட்சிக்கு புறம்பான புறஜாதியானுக்கு தேவனுடைய வீட்டில் பங்கேது?

ஜெபத்தை உழைப்பாக நினைத்தால் சில நிமிடங்கள் ஜெபிப்பதுகூட வலிக்கும்! உறவாக நினைத்துப் பாருங்கள் விடியவிடிய ஜெபித்தாலும் இனிக்கும்!

### ட்வீட் - 01

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமக்கு சீடராக சாதாரண பலவீனமுள்ள மனிதர்களைத்தான் தெரிந்தெடுத்தார், ஆயக்காரரையும், பாவிகளையும் தோழராக தெரிந்துகொண்டார். தாம் வளரக்கூட நன்மைகள் வராத நாசரேத்தை தெரிந்தெடுத்தார். ஆனால் தன்னைப் பெற்றெடுத்து வளர்க்க மட்டும் யோசேப்பு மரியாள் என்ற ஆகச்சிறந்த பெற்றோரைத் தேர்ந்தெடுத்தார்!

பிள்ளைகளின் வாழ்வில் பெற்றோர் உருவாக்கும் தாக்கம் கொஞ்ச நஞ்சமல்ல. நாளை சாட்சியுள்ள கிறிஸ்தவ சமுதாயம் உருவாவது சபைகளின் கையில், ஊழியக்காரர்களின் கையில் மட்டுமல்ல, அதில் பெரும்பங்கு சபைக்குள் இருக்கும் பெற்றோரின் கையிலும் இருக்கிறது.

## 2. விவகாரமான கனவுகள்

உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்பட்ட பாபிலோனின் தொங்கும் தோட்டத்தை உருவாக்கிய பாபிலோனியப் பேரரசன் நேபுகாத்நேச்சார் (605BC to 562BC) ஒருநாள் திடீரென்று மிருகத்தைப் போல மாறி புல்லைத் தின்னத் தொடங்கினான் என்ற செய்தி பரிசுத்த வேதாகமத்தின் தானியேல் புத்தகம் 4-ஆம் அதிகாரத்தில் இருக்கிறது. அதை வாசிக்கும்போது அது எப்படி சாத்தியம் என்று கேட்கத் தோன்றும்.

ஆனால் மனோதத்துவ நிபுணர்கள் இதனை “போவாந்திரோஃபி” என்ற ஒரு கொடிய மனநோய் என்கிறார்கள். அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களை ஒரு கால்நடையாக நினைத்துக் கொள்வார்களாம். தான் ஒரு கால்நடையாக மாறுவது போன்ற ஆழமான மனதை பாதிக்கும் விதத்தில் ஏற்படும் கனவு இந்த வியாதிக்கு ஒரு முக்கிய காரணம் என்று மனவியல் அறிஞர் சிக்மண்ட் பிராய்டு குறிப்பிடுகிறார்.

நேபுகாத்நேச்சார் தான் ஒரு மிருகமாக மாறுவதுபோல கனவு கண்டான் என்றும், அதைத் தொடர்ந்தே அவன் மிருகம் போல மாறி ஏழு ஆண்டுகள் அல்லல்பட்டு பின்னர் கர்த்தரிடம் சரணடைந்தான் என்றும் பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

தனது மனமேட்டிமையின் நிமித்தமே அவன் தேவனுக்கு எதிரியாகிப் போய் நாலுகால் பிராணிபோல தாழ்த்தப்பட்டான் என்று வேதம் நமக்கு இச்சம்பவம் மூலம் ஒரு தீர்க்கமான எச்சரிப்பைத் தருகிறது. இதில் நாம் கற்றுக்கொள்ளும் முதன்மையான பாடம் என்னவென்றால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் (யாக் 4:6) என்பதே! தேவனிடம் எதிர்த்து நிற்பவன் வல்லரசின் மாமன்னனாகவே இருந்தாலும் அவனுக்கு தேவனிடமிருந்து வரும் தண்டனை எப்படி, எங்கிருந்து வரும் என்று தெரியாது.

இது ஒரு புறமிருக்க, தேவபிள்ளைகளுக்கு வரும் சில பிரச்சனைகள் அது அவர்கள் தேவையில்லாமல் தாங்களாகவே இழுத்துக் கொள்ளும் அவதிகளாகவே இருக்கின்றன. மோசமான மன அழுத்தத்தில் இருக்கும்போது தோன்றும் சில கெட்ட கனவுகள்கூட நமது மனநிலையை கடுமையாக பாதித்து விந்தையான மனநோய்களுக்குள் தள்ளிவிடும் என்று கனவுகளைப் பற்றி ஆய்வுகள் செய்துவரும் முனைவர் மிஷேல் கார் தனது dream factory என்ற இணையதளத்தில் குறிப்பிடுகிறார். ஆக போவாந்திரோஃபி மாதிரி பிரச்சனைகள் தேவனிடத்தில் இருந்து அவரை எதிர்ப்போருக்கு (பிள்ளைகளுக்கு அல்ல) வரும் தண்டனையாகவும் இருக்கலாம், அல்லது நாமே வலிய இழுத்துக் கொள்வதாகவும் இருக்கலாம்.

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? (மத்தேயு 6:27) என்று ஆண்டவர் நம்மிடம் கேட்கிறார். பாவத்தினால் வரும் குற்ற மனசாட்சியிலிருந்தும், எதிர்காலத்தைக் குறித்த பயத்தினின்றும் நம்மை விடுதலையாக்கி நல்வாழ்வு அளிக்க கர்த்தர் ஒருவர் இருக்கும்போது நாம் ஏன் கவலைப்பட்டு மன அழுத்தங்களில் உழல வேண்டும்?

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் (பிலிப்பியர் 4:4)

## ட்வீட் - 02

அங்கி போனால் என்ன,
என்னுள்ளிருக்கும் ஒளி
மங்கிப் போக அனுமதியேன்!

போத்திபார் மனைவியிடம்
அங்கியை விட்டுவிட்டு
மின்னலாய் ஓடி மறைந்தான்
யோசேப்பு!

## 3. நமது தேடல் என்ன?

**தேவன் > விருப்பங்கள் > கேட்கும் பிரசங்கங்கள் > மனம் மறுரூபமாதல் > சரியான தேடல் > சரியான பயணம்**

**சுயம் > இச்சைகள் > செவித்தினவுக்கேற்ற பிரசங்கங்கள் > வஞ்சிக்கப்படுதல் > தவறான தேடல் > திசைமாறிய பயணம்**

நமது கிறிஸ்தவ வாழ்வின் போக்கை நிர்ணயிப்பதில்  தேடல் (Seeking)என்பது மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. நமது தேடல் நாம் கிறிஸ்தவ வாழ்வின் இலக்கைக் குறித்து என்ன அறிந்திருக்கிறோமோ அந்த அறிவின் அடிப்படையிலேயே அமைகிறது. அந்த அறிவு நாம் எதை, யாரிடம், எங்கு கற்றுக் கொள்ளுகிறோமோ அங்கிருந்துதான் கிடைக்கிறது. எனவேதான் நாம் எப்படிப்பட்ட நூல்களை வாசிக்கிறோம், எதுமாதிரியான பிரசங்கங்களைக் கேட்கிறோம் என்பது மிக முக்கியமானது.

நமது இருதயத்தின் விருப்பம் எதுவோ அதற்கேற்ற பிரசங்கங்களைத்தான் நாம் நாடுவோம். இங்குதான் பாதை இரண்டாக பிரிகிறது. விருப்பத்தை நமது இருதயத்தில் தேவனும் உருவாக்க முடியும், நமது மாம்சமும் (சுயம்) உருவாக்க முடியும். தேவன் தருவது விருப்பம், மாம்சம் தருவது இச்சை. விசுவாசிகளில் சிலர் பவுல் போன்ற அப்போஸ்தலரைப் பின்பற்றியதற்கும், வேறு சிலர் செவித்தினவுள்ளவர்களாய் தங்கள் இச்சைக்கேற்ற போதகர்களை சேர்த்துக் கொண்டதற்கும் இதுவே காரணம்.

சரி, யாருடைய இருதயத்தை தேவனுடைய விருப்பம் நிரப்புகிறது, யாருடைய இருதயத்தை சுயம் தரும் இச்சை நிரப்புகிறது? நாம் நமது ஆத்துமாவை யாருடைய ஆளுகைக்கு விட்டுக்கொடுத்திருக்கிறோமோ அதுவே இதனை நிர்ணயிக்கிறது.

சரியான பாதையில் செல்வோர் விசுவாசத்தினாலே கிருபைக்கு கீழ்ப்பட்டு நீதியின் கனிகளைத் தரும் சீஷனாகவும், தவறான பாதையில் செல்வோர் மறுரூபமடையாத, வெறும் சடங்குகளைப் பின்பற்றும் கனியற்ற ஒரு மதவாதியாகவோ அல்லது பிரமாணங்களைப் பிடித்துக்கொண்டு கிரியைகளின் அடிப்படையில் நீதிமானாக துடிக்கும் பரிசேயனாகவோதான் உருவாவார்கள்

## ட்வீட் - 03

பாவம் செய்யாதே என்று திரும்பத் திரும்ப எச்சரிப்பதை விட, நீ பாவத்துக்கு மரித்தவன் என்பதை திரும்பத் திரும்ப நினைப்பூட்டுவதே பலன் தரும் பிரசங்கம்.

பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?
(ரோமர் 6:2)

## 4. ஏ மரமே கனிகொடு!

கனி என்பது ஒரு மரம் நல்ல மரமா, கெட்ட மரமா என்பதைக் காட்டும் அடையாளமாக இருக்கிறது. அதுபோலவே கிரியையும் ஒரு மனிதன் பாவியா, நீதிமானா என்பதைக் காட்டும் அடையாளமாக இருக்கிறது. ஒரு மனிதன் உள்ளே மாறாமல் வெளியே நீதியின் கிரியைகளை காட்டி மாய்மாலம் செய்ய முடியும். ஆனால் தேவன் அதனை விரும்பவில்லை. உள்ளார்ந்த மாற்றத்தின் மூலம் ஏற்படும் இயல்பான கனி கொடுத்தலையே அவர் எதிர்பார்க்கிறார்.

உள்ளார்ந்த மாற்றம் மனிதனின் சுய முயற்சியால் ஒருபோதும் வராது. லூக்கா 13:6-9 வசனங்களில் கர்த்தர் சொல்லும் உவமையில் “ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்” என்று சொல்லி மரத்துக்காக பரிந்து பேசும் அந்த தோட்டக்காரன், அடுத்த ஒரு வருஷமும் தினமும் அந்த மரத்திடம் போய் நின்று “ஏய் புத்தி கெட்ட மரமே கனிகொடு!, நன்றி கெட்ட மரமே கனிகொடு!” என்று சொல்லி அதை திட்டிக்கொண்டே இருக்கவில்லை. ‘கனிகொடாவிட்டால் உன்னை வெட்டிப்போடுவேன்” என்று சொல்லி அதை பயமுறுத்தவும் இல்லை. ஒருவேளை மரத்துக்கு பேசும் சக்தி இருந்தால் “வச்சுக்கிட்டா வஞ்சகம் பண்றேன்?” என்று நம்மில் பல விசுவாசிகளைப்போல தோட்டக்காரனிடம் திருப்பிக் கேட்டு கதறியழுது விடும்.

அந்த தோட்டக்காரன் என்ன செய்தான் பாருங்கள். அந்த மரத்தை அவன் ஒன்றுமே செய்யவில்லை, மாறாக அதைச் சுற்றி இருந்த நிலத்தை கொத்தி பண்படுத்தினான், மரத்துக்கு நல்ல உரம் இட்டான். அதை கண்ணும் கருத்துமாக பராமரித்தான். புத்தியுள்ள தோட்டக்காரன் செய்யும் வேலை அதுதான். விசுவாசிகளின் மனமாகிய நிலம் பண்படுத்தப்பட வேண்டும், நல்ல உரமான வேத வார்த்தையை அவர்களுக்கு ஊட்ட வேண்டும். பின்னர் கனிகொடுத்தல் தானாய் வரும்!

## ட்வீட் - 04

"பாவத்துக்கு பயப்படு" என்பதல்ல, "கிருபையில் பலப்படு" (2 தீமோ 2:1) என்பதே வேதத்தின் உபதேசம்!

## 5. நாம் ஏன் நெகட்டிவ் செய்திகளையே விரும்புகிறோம்?

பரலோகம், நரகம் குறித்த இரண்டு புத்தகங்களை உங்களிடம் கொடுத்தால் எதை முதலில் வாசிப்பீர்கள்? நாம் எல்லோருமே பரலோகத்துக்குத்தான் போக விரும்பினாலும், நாம் அதிகம் நரகத்தைக் குறித்த செய்திகளால்தான் ஈர்க்கப்படுகிறோமாம். காரணம் மனிதனது ஆழ்மனம் எதிர்மறை செய்திகள் மீதுதான் அதிக ஈர்ப்பு கொள்கிறது என்று ஒரு ஆய்வு சொல்லுகிறது.

நல்ல மதிப்பீடுகளை வளர்க்கும் செய்திகளை வாசிப்பதே நன்மை என்று நமது அறிவு சொல்லுகிறது. ஆனால் மனமோ 'கத்தியால் சதக் சதக்கென்று குத்தினான், கதறக் கதறக் கற்பழித்தான், டிசம்பருக்குள் பெரிய சுனாமி வந்து எல்லோரும் சாகப்போறோம்' டைப் செய்திகள் மீதுதான் நாட்டம் கொள்கிறதாம். ஒரு செய்திக்கு கீழ் இருக்கும் கமெண்ட்டுகளைப் படிக்கும் போதுகூட எதிர்மறை கமண்ட்டுகளைத்தான் நாம் தேடி வாசிக்கிறோம் என்று கண்டறியப்பட்டுள்ளது. காரணம் கேட்டால் 'நம்ம டிசைனே அப்படித்தான்' என்கிறார்கள் மனவியல் ஆராய்ச்சியாளர்கள்.

இதற்குக் காரணம் Survival Instinct, ஆதியில் குகையில் வாழ்ந்த மனிதன் கொடிய மிருகங்கள், விஷ ஜந்துக்களுக்கு பயந்து, நிம்மதியாக தூங்கக்கூட முடியாமல் ஒருவித எச்சரிக்கை உணர்வுடனேயே வாழ வேண்டியிருந்தது. இந்த பயத்தைத் தூண்டி, ஆபத்தை உணர்த்தி தன்னை பாதுகாத்துக்கொள்ள தூண்டுவது நமது மூளையில் இருக்கும் "அமைக்டலா" என்ற பகுதியாகும். இந்தப் பகுதியின் செயல்பாடே நமது மனம் எதிர்மறையான விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

கெட்ட செய்திகளை விரும்பும் எல்லோருக்கும் வேதம் தரும் நல்ல செய்தி என்னவென்றால், "கர்த்தர் நம்மைக் காக்கிறவர்" என்பதே! ஆண்டவருடைய சீஷர்கள் சென்ற படகு புயலில் சிக்கியபோது அவர்கள் படகில் தங்களுடன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருப்பதையும் மறந்து பயத்தில் அலறினார்கள். அதுபோலத்தான் நாமும் பல நேரங்களில் கர்த்தரை மறந்து சூழலைக் கண்டு நடுங்கிவிடுகிறோம். பயம் என்பது மனப்பிரச்சனைதான், கர்த்தரின் பாதுகாப்பின்மீது ஆழ்மனதில் பலமான விசுவாசம் இருக்கும்போது உங்கள் அமைக்டலா அதுவாக அடங்கிவிடும்.

சுற்றிலும் நாலாபக்கமும் ஆபத்துகளால் சூழப்பட்ட தாவீதுக்கு இருந்த விசுவாசத்தைப் பாருங்களேன்!

"கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர். நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார்.

நான் படுத்து நித்திரை செய்தேன்; விழித்துக்கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார்.எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம்பேருக்கும் நான் பயப்படேன்". (சங்கீதம் 3:3-6)

## ட்வீட் - 05

அப்போஸ்தலர் 19:
எதிராளிகள் நம்மை நோக்கி கர்ஜிப்பதற்குக் காரணம் நம்மீதுள்ள பயமாகவும் இருக்கலாம்.. எபேசு நகர மக்கள் ஒன்றுகூடி மணிக்கணக்கில், "எபேசியரின் தியானாளே பெரியவள்" என்று விண்ணதிர கோஷமிட்டது தியானாள் மீதிருந்த பக்தியினால் அல்ல, பவுல் மீதிருந்த பயத்தினால்! **சபையானது பாதாளத்தின் வாசல்களைப் பந்தாடிய காலங்கள் மறுபடியும் வரட்டும்.**

## 6. முறுமுறுப்பிற்கு எதிரான தடுப்பூசி

தன் கண்களை துணியால் இறுகக் கட்டிக்கொண்டு ஒரு புல்டோசர் வாகனத்தில் ஏறி அதை தாறுமாறாக முழு வேகத்தில் செலுத்தும் மனிதன் எப்படிப்பட்டவனோ அப்படியே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுப்பவனும் இருக்கிறான். அது எதிர்ப்படும் எண்ணங்களையெல்லாம் தகர்த்து நொறுக்கி தூளாக்கிவிட்டு இறுதியாக ஒரு மலையுச்சியில் போய் ஏறி நிற்கும். அந்த மலையுச்சி என்பது “தேவனை தூஷித்து, ஜீவனை விடு” என்ற சாத்தானின் ஆலோசனையே!

நான் சரியாகத்தான் இருக்கிறேன், கர்த்தர்தான் மாறவேண்டும் என்ற  சுயநீதி, சுய பெருமை மற்றும் சுய பரிதாபமே முறுமுறுப்பின் ஆணிவேர். கர்த்தருடைய அன்பை சந்தேகிப்பதே முறுமுறுப்பு, இது மகா மோசமான தொற்று வியாதி, எனவே இதற்கு சரியான தடுப்பூசி போடப்பட வேண்டும். கர்த்தர் நல்லவர், அன்பும் இரக்கமும் உள்ளவர், என்றும் மாறாதவர், வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர், நமது பலவீனங்களைக் குறித்து பரிதபிப்பவர் என்பது போன்ற தேவனைக்குறித்த சரியான, உயர்வான பிரசங்கங்களே முறுமுறுப்பிற்கு எதிரான தடுப்பூசி ஆகும். வேதத்தை தியானித்தும், அதுபோன்ற பிரசங்கங்களை அடிக்கடி கேட்டும் விசுவாசத் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு முறுமுறுக்கத் தெரியாது.

ஒரு ஊரில் கொடிய தொற்றுநோய் பரவும்போதுதான் தடுப்பூசி போடப்பட்ட பிள்ளைகளுக்கும், போடப்படாத பிள்ளைகளுக்கும் உள்ள வேறுபாடு தெரியும். முழு இஸ்ரவேல் சேனையும் கோலியாத்துக்கு முன்பாக நடுங்கிக் கொண்டிருந்தபோது விசுவாசத் தடுப்பூசி போடப்பட்டிருந்த தாவீது நிமிர்ந்து நின்றான் (1 சாமு 17), கானான் தேசத்தை உளவு பார்க்கச் சென்றவர்களில் யோசுவாவும், காலேபும் மட்டுமே விசுவாசத் தடுப்பூசி போடப்பட்டிருந்தவர்கள் (எண் 13,14). நீங்கள் கர்த்தரைக் குறித்த சரியான புரிதல் உள்ளவராக இருந்தால் இந்த முறுமுறுப்பு எனும் தொற்றுநோய் உங்களை அண்டாது.

## ட்வீட் - 06

விசுவாசிகளுக்குள்
ஏன் பிரிவுகள்?
என்று கேட்டேன்...
எல்லோரும்
ஏகமாய்ச் சொன்னார்கள்
"உபதேசமே பிரதானம்!
அதன் நிமித்தமே
பிரிந்திருக்கிறோம்"...

உபதேசமே
"ஏக சிந்தையாய் இருங்கள்"
என்றுதானே சொல்கிறது
என்று கேட்டேன்...

எவரிடத்திலும் பதிலில்லை.

## 7. கீழ் கோர்ட் vs மேல் கோர்ட்

ஒரே வழக்கிற்கான விசாரணை இருவேறு நீதிமன்றங்களில் நடக்கிறது. ஒன்று கீழ் கோர்ட், மற்றொன்று மேல் கோர்ட். கீழ்கோர்ட் நமக்குள்தான் இருக்கிறது அது குற்றவாளிக்கு தண்டனையை மட்டுமே வழங்கும். இதில் குற்றவாளியும், நீதிபதியும் மட்டுமே உள்ளனர். இதில் குற்றவாளி நாம்தான், நீதிபதி நமது சுயநீதி! பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால் (ரோம 3:20) அந்த நீதிபதி பிரமாணத்தை எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறாரோ அவ்வளவு கொடுமையான தண்டனையை வழங்குகிறார்.

இங்கே ஒரு பரிதாப நிலை என்னவென்றால் குற்றவாளிக்கும், நீதிபதிக்கும் நடுவே நின்று குற்றவாளிக்காக பரிந்து பேச ஒரு வக்கீல் இல்லை.

மேல்கோர்ட் பரலோகத்தில் உள்ளது. அங்கும் நாம்தான் குற்றவாளி, நீதிபதி பிதாவாகிய தேவன். ஆனால் அங்கு பரிகாரமாக சிந்திய இரத்தத்துடன் குற்றவாளிக்காக பரிந்து பேசக்கூடிய வக்கீல் ஒருவர் இருக்கிறார் (1 யோவா 2:1). அவர்தான் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து! அந்த அருமையான வழக்கறிஞரின் பரிந்துரையால் நமக்கு நிரந்தர விடுதலை கிடைத்தாயிற்று!

இந்த இரண்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகளும் நமது கையில் உள்ளது. இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? மேல் கோர்ட்டின் தீர்ப்பை முழு மனதோடு ஏற்றுக்கொண்டு, கீழ் கோர்ட்டின் தீர்ப்பை கிழித்து வீசிவிட்டு, நல்ல உறுதியான ஒரு பூட்டை வைத்து கீழ்கோர்ட்டை நிரந்தரமாக மூடி சாவியை கடலின் ஆழத்தில் வீசிவிட வேண்டும்.

நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம் என்று I கொரிந்தியர் 11:31 சொல்லுகிறதே சகோதரனே என்று கேட்டால், ஆம் நாம் நம்மை நாமே நிதானிக்கத்தான் வேண்டும். அந்த நிதானித்தலை கீழ் கோர்ட்டின் தீர்ப்பை கையில் வைத்துக்கொண்டு அல்ல,

மேல் கோர்ட்டின் தீர்ப்பை கையில் வைத்துக் கொண்டு செய்ய வேண்டும். ஏனென்றால் தண்டனையல்ல, மன்னிப்பே மனிதனை திருத்தும்!

## ட்வீட் - 07

எத்தனை முறை தேவன் தூக்கிவிட்டாலும் மீண்டும் மீண்டும் விழுந்து விடுகிறோமே என்று எண்ணி சோர்ந்து போவதைவிட, எத்தனை முறை விழுந்தாலும் தேவன் மீண்டும் மீண்டும் தூக்கி விடுகிறாரே என்று நன்றியோடு அவரைத் துதிப்பது நன்று

## 8. கவிதை: அடுத்த சபை அன்பர்களைப் பார்த்தால்...

அடுத்த சபை
அன்பர்களைப் பார்த்தால்
நமக்கு
உடனே தோன்றும்
உணர்வு என்ன?

அந்தச் சபையின் நினைவு
வருகிறதா அல்லது
சகோதர உணர்வு
வருகிறதா?

ஒதுங்கிச் செல்ல
நினைப்போமா?
அல்லது
உறவு சொல்லி
அணைப்போமா?

குறைகள் (வி)வாதித்து
பிரிவோமா?
அல்லது
கூடி ஆராதித்து
மகிழ்வோமா?

பகடி செய்யத்
தோணுமா?
அல்லது
பணிவிடை செய்யத்
தோணுமா?

சபைப் பிரிவுகள்
தவிர்க்க இயலாதது
ஆனால்...

சபையால் பிரிவுகள்
சகிக்க இயலாதது!

பிரசங்கப் பித்தத்தால்
பிணக்கம் வந்திருக்க
சிலுவை இரத்தத்தால்
இணக்கம் வாராதோ?

ஞானஸ்நானத் தண்ணீரால்
பிரிந்தோமே!
நேசரின் கண்ணீரால்
இணைவோமா?

தெளிப்பா? முழுக்கா?
வாதஞ் செய்தே
தெளிவுக்கு முழுக்குப்போட்ட
பேதமை உணர்ந்தோமா?

நாம் கண்ட
எழுப்புதல்கள்
சொற்பம்
அவற்றின் ஆயுளும்
அற்பம்

ஆனால்
நம் தகறாறுகளுக்கு
உண்டு
நூற்றாண்டு
வரலாறு!

வாரத்தில் ஒருநாள்
ஓய்ந்திருக்கக் கற்றோமே?
அந்த ஓய்வுநாள் எதுவென்ற
தர்க்கம் விட்டு ஓய்ந்தோமா?

ஆவியின் நிறைவு குறித்த
விந்தையான சர்ச்சைகள்
ஆவியில் நிறைந்திருந்தால்
சிந்தையில்தான் தோன்றுமோ?

இறைமகனுக்குள்ளும்
இறையியல்
பார்த்தோமே
இறையியலுள்
இறைமகனைப்
பார்த்தோமா?

உபதேசங்களுக்குள்
ஓரம்(extreme) போனோம்,
உறவிலே மொத்தமாய்
சோரம் போனோம்!

உபதேச பேதங்கள்
உள்ளொளி பெருக்கவோ?
அல்லது
உறவுகள் முறிக்கவோ?
முரண்களை
முறித்து விட்டுத்தான்
அன்பு செய்தல்
கூடுமோ?

ஏன்
அன்பு
செய்துகொண்டே
முரண்களை
முறிக்கலாமே?

## ட்வீட் - 08

நமக்கும் தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தன் ஒருவர் தேவையில்லை என்பதே புதிய ஏற்பாடு. ஊழியக்காரர்கள் சபைக்கு பணிவிடை செய்கிறவர்களேயன்றி நமக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தர்களல்ல.

தேவன் எழுப்பியிருக்கும் கணக்கற்ற ஊழியர்களுக்காக அவருக்கு நன்றி!

நாம் பொதுவாக ஊழியர்களை கனப்படுத்தவும், ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்...ஆனால் அவர்களில் சிலரிடம் மட்டுமே நமது ஜெபக்குறிப்புக்களை பகிர வேண்டும், அதிலும் சிலரிடம் மட்டுமே நமது தனிப்பட்ட விஷயங்களைப் பகிர வேண்டும், அதிலும் சிலருக்கு மட்டுமே நமது தலையில் கை வைத்து ஜெபிக்கும் உரிமை வழங்க வேண்டும், அதிலும் வெகு சிலரிடம் மட்டுமே நமது தனிப்பட்ட வாழ்வுக்குரிய ஆலோசனைகளைப் பெற வேண்டும். அப்படிப்பட்ட சரியான நபர்களைத் தெரிந்துகொள்ள நமக்கு ஓரளவாவது வேத அறிவும், நிதானிக்கும் கிருபையும் வேண்டும்.

எல்லோரிடமும் இணங்கிச் செல்லும் எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பது தவறு, யாரையும் ஏற்றுக்கொள்ளாத தனிக்காட்டு ராஜாவாக இருப்பதும் தவறு.

## 9. ஆராதனை செய்யமட்டுமல்ல, ஆளுகை செய்யவும்...

இந்தப் பதிவை சபை இன்றிருக்கும் நிலையை மனதில் கொண்டு வாசித்தால் உங்களால் ஜீரணிக்க முடியாது. சபை எப்படி இருக்க வேண்டுமோ அந்த நிலையில் நின்று வாசித்துப் பாருங்கள். அந்த நிலையை நாம் விரைவில் அடையத்தான் போகிறோம். நமது பெலத்தால் அல்ல, தேவ பெலத்தால்!

நான் இந்த பூமியில் பிரிவினையை உண்டாக்க வந்தேன் (லூக்கா 12:51) என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்னார். இங்கு பிரிவினை என்பதன் பொருள் பகையை ஏற்படுத்துதல் என்பதல்ல. ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்திடமிருந்து ஏதேனும் ஒரு காரணியின் (factor) அடிப்படையில் வேறு பிரிந்திருப்பது. இத்தகைய பிரிவினையை ஏற்படுத்துவது சாமானியர்களால் நடக்கக்கூடிய காரியமல்ல, யாரால் இந்த சமுதாயத்தில் ஒரு பெரிய தாக்கத்தை(influence) ஏற்படுத்த முடியுமோ அவர்களுக்கு மட்டுமே சாத்தியமானது. கர்த்தராகிய இயேசு தன் வாழ்நாளில் அப்படிப்பட்ட தாக்கத்தைத்தான் ஏற்படுத்தியிருந்தார், நம்மையும் அப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கும்படிக்கே அழைத்திருக்கிறார் (மத்தேயு 5:13,14).

ஊழல் கட்சியாக இருந்தால்கூடப் பரவாயில்லை என்று சகித்துக்கொண்டு இன்று அரசியலில் ஏதேனும் ஒரு கட்சியை சார்ந்து கொண்டு நிற்கும் நிலையில் இன்று சபை உள்ளது. ஆனால் இதுவல்ல தேவதிட்டம்! கட்சிகளைச் சார்ந்து சபையல்ல, சபையைச் சார்ந்தே கட்சிகள் என்ற நிலைக்கு தேசத்தின் அரசியல் களம் தலைகீழாகப் புரளவேண்டும். சபையின் பக்கம் நிற்கும் கட்சிகள், சபைக்கு எதிராக நிற்கும் கட்சிகள் என்று அரசியல் உலகமானது சபையை மையமாகக் கொண்டு பிரியும் சூழல் ஏற்பட வேண்டும். இது எப்படி சாத்தியம்? நாம் ஆத்தும ஆதாயத்தையும், தேவனை ஆராதிப்பதையும் விட்டுவிட்டு அரசியல் செய்ய வேண்டுமா? நிச்சயமாக இல்லை… தேவ ராஜ்ஜியத்தின் தாக்கம் சமுதாயத்தின் தேசத்தின் கல்வி, கலை, வணிகம், அரசியல், பண்பாடு அனைத்து மட்டங்களிலும் வலுவாகப் பிரதிபலிக்கும் நிலை வரும்போது இம்மாற்றம் தானாக நிகழும். அதற்கான வாய்க்காலாக நம்மைத்தான் தேவன் வைத்திருக்கிறார்.

விசுவாசிகள் என்றால்; ஏதோ பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு, இந்த உலகை விட்டு பிரிந்து ஏதோ ஒரு மூலையில் கூனிக் குறுகி வாழ்ந்துவிட்டு மரணம் வந்தவுடன் பரலோகம் சென்று சேரும் மந்தையல்ல, பரலோக அரசரின் பூலோக அலுவலகமே சபை என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்? ஆளுகை சட்டப்படி நம்மிடம் திரும்பி 2000 ஆண்டுகள் ஆகிவிட்டது. நாம் இன்னும் (அறிவில்) குழந்தைகளாக இருப்பது மட்டுமே இங்கு பிரச்சனை. அரச குடும்பத்துக் குழந்தை வளர்ந்து இளைஞனாகும்போது அவன் தானே சென்று அரியணையை சுதந்தரித்துக் கொள்வான். வேத வசனமாகிய ஞானப்பாலைக் கொடுத்து குழந்தைகளை குமரர்களாக வளர்த்தெடுக்கும் பொறுப்பே இன்றைய போதகர்களுக்கு பிரதானமாக கையளிக்கப்பட்டிருக்கிறது.

“உன் எதிரி உன் தேசத்தை ஆள்கிறான்” என்று ஒரு அரச குடும்பத்துப் பிள்ளைக்கு அறிவிப்பது “அவன் ஆளுகையை ஏற்றுக்கொள்” என்று கற்றுக் கொடுப்பதற்காக அல்ல, அவனிடமிருந்து உன் உரிமைச் சொத்தாகிய இராஜ்ஜியத்தைப் பிடுங்கிக்கொள் என்று உலுக்கி விடுவதற்கே! அப்படித்தான் “இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது” என்ற வசனமும் “உனக்குரிய ஆளுகை அந்தகார அதிபதிக்குப் போய் விட்டது எனவே நீ ஒதுங்கி வாழு” என்று அமர்த்தி வைக்கும் நோக்கில் அல்ல, “தூசியை உதறிவிட்டு எழும்பு!” என்று தூக்கிவிடும்படிக்கே எழுதப்பட்டிருக்கிறது!

நாம் ஆராதனை செய்யமட்டுமல்ல, ஆளுகை செய்யவும் அழைக்கப்பட்டவர்கள்! இதன்மூலம் கர்த்தருடைய பிள்ளைகள் அரசியலில் இறங்க வேண்டும், அல்லது பதவிகளுக்கு வர வேண்டும் என்று கூறவில்லை என்பதை மறுபடியும் கூறுகிறேன், அரசியலில் ஆர்வமுள்ள தேவபிள்ளைகள் தேவ பெலத்தோடு அதில் இறங்கினால் நல்லதுதான், அப்படி அநேகரை கர்த்தர் எழுப்புவாராக! ஆனால் இக்கட்டுரையின் மையப்பொருள் நாட்டின் அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக சபை மாற வேண்டும் என்பது மாத்திரமே. சினிமாவுக்கும், அரசியலுக்கும் என்ன சம்பந்தம்? இந்த தேசத்தில் சினிமா எப்படி அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக விளங்குகிறது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்! தேசத்தை ஆளும் தலைவர்களும் அதிகாரிகளும் சபையிடம் ஆலோசனை பெற்ற பிறகே சட்டங்களை நிறைவேற்றும் நிலை வர வேண்டும். வேதாகமத்தின் நியாயாதிபதிகளும், தீர்க்கதரிசிகளும், இவ்வளவு ஏன், சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்கூட ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் பியூரிட்டன்கள் என்கிற பக்தர்களின் கூட்டம் அப்படித்தான் அரசியலில் ஒரு மாபெரும் தாக்கத்தை ஏற்ப்படுத்தியிருந்தார்கள்.

தேவன் சபையைப் பிரகாசிப்பிக்கும் நாள் ஒன்று வரும், அப்போது நாமும் மோசே போல நிமிர்ந்து நின்று உலகத்தை நோக்கிப் பார்த்து “கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் எம்மிடத்தில் சேரக்கடவர்கள் (யாத் 32:26)” என்று வைராக்கியமாக அறிவிக்கும் நாளில் நல்லொதொரு பிரிவினையை உலகில் உண்டாக்கும் மாபெரும் காரணியாக இருப்போம். ஏழை எளியவர்களின் நியாயம் புரட்டப்படுவதையும், நீதி மரித்துப் போனதையும், நயவஞ்சகர்களும் அடிமைகளும் நாட்டை ஆள்வதை எத்தனை நாள்தான் பொறுத்துக் கொள்வது?

நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டுவரக்கடவது (ஆமோஸ் 5:24 )

## ட்வீட் - 09

ஆவிக்குரிய வாழ்வில் கற்கக் கற்க தாழ்மை வளருகிறதெனில் அது வளர்ச்சி, பெருமை வளருகிறதெனில் அது வீழ்ச்சி!

## 10. கிறிஸ்துவுக்குள் நாம் யார்?

கிறிஸ்துவுக்குள் திருமுழுக்கு பெற்றவர்கள். ( ரோமர் 6:3)
பாவத்திற்கு மரித்து, கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்கள். (ரோமர் 6:11)
கிறிஸ்துவுக்குள் சக விசுவாசிகளோடு ஒரே சரீரமாக இருக்கிறவர்கள். (ரோமர் 12:5)
கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள் ( 1 கொரி 1:2)
கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள். (1 கொரி 15:22)
கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள். ( 2 கொரி 1:21)
கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறந்தவர்கள். (2 கொரி 2:14)
கிறிஸ்துவுக்குள் புதுபடைப்பானவர்கள். ( 2 கொரி 5:17)
கிறிஸ்துவுக்குள் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டவர்கள். (2 கொரி 5:19)
கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாக இருக்கிறவர்கள். (2 கொரி 5:21)
கிறிஸ்துவுக்குள் தன்னுரிமை(சுயாதீனம்) பெற்றவர்கள் (கலா 2:4)
கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். (எபே 1:3)
பிதாவுக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்காக உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். ( எபே 1:4)
கிறிஸ்துவுக்குள் பிதாவுடைய சுதந்திரவாளிகள். (எபே 1:12)
கிறிஸ்துவுக்குள் தைரியத்தோடும் திடநம்பிக்கையோடும் பிதாவிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றவர்கள். ( எபே 3:12)
வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் கிறிஸ்துவுக்குள் முத்திரைபோடப்பட்டவர்கள். (எபே 1:13)
கிறிஸ்துவுக்குள் பிதாவினிடத்தில் இரக்கம் பெற்றவர்கள். (எபே 2:6)
கிறிஸ்துவுக்குள் அவருடைய இரத்தத்தினாலே பிதாவுக்கு சமீபமானவர்கள். (எபே 2:13)
கிறிஸ்துவுக்குள் பிதாவானவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகள். (எபே 3:3)

கிறிஸ்துவுக்குள் பிதாவால் மன்னிக்கப்பட்டவர்கள். (எபே 4:32)
கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிறவர்கள். (கொலோ 1:2)
கிறிஸ்துவுக்குள் வேர்கொண்டவர்கள், அவர்மேல் கட்டப்பட்டவர்கள். (கொலோ 2:6)
கிறிஸ்துவுக்குள் பரிபூரணமானவர்கள். (கொலோ 2:10)
கிறிஸ்துவுக்குள் (கையால் செய்யப்படாத) விருத்தசேதனம் பெற்றவர்கள். (கொலோ 2:11)
கிறிஸ்துவுக்குள் பிதாவின் நித்திய மகிமைக்கு அழைக்கப்பட்டவர்கள். (1 பேதுரு 5:10)

பிரியமானவர்களே! நமக்கு தேவனால் கிடைத்த சகலமும் கிறிஸ்துவின் மூலமே கிடைத்தது. அவரன்றி நமக்கு பிதாவோடு பங்கில்லை. கிறிஸ்துவுக்கு வெளியே நமக்கு ஒன்றுமில்லை. கிறிஸ்துவுக்கு வெளியே மனிதனுக்கு மிஞ்சியிருப்பது நரகாக்கினை மட்டுமே!

இதை வெறுமனே வாசிப்பதோடு நிறுத்தாமல் அந்தந்த வேதபகுதியின் முழுமையையும் வாசித்து, ஆவியானவரின் ஒத்தாசையுடன் தியானிக்கும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

### ட்வீட் - 10

கர்த்தருடைய கிருபை நம்மேல் இருக்கிறது என்ற விசுவாசம் நாம் பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ளும்படி நம்மை தைரியமாக கிருபாசனத்தண்டை சேர வைக்கும், இயேசுவின் நீதி என்மேல் இருக்கிறது என்ற விசுவாசமோ நாம் பழையபடி மாம்சத்தின்முன் மண்டியிட்டுவிடாதபடி நம்மைத் தற்காக்கும். இரண்டாவதை நாம் பெரும்பாலும் மறந்து விடுகிறோம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்!

## 11. பரலோகத்துக்கு டிக்கெட் விற்கும் வெப்சைட்

வித்தியாசமாக யோசிக்க எல்லாராலும் முடியும். ஆனா அதை வியாபாரமாக்கி காசாக்கும் திறமை சிலருக்குத்தான் இருக்கும். எல்லோரும் பயணத்துக்கு டிக்கெட் விக்கிறமாதிரி நாம பரலோகத்துக்கு டிக்கெட் வித்தா என்னங்கிற பலே ஐடியா ஒருவர் மனதில் தோன்றியதன் விளைவுதான் lineforheaven.com என்ற இணையதளம்.

The first religion-based Web 2.0 site in history என்ற அறிவிப்புடன் எக்கசக்கமான ஆட்களை மெம்பராக சேர்த்துக் கொண்டிருக்கிறது இந்த இணையதளம். இந்த தளத்தில் கொடுத்திருக்கும் சில டாஸ்குகளை நீங்கள் செய்தால் உங்களுக்கு கர்மா பாயிண்ட்டுகள் கொடுக்கப்படும். நீங்கள் நன்கொடை கொடுத்தும் கர்மா பாயிண்ட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு டாலருக்கு 10 பாயிண்ட்டுகள் கிடைக்கும். அதிலும் தசமபாகம்  கொடுத்தால் கர்மா பாயிண்ட்டுகள் வாரி வழங்கப்படும்.

உங்கள் கர்மா பாயிண்ட்டுகள் அதிகரிக்க அதிகரிக்க நீங்கள் பரலோக வரிசையில் வரிசையில் மேலும் மேலும் இறைவனுக்கு அருகாமையில் முன்னேறிச் செல்லுவீர்கள். தற்சமயம் பிஜே என்ற பெண்மணி 23836 கர்மா பாயிண்ட்டுகளுடன் கடவுளுக்கு மிக அருகாமையில்(!) நின்று கொண்டிருக்கிறார்.

இதற்கிடையே இந்தத் தளம் தனது உறுப்பினர்களைக் கொஞ்சம் தானதர்மமும் செய்ய வைக்கிறது. அதற்கும் நிறைய கர்மா பாயிண்ட்டுகள் உண்டு. இங்குதான் சூட்சுமமும் இருக்கிறது. ஏழை எளியோருக்கு, நோயுற்றோருக்கு, மாற்றுத் திறனாளருக்கு செய்யும் சேவைகள் நமக்கு தானாகவே இறையருளைக் கொண்டு வந்து சேர்க்கும் என்பது பொதுவான ஆவிக்குரிய விதி. இறையருள் பெருக வாழ்வில் நன்மைகளும் நடக்கும்.

நன்மைகள் நடக்கும்போது "நீ பெற்ற கர்மா பாயிண்ட்டுகளால்தான் நன்மைகள் நடக்கிறது" என்பதை மட்டும் மக்களை நம்பவைத்து விட்டால் போதும். காலம் முழுவதும் அவர்களை தனது கட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம். கொஞ்சம் மதக் கருத்துக்களும், நிறைய மனவியலும் தெரிந்தால் மக்களை எளிதில் ஏமாற்றி வசப்படுத்திக் கொள்ளலாம் என்பதை மதவாதிகள் மீண்டும் மீண்டும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள் (மத்தேயு 24:11) என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கடைசி நாட்களைக் குறித்து எச்சரித்து முன்னுரைத்த தீர்க்கதரிசனங்கள் நம் கண் முன்னே நிறைவேறி வருவதைக் காண்கிறோம்!

### ட்வீட் - 11

தானியேல் இருந்தது அசுத்த பாபிலோன்
செய்ததோ மகத்தான ஊழியம்
ஓப்னி, பினகாஸ் இருந்ததோ பரிசுத்த தேவாலயம்
ஆனால் செய்ததெல்லாம் அட்டூழியம்
இருக்கும் இடமல்ல
இருதயமே தீர்மானிக்கிறது.

## 12. ஆயத்தம்

ஒரு நாட்டின் பேரரசர் மிகவும் கனம் பொருந்தியவராகிய தன்னுடைய குமாரனுக்கு ஒரு பெண்ணை திருமணத்துக்கென்று நியமிக்கிறார். நியமிக்கப்பட்ட பெண் இளவரசருக்கு சற்றும் ஏற்றவளல்ல. பேதமை நிறைந்தவள், பெலவீனமுமுள்ளவள். ஆனாலும் அவள் மீது கொண்ட அன்பு மற்றும் இரக்கத்தின் மிகுதியால் பேரரசரும் இளவரசரும் அவளைத் தகுதிப்படுத்தி, தங்கள் குடும்பத்தில் இணைத்துக்கொள்ள சித்தம் கொண்டனர்.

நிச்சயிக்கப்பட்ட நாளுக்கும், திருமண நாளுக்கும் இருக்கும் இடைவெளியில் அரச குடும்பத்திற்கு ஏற்றவளாக மணப்பெண்ணை தகுதிப்படுத்தும்படி தம்முடைய பிரதிநிதி (ஆவியானவர்) ஒருவரை பேரரசர் ஏற்படுத்துகிறார். பயிற்சிகள் கொஞ்சம் கடினமாக இருந்தாலும் மணப்பெண் ஒத்துழைத்தால் பெலவீனத்திலிருந்து பேராற்றலுக்கும், பேதமையிலிருந்து மேதமைக்கும் அவளை உயர்த்துவது அந்த பிரதிநிதிக்கு எளிதான காரியம்தான். ஆனால் அந்தப் பெண் தனது மதியீனத்தால் அவ்வப்போது மேற்கொள்ளும் ஒத்துழையாமை போராட்டங்கள் அவளது முன்னேற்றத்தை தாமதிக்கச் செய்கிறது.

மணமகன் தனது அன்பின் மிகுதியால் அவ்வபோது அனுப்பித்தரும் விலையுயர்ந்த வெகுமதிகள் மட்டும் அவளுக்கு இனிக்கிறது. ஆனால் பயிற்சிகளோ ரொம்பவே கசக்கிறது. ஆளுகை செய்ய வளர்ச்சியும் பக்குவமும் தேவை, எனவே அதை அடைந்தாக வேண்டும் என்ற வேட்கையும், அந்த வெகுமதிகளைவிட தான் விரைவில் அணியப்போகும் மணி மகுடம் எவ்வளவு உயர்ந்தது என்ற அறிவும் மாத்திரம் அவளுக்கு இருக்குமானால் அவளே தன்னை இன்னும் விரைவாய் பயிற்றுவிக்கும்படி அந்தப் பிரதிநிதியை துரிதப்படுத்திவிடுவாள்.

அவள் வருகைக்காக அரச குடும்பம் ஆவலுடன் காத்திருக்கிறது. மணமகனும்தான்!

## ட்வீட் - 12

வேதம் சொல்லுகிறபடி நல்ல உபதேசம், கள்ள உபதேசம் என்று இருவகை உபதேசங்கள் உண்டு என்பது நமக்குத் தெரியும். ஆனால் இந்தக் கடைசி நாட்களில் எல்லாப் பிரசங்கிமார்களுமே ஒருவரையொருவர் கள்ள உபதேசிகள் என்று வேத ஆதாரங்களை வைத்தே குற்றம் சாட்டிக்கொண்டு மக்களை குழப்புகிறபடியால் நாம் தெளிந்த புத்தி தரும் ஆவியானவரைச் (2 தீமோ1:7 ) சார்ந்து கொள்ள வேண்டியதன் அவசியம் பல மடங்கு அதிகரித்துள்ளது.

## 13. பயமறியா தேவமனிதன்!

ஒரு தேவமனிதன் இரத்த சாட்சியாக மரிப்பதற்குப் பின்புலத்தில் பல கோழைகளின் தொடை நடுக்கம் இருக்கிறது.

முதலாவதாக சாத்தான் என்கிற தொடைநடுங்கி, தேவனுடைய மனிதர்களைக் கண்டு மட்டுமல்ல அவர்களுடைய வித்தைக் கண்டுகூட நடுங்குகிறவன். எகிப்திலே யூத குழந்தைகள் கொல்லப்பட்டது, ஆண்டராகிய இயேசு பிறப்பின்போது யூதேயாவின் குழந்தைகள் அழிக்கப்பட்டது, இப்படி கிரகாம் ஸ்டெயின்ஸின் பிஞ்சுப் புதல்வர்கள் பொசுக்கப்பட்டது வரை சரித்திரம் நீள்கிறது. தனது அதிகாரத்தை ஆட்டங்காணச் செய்யும் வல்லமை தேவனோடு இணைந்த ஒரே ஒரு சாதாரண தனி மனிதனுக்குக்கூட உண்டு என்பதை அவன் அறிந்திருக்கிறான். அந்த பயம் இருக்கட்டும்!

அடுத்ததாக மிருகம் போட்ட அதிகாரப் பிச்சையில் கோலோச்சிக்கொண்டிருக்கும் ஏரோது போன்ற கோழைகள். அதிகாரம் பறிபோய்விடுமோ என்று தங்கள் எஜமானனுக்கு இருக்கும் அதே பயம்!

தேவமனிதன் பேசும் சத்தியத்துக்கு நிகரான ஆயுதம் ஏதுமற்ற வெறுங்கையர்கள். இவர்களுக்கு சத்தியம் புரிகிறதோ இல்லையோ ஆனால் தங்கள் ஆளுகைக்கு முற்றிலும் முரணான இறையரசின் தொனி இது என்பது மட்டும் அவர்களுக்குப் புரியும். தனக்கு ஆளுகையைத் தந்த மத அதிகாரத்துக்கு முரணாக இருக்கும் விசுவாசத்தை வளரவிட்டால் தனது அரியணை பறிபோகும் என்ற பயம்! அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் கொலை செய்வது மாத்திரமே! கோழைத்தனத்தின் உச்சம்!

அடுத்ததாக கொலையை நிகழ்த்தும் ஏவலாளிகள், தங்கள் எஜமானனின் கையசைவுக்கு கட்டுப்பட்டு ஓடிப்போய் எதிரியை குதறிவிட்டு வரும் வேட்டை நாய்கள். அதிகார யெசெபேல்கள் கண்ணசைத்தால் அப்பாவி நாபோத்தின் குடும்பத்தைக்கூட பீறிப்போடுவார்கள். இது பிழைப்பிற்கான வழி, இல்லாவிட்டால் அடுத்த வேளை அப்பம் கிடைக்காதோவென்ற பயம்! நேர்மையான வழியில் வாழ்க்கையை சந்திக்க துணிவற்றவர்கள்! கேடுகெட்ட பிழைப்பு!

பயமற்றவன் தேவமனிதன்!
பிழைப்பைக் குறித்து பயமில்லை, போஷிக்கிறவர் கர்த்தர்
இழப்பைக் குறித்து பயமில்லை, மீட்டுத் தருகிறவர் கர்த்தர்
ரணத்தைக் குறித்து பயமில்லை, குணமாக்குகிறவர் கர்த்தர்
மரணத்தைக் குறித்தும் பயமில்லை, உயிர்ப்பிக்கிறவர் கர்த்தர்
இவனை பயமுறுத்தவோ, பிடித்து வைக்கவோ எதுவுமில்லை!
பயம் இவ்வுலகுக்குரியது, இவன் உலகுக்குரியவனில்லை!

### ட்வீட் - 13

மரணம் என்பது உயிரிழத்தல் அல்ல, உடலிழத்தல். சரிதானே?

## 14. ஓநாய் வார்த்தைகள்

ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் மனிதர்களாக இருக்க வேண்டுமென்பதில்லை, அவை வார்த்தைகளாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட வார்த்தைகளில் சில கீழே:

என்னுடைய ஜெபம்
என்னுடைய ஊழியம்
என்னுடைய உபவாசம்
என்னுடைய பரிசுத்தம்
என்னுடைய விசுவாசம்
என்னுடைய தாலந்து
என்னுடைய பிரசங்கம்
என்னுடைய கீழ்படிதல்
என்னுடைய பாடுகள்
என்னுடைய அபிஷேகம்

மேற்கண்ட வார்த்தைகளில் "என்னுடைய" என்பது சுயம் என்கிற ஓநாய், அதோடு இணைந்த ஆவிக்குரிய வார்த்தைகள் ஆட்டுத்தோல்கள். இவ்வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் தவிர்க்க இயலாது, ஏதோ ஒரு சூழலில் சரியான பிரயோகத்துக்காகப் பயன்படுத்துவது என்பது வேறு. வேதாகமப் பரிசுத்தவான்கள்கூட மேற்கண்ட வார்த்தைகளை பல இடங்களில் சரியான நோக்கத்தோடு பயன்படுத்தியிருக்கிறார்கள்.

எனவே இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவோரெல்லாம் பெருமைக்காக பயன்படுத்துவார்கள் என்பது அர்த்தமல்ல, ஆனால் பெருமைக்காரரெல்லாம் அடிக்கடி இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவார்கள்.

### ட்வீட் - 14

உலகத்தார் வாழ்ந்து முடிப்பதற்குப் பெயர் "வாழ்க்கை", ஆவிக்குரியவன் வாழ்ந்து முடிப்பதற்குப் பெயர் "சாட்சி"

## 15. கண் முன்னே நடக்கும் ஒத்திகை

வெளியே ஆன்மீகத்தை வைத்து அரசியல் செய்கிறார்கள். நாம் அரசியலை வைத்து கொஞ்சம் ஆன்மீகம் செய்வோம் வாருங்கள்.

இந்த உலகம் சாத்தான் கையில் இருக்கிறது. ஆனாலும் அவன் கையில் நேரடியாக ஆட்சி இல்லை. அவன் உலகம் முழுவதும் தனது பொம்மை அரசாங்கங்களை நிறுவி ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் தீர்க்கதரிசனங்களின்படி இறுதி நாட்களில் சாத்தானின் நேரடி பிரதிநிதியான அந்திகிறிஸ்துவின் (Anti Christ) கைக்கு ஆட்சி வரவேண்டும். அந்திகிறிஸ்துவை அவனால் வலிந்து திணிக்க முடியாது, மக்களே அவனை தங்கள் தலைவனாக ஏற்றுக்கொள்ளும் நிலையை கொண்டுவர வேண்டும்.

அதற்காக அந்த பொம்மை அரசாங்கங்களுக்கு கட்டளை விதிக்கப்படுகிறது. மக்களை எவ்வளவு வெறுப்பேற்ற வேண்டுமோ அவ்வளவு வெறுப்பேற்றும் வேலை அவர்களுக்குத் தரப்படுகிறது. மக்கள் ஆட்சியாளர்களால் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். நீதிக்காக கதறும் மக்களுக்கு நக்கலான பதில்களையே ஆட்சியாளர்கள் தருகிறார்கள். எதிர்ப்பவர்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படுகிறார்கள். இவற்றைப் பார்க்கும் மக்கள் பயத்தில் ஆழ்கிறார்கள். நமக்கான இரட்சகன் வரமாட்டானா என்று மக்கள் ஏங்கித் தவிக்கிறார்கள். அப்போது சாத்தான் அனைத்து மக்களாலும் விரும்பப்படும், உட்சபட்ச நம்பிக்கை நட்சத்திரமாக ஏற்றுக்கொள்ளப்படும் தனது ஏஜண்ட்டான அந்திகிறிஸ்துவை களமிறக்குகிறான். மக்களிடம் அவனைக் கொண்டு சேர்க்கும் பணியை சாத்தானின் வாயாக செயல்படும் கள்ளத் தீர்க்கதரிசி (மீடியா) செய்து முடிக்கிறான். மக்கள் அவனை தங்கள் அதிபதியாக ஏற்றுக்கொள்ளுகிறார்கள். மிருகத்தின் முத்திரையுடன் அந்திகிறிஸ்து அரியணையில் அமர்கிறான்.

கர்த்தர் தமிழர்களை மிகவும் நேசிக்கிறார். 12 சீடர்களில் ஒருவரான தோமாவை நம்மிடம்தான் அவர் அனுப்பினார். ஆசிய மொழிகளிலேயே தமிழில்தான் முதன் முதலில் வேதாகமம் அச்சிடப்பட்டது. நமது கண் முன்னே கடைசி காலத்துக்கான ஒரு Demo ஓடிக்கொண்டிருக்கிறது. எச்சரிக்கை! மனந்திரும்புங்கள்.

நம் கண்முன்னே தமிழகம் உட்பட உலகெங்கும் ஒத்திகை நடந்து கொண்டிருக்கிறது. மெயின் பிக்சர் விரைவில்...

இயேசுவின் வருகை வெகு சமீபம். அவரை சந்திக்க ஆயத்தமாகுங்கள்!

## ட்வீட் - 15

உலகத்தின் வசம் திரும்பும் போதெல்லாம் உள்ளத்துக்குள் ஒரு யுத்தம் மூளுகிறதென்றால் கர்த்தர் நம் மீது அவ்வளவு உரிமை கோருகிறார் என்று அர்த்தம்

## 16. சாகாவரம் பெற்ற மீன்

சாகாவரம் பெற்றவர்களைப் பற்றி புராணக் கதைகளில் படித்திருக்கிறோம். The Epic of Gilgamesh என்ற பண்டைய மெசபடோமிய புராண நூலில் “சாவை வெல்லும் இரகசியம் கடலுக்கடியில் உள்ள பவளப்பாறைகளில் ஒளிந்துள்ளதாக” உட்னாபிஸ்டிம் என்பவர் கில்காமேஷிடம் கூறுவதாக செய்தி ஒன்று உள்ளது.

அதிசயவிதமாக கடந்த 1990-களில் மத்தியத் தரைக்கடலில் பவளப்பாறைகளிடையே வாழும் சாகாவரம் பெற்ற ஜெல்லி மீன் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

டரிடாப்ஸிஸ் நியூட்ரிகுலா என்ற இந்தவகை ஜெல்லி மீன்கள் ஆபத்து காலத்தில் தனது உடல் செல்களை புதுப்பித்து, மீண்டும் மீண்டும் தன்னை இளமையாக்கிக் கொள்ளும் ஆற்றலுள்ளது. எனவே இவை மூப்படைந்து உயிரிழக்கும் வாய்ப்புகள் இல்லை. இந்த அரிய ஆற்றல் உலகில் வேறு எந்த உயிரினத்திடமும் இல்லையாம்.

இந்த ஜெல்லி மீன் வெறும் 5 மில்லிமீட்டர் நீளம் மட்டுமே உள்ளது. என்னதான் சாகாவரம் பெற்றாலும் ஏதேனும் பெரிய காயம்பட்டாலோ அல்லது பெரிய மீன்களின் வாயில் சிக்கினாலோ ஆயுள் அம்பேல் என்பது வேறு விஷயம், இதன்மூலம் மரணம் எல்லா உயிர்களுக்கும் ஏதோ ஒரு வழியில் வந்தே தீரும் என்பதும் மெய்பிக்கப்படுகிறது.

இந்த சாகாவர இரகசியத்தை மனிதர்களிடம் பயன்படுத்த முடியுமா என்று ஆய்வுகள் நடந்து வருகிறதாம். மனிதனுக்குத்தான் இந்த பூமியிலேயே நிரந்தரமாகத் தங்கித் தாபரிக்க எவ்வளவு ஆசை பாருங்கள்! ஆனால் கிறிஸ்துவால் மீட்கப்பட்ட நமக்கோ நிலையான நகரம் இங்கு இல்லை (எபிரேயர் 14:13) என்று வேதம் சொல்லுகிறது.

அப்படியே பூமியிலேயே நிரந்தரமாக தங்க வாய்ப்பிருந்தாலும் அந்த வாழ்க்கை மகா வெறுமையானதாகத்தான் இருக்கும். தேவனுடைய பிரசன்னத்தைப் போல நித்திய நித்தியமாக நம்மை மகிழ்விக்கும் விஷயம் எதுவும் இங்கு இல்லை. எனவேதான் பவுல் போன்ற தேவமனிதர்கள் சீக்கிரம் இந்த பூமியைவிட்டு பரலோகம் சென்று சேர ஏங்கினார்கள்.

தேகத்தைவிட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும் அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (பிலிப்பியர் 1:24)

நம்முடைய விருப்பம் எப்படி இருக்கிறது? பரலோகமே! என் சொந்தமே என்று காண்பேனோ என்ற ஏக்கம் நமக்குள்ளும் இருக்கிறதா? அல்லது இந்த உலகத்தின் மாய சுகங்களில் கட்டுண்டு கிடக்கிறோமா?

## ட்வீட் - 16

"கிருபையின் காலம்" என்பது தேவன் இதுவரை பாவிகள் மீது ஊற்றிய சினத்தை கொட்டாமல் தற்காலிகமாக அடக்கி வைத்திருக்கும் காலம் அல்ல, ஜனங்களின் பாவத்தின் நிமித்தம் அவர்கள் மீது ஊற்ற முடியாமல் அடக்கி வைத்திருந்த தனது பேரன்பை இயேசுவின் சிலுவை வெற்றியால் திறந்த கதவின் வழியாக அளவில்லாமல் பொழியும் காலம். அப்பாவைக் குறித்த தப்பெண்ணங்கள் களைவோம்!

## 17. ஆண்டவரே என்னைக் குறித்து என்ன?...

அவர் அந்த நகரத்தின் மிக பிசியான பிரசங்கியார். அவரது பிரசங்கங்களால் பயனடைந்தோர் ஏராளம். பிரசங்கம் பண்ணுவது அவர் இரத்தத்தோடு கலந்துபோனது. அவருக்கு ஒருநாள் ஒரு ஊழியக்காரர்களுக்கான கூட்டத்தில் பேச வேண்டிய வாய்ப்பு வந்தது. ஊழியர்களுக்கான கூட்டமாதலால் அதற்காக சற்று சிரத்தையெடுத்து ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அதற்காக ஆயத்தமாகும்படி அவர் தேவ சமூகத்தில் உட்காந்து, ஆண்டவரே நான் இந்த கூட்டத்தில் என்ன பிரசங்கிக்க விரும்புகிறீர் என்று ஜெபித்த போது ஆவியானவர் பேச ஆரம்பித்தார், “எவ்வளவு காலம் அடுத்தவருக்கு பிரசங்கிப்பதிலேயே நேரம் செலவிடுவாய்? நான் உன்னைக் குறித்தும் அதிக கரிசனையோடிருக்கிறேன். உன்னைக் குறித்தும் உனது ஆவிக்குரிய வளர்ச்சிகுறித்தும் நீ அதிக சிரத்தையெடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன், உன் படகு மூழ்கிக்கொண்டிருக்கிறது…எச்சரிக்கையாயிரு!” என்றார்.

“ஆண்டவரே என்னைக் குறித்து என்ன?…” என்ற தலைப்பில் அதுவே அந்த கூட்டத்தின் மையக்கருத்தானது. பிரசங்கத்தைக் கேட்ட ஊழியக்காரர்களிடம் மிகுந்த அசைவு ஏற்பட்டது. பலரும் தங்களை முதலாவது சரிசெய்து கொள்ளும்படி தேவனிடம் ஒப்புக்கொடுத்தனர். பிரசங்கியாரோ தனது ஊழியங்களில் தொடர்ந்து பிசியாக இருந்தார்.

ஒரு சில வாரங்கள் குறித்து இன்னொரு கூட்டத்துக்காக பிரசங்கத்துக்கு ஆயத்தமாகும்படி அவர் தேவ சமூகத்தில் உட்காந்து, ஆண்டவரே நான் இந்த கூட்டத்தில் என்ன பிரசங்கிக்க விரும்புகிறீர் என்று ஜெபித்த போது ஆவியானவர் பேச ஆரம்பித்தார், “எவ்வளவு காலம் அடுத்தவருக்கு பிரசங்கிப்பதிலேயே நேரம் செலவிடுவாய்? நான் உன்னைக் குறித்தும் அதிக கரிசனையோடிருக்கிறேன். உன்னைக் குறித்தும் உனது ஆவிக்குரிய வளர்ச்சிகுறித்தும் நீ அதிக சிரத்தையெடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன், உன் படகு மூழ்கிக்கொண்டிருக்கிறது… எச்சரிக்கையாயிரு!” என்றார்.

பிரசங்கியார், ஜெபத்தில் இடமறித்தார்…நன்றி ஆண்டவரே! இந்த செய்தியை சில வாரங்களுக்கு முன்புதான் பிரசங்கித்தேன்? தயவு செய்து வேறு டாபிக் தாரும் …

## ட்வீட் - 17

பரிசேயனுக்குக்குள்ளது மதவைராக்கியம், சாவிலும் கொடியது
சீஷனுக்குள்ளது நேசவைராக்கியம், சாவிலும் வலியது

## 18. காற்றில் மிதக்கும் இறகு

காற்று எப்போதும் பூமியில் வீசிக்கொண்டே இருக்கிறது. பறவை இறகு போன்ற இலகுவான பொருட்கள் அந்தக் காற்றடிக்கும் திசையில் இழுத்துச் செல்லப்படுகின்றன, இரும்பு மற்றும் கற்கள் போன்ற பாரமான பொருட்களோ அசையாது கிடந்த இடத்திலேயே கிடக்கின்றன.

விண்ணகக் காற்றாகிய ஆவியானவர் முதல் நூற்றாண்டிலிருந்து இந்த பூமியில் அசைவாடிக் கொண்டேதான் இருக்கிறார். ஆனால் அவருடன் இணைந்து உன்னத அனுபவங்களில் மிதப்பவர் வெகுசிலர். ஆவிக்குரிய வாழ்வில் அங்குலம் கூட முன்னோக்கி நகராமல் கிடந்த இடத்திலேயே கிடப்போர் பலர். காரணம் என்ன?

ஆண்டவர் எளிமையானதாகவும், இனிமையானதாகவும் படைத்து வைத்திருந்த ஏதேன் வாழ்வு, மனிதனின் மீறுதலால் இவ்வுலகத்தின் சிஸ்டத்துக்குள் சிக்கி இடியாப்பச் சிக்கலாகிவிட்டது. நமது அன்றாட வாழ்வில் நம்மை அழுத்தும் பாரங்கள் அநேகம். அந்த பாரங்கள்தான் நம்மை ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற விடாமல் அழுத்தி கிடந்த இடத்திலேயே கிடக்க வைக்கிறது. இது சந்தேகமே இல்லாமல் சாத்தானின் கண்ணிதான்.

ஆனால் அதிலிருந்து மீளவும் அவர் நமக்கு நமக்கு ஒரு வழியை வைத்திருக்கிறார்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் (இயேசு) வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28)

அவர் (இயேசு) உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். (I பேதுரு 5:7)

உலகத்தின் பாரங்களிலிருந்து தேவன் நமக்கு விடுதலையை தருவது மீண்டும் புதுபெலத்துடன் உலகத்தை நோக்கி ஓடுவதற்காக அல்ல, நமது பார்வையை உன்னதங்களை நோக்கி திருப்ப… கர்த்தர்வசம் பாரங்களை ஒப்புவித்தால் எல்லாம் இலகுவாகிவிடும். பின்னர் உன்னதக் காற்றாகிய ஆவியானவருடன் இணைந்து ஆவிக்குரிய வாழ்வின் உயரங்களுக்குள் பறப்பதும் சாத்தியமாகிவிடும்.

கர்த்தர் நல்லவர்! அல்லேலூயா!!

## ட்வீட் - 18

எதைக் குறித்தேனும் ஒரு பயம் வந்து உங்களை மிரட்டும்போது **"சேனைகளின் கர்த்தர்"** என்ற ஒற்றை வார்த்தையை தியானியுங்கள். பகையாய் வந்த பயம் புகையாய் மறைந்துபோகும்.

## 19. வருகை நெருங்குகிறது...ஆயத்தமா?

நாம் அரசியலில் பங்கு கொள்கிறோமோ இல்லையோ ஆனால் உலக அரசியலை உற்று நோக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். உலக அரசியல் நகரும் திசையையும், அரசாங்கங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன என்பதையும் சற்று கவனித்துப் பாருங்கள். மணவாளன் வாசலண்டை வந்துவிட்டார் என்பது புரியும்.

அரசாங்கம் என்பது தங்களுக்காக உண்டாக்கப்பட்டது என்றுதான் மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தீர்க்க வேண்டிய மக்கள் பிரச்சனைகள் மலையளவு குவிந்திருக்க, அரசாங்கங்களோ மக்களை கணக்கெடுத்து, அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கி, ஒவ்வொரு தனிமனிதன் சம்பந்தப்பட்ட தகவல்கள் அனைத்தையும் அந்த அடையாள அட்டைக்குள் ஒருங்கிணைக்கும் பணிக்காக பல ஆயிரம் கோடிகளை செலவிட்டுக் கொண்டிருக்கின்றன. அது ஏன்? அந்தப் பணிக்கான அவசரமும் அவசியமும் என்ன?

ஏதாவது ஒரு நாட்டை எதிரியாக சித்தரித்து, அந்த நாடு அணு ஆயுதம் வைத்திருப்பதாக பூச்சாண்டி காட்டி, உலக வல்லரசுகள் எண்ணிக்கையில் அடங்காத நாசகார அணு ஆயுதங்களை தயாரித்துக் கொண்டிருப்பது ஏன்? தங்களிடம் உள்ள ஒன்றிரெண்டு அணுகுண்டுகளாலேயே அந்த எதிரி நாட்டை அழித்துவிட முடியும் என்ற பட்சத்தில் அதோடு நிறுத்திக் கொள்ளாமல் பூமியையே பல தடவைகள் பஸ்பமாக்கும் அளவுக்கு அணு ஆயுதங்களை குவித்துக் கொண்டேயிருப்பது “எந்த எதிரியுடன்” யுத்தம் செய்ய?

ஏழைநாடுகளில் மக்கள் பசியினாலும், கொள்ளை நோயினாலும் கொத்துக் கொத்தாக செத்து விழுகிறார்கள் ஆனால் வளர்ந்த நாடுகள் விண்வெளி ஆய்வுக்காக பல லட்சம் கோடிகள் செலவிடுகிறார்கள். விண்வெளியில் இருந்து அப்படி எதைத்தான் ஆய்வு செய்து அறிய விரும்புகிறார்கள்?

New World Order என்ற கருத்தை வல்லரசு நாடுகளின் தலைவர்கள் அடிக்கடி பேசிவருகிறார்கள். வணிகம் உலகமயமாக்கப்பட்டுவிட்டது, பொதுமொழியாக ஆங்கிலம் வந்துவிட்டது, நவீன தொடர்பு சாதனங்கள் உலகம் முழுமையையும் இணைத்துவிட்டன. இது எதைக் காட்டுகிறது?

நாம் இயேசு பூமியை ஆள பரிசுத்தவான்களோடே வருகிறார் என்று சொல்லிக்கொண்டிருக்க, உலகமோ வேற்றுக்கிரகவாசிகள் பூமியை ஆக்கிரமிக்க வருகிறார்கள் என்று அலறிக்கொண்டிருக்கிறது. சமீப காலமாக இந்தக் கருத்து பொழுதுபோக்கு ஊடங்கள் வழியாக தொடர்ந்து பரப்பட்டு வருகிறது... இதன் உள்நோக்கம் என்ன?

வேதாகமத்தை எழுதிய பரிசுத்தவான்கள் தரிசனத்தில் பார்த்தவைகளை நாம் நிஜத்தில் பார்க்கத் தொடங்கியிருக்கிறோம்…Get Ready!.

## ட்வீட் - 19

எல்லோரையும் நேசிக்க வேண்டும் அதேவேளையில் வேதம் சொல்லுகிறபடி எல்லோரையும் (எல்லா ஆவிகளையும், நோக்கங்களையும், போதனைகளையும்) நிதானிக்க வேண்டும். எல்லோரையும் நிதானிப்பேன் யாரையும் நேசிக்க மாட்டேன் என்றால் நாம் கிறிஸ்துவின் சுபாவத்தில் வளரமுடியாது. எல்லோரையும் நேசிப்பேன் யாரையும் நிதானிக்கமாட்டேன் என்றால் நம்மைப் போல வடிகட்டின ஏமாளி இருக்க முடியாது.

## 20. தோல் இசைக் கருவிகள்; ஒரு அறியாத தகவல்

இசை உலகில் தோல் கருவிகளின் பங்கு இன்றியமையாதது. நீங்கள் உங்கள் சபையின் இசைக்குழுவில் தபேலா, டிரம்ஸ், போங்கோ போன்ற தோல்கருவிகள் வாசிப்பவரா? கிடார், கீபோர்ட் அளவுக்கு நம்ம கருவிக்கு முக்கியத்துவம் இல்லையே! சும்மா பக்க வாத்தியம் மாதிரி வாசிக்க வேண்டியதிருக்கே என்று தோன்றுகிறதா? இந்த தகவல் உங்களுக்குத்தான். இசைக் கருவிகள் பேசும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நானும் இளம் வயதில் எங்க சர்ச்சில் போங்கோ ப்ளேயர்தான். பாடிக்கொண்டே வாத்தியம் வாசிப்பது எனக்கு கடினமாக இருந்தபடியால் போங்கோ வாசிக்க மட்டும்தான் செய்வேன். அப்போதெல்லாம் ஆராதனையில் ஆண்டவரை உயர்த்தி பாட்டுப் பாட முடியவில்லையே என்ற சின்ன ஏக்கம் இருக்கும்.

ஆனால் இந்தத் தகவல் தோற்கருவிகளும் பேசும் என்கிறது!

ஆப்பிரிக்காவில் இசைக்கப்படும் “டோண்டோ” டிரம்களுக்கு “talking drumns” என்பதே பெயர். இதை இசைக்கும் ‘யொருபா’ இன பழங்குடி மக்களின் மொழி அமைப்பும், டிரம் எழுப்பும் சத்தமும் ஒன்று போல் இருக்குமாம். அதில் bass tone-இல் இசைத்தால் அது ஆண் பேசுவதையும், treble tone-இல் இசைத்தால் பெண் பேசுவதையும் குறிக்குமாம். தமிழர்களின் புராதன இசைக் கருவியான பறை எனும் வார்த்தைக்கே “பேசு” என்பதுதான் பொருள்.

18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் அடிமைகளாக சிறை வைக்கப்பட்டிருந்த கறுப்பினத்தவர் தங்களுக்குள் டிரம் இசை மூலம் வெகுதூரம் வரை இரகசிய செய்திகளைப் பறிமாறிக் கொண்டதை ரொம்ப காலம் கழித்தே கண்டுபிடித்த வெள்ளை அரசாங்கம் டிரம் இசையை அங்கு முற்றிலும் தடை செய்ததை வரலாறு கூறுகிறது.

அதுமட்டுமல்ல தோற்கருவிகள் சிகிச்சைக்கும் பயன்படுகின்றன. Drum therapy எனும் இசை எழுப்பி சிகிச்சை அளிக்கும் முறையே வழக்கத்தில் உள்ளது.

மேற்கண்ட தகவல்கள் எதுவும் எனக்கு அந்தக் காலத்தில் தெரியாவிட்டாலும், ஆராதனையில் பாடமுடியவில்லையே என்ற கவலையை அப்போதே தேவன் எனக்கு நீக்கிவிட்டார். பாடி

ஆராதித்தால் பெறும் மனமகிழ்ச்சியை இசை வாசிக்கும்போது நான் பெற்று மகிழ்ந்தது இன்னும் நினைவில் இருக்கிறது.

உண்மையில் ஆராதனை என்பது நமது உதட்டிலிருந்து அல்ல, இதயத்திலிருந்துதான் தொடங்க வேண்டும். ஜனங்கள் வெறும் உதட்டளவில் ஆராதிப்பதைக் கண்டுதான் ஆண்டவர், “இந்த ஜனங்கள் ...தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது” (ஏசாயா 29:13 ) என்றார் வேதனையுடன்!

ஆராதனை உங்கள் உள்ளத்திலிருந்து பொங்கி வந்தால் உங்கள் கைதட்டலும் தேவனைத் துதிக்கும் மொழிபேசும். நீங்கள் கைகளில் இசைக்கும் இசைக்கருவியும் தேவனை நோக்கித் துதிபாடும்!

இஸ்ரவேலில் தாவீதைத் தவிர சுரமண்டலம் வாசிப்பதில் தேர்ந்தவன் வேறொருவனும் இல்லையா? ஏன் தாவீது வாசிக்கும்போது மட்டும் பிசாசுகள் அலறி ஓடின? தாவீது வாசிக்கும் இசை அவன் இருதயத்தில் பொங்கும் துதியின் வெளிப்பாடு என்பதே காரணமாகும்

## ட்வீட் - 20

சரீரம் பாவம் செய்யத் தூண்டுகிறது எனவே நான் சரீரத்தை வெறுக்கிறேன் என்பது அந்நிய மதங்களின் தத்துவம். சரீரமின்றி பாவத்தையோ பரிசுத்தத்தையோ ஒரு ஆத்துமாவால் நடப்பிக்க இயலாது. நான் பரிசுத்தமாய் வாழ எனக்கு சரீரம் உதவுகிறது. எனவே நான் எனது சரீரத்தை நேசித்து அதை பாதுகாக்கிறேன். அதை நீதியின் ஆயுதமாக இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்பது கிறிஸ்தவம்!

## 21. இனி மனசாட்சியல்ல...

நியாயப்பிரமாணம் நம்மை கிருபைக்கு நேராக வழிநடத்திச் செல்லும் ஆசிரியராக இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது(கலா 3:24). நியாயப்பிரமாணம் அருளப்படாத புறவினத்தாருக்கு மனசாட்சியானது நன்மை தீமைகளை சுட்டிக்காட்டும் ஆசிரியராக இருக்கிறது (ரோமர் 2:14,15).

பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படிந்தால் தேவ பிரியத்துக்கும், மீறினால் தேவகோபத்துக்கும் ஆளாக நேரிடும் என்பது உண்மை! ஆனால் முன்பு ஒரு காலத்தில் மனசாட்சியால் வழிநடத்தப்பட்டு இப்போது தேவ குடும்பத்துக்குள் நுழைந்த நாம் நம்மையுமறியாமல் அதே இடத்தை மனசாட்சிக்குக் கொடுத்து மனசாட்சியை சாந்திப்படுத்தினால் தேவனை சாந்திப்படுத்தி விடலாம், அல்லது ஏதோ ஒரு காரணத்துக்காக மனசாட்சி நம்மை வாதித்தால் தேவன் நம்மேல் கோபமாய் இருக்கிறார் என்று எண்ணிக் கொள்கிறோம். சுவிசேஷத்தை சரியாக அறியாததினால் வந்த விளைவு இது!

உண்மையில் இந்த மாயபிம்பத்தை சுவிசேஷம் சுக்குநூறாகத் தகர்த்தெறிகிறது. தேவன் நம்மை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை தியாகத்தின் வழியாகப் பார்த்து "நீதிமான்கள்" என்று தீர்ப்பளித்திருக்கிறார்(ரோமர் 3:22). கிறிஸ்துவின் நீதி நம்மீது நிரந்தரமாகப் போர்த்தப்பட்டு

இருக்கிறது. நமது மனசாட்சி நம்மை நீதிமான் என்று சொல்லும்போது தேவனும் நம்மை நீதிமான் என்று சொல்லுகிறார், நமது மனசாட்சி நம்மை குற்றவாளி என்று சொல்லும்போது தேவனும் நம்மைக் குற்றவாளி என்று எண்ணுகிறார் என்பது முற்றிலும் தவறான புரிதல். இப்புரிதல் சுயநீதியை அடிப்படையாகக் கொண்டது.

நமது வழக்கு ஏற்கனவே முடிக்கப்பட்டு நிரந்தரமாக தீர்ப்பளிக்கப்பட்டு விட்டது. கர்த்தருடைய பார்வையில் நாம் இனி எப்போதும் நீதிமான்களே! இனி மனசாட்சி அல்ல, நமக்குள்ளிருக்கும் தேவ ஆவியானவரே வேதவசனங்களின்படி நம்மை நடத்துகிறவர்.

## ட்வீட் - 21

உலகின் நிகழ்வுகளை யாரோ பின்னிருந்து இயக்குகிறார்கள் என்பது யாவரும் அறிந்த ஒன்று. அந்த "யாரோ" என்னுமிடத்தில் யார் பெயரை எழுதுகிறோம் என்பதுதான் காரியமே!

உலக நிகழ்வுகளை சரியாக ஆராய்ந்து அந்த "யாரோ" என்னுமிடத்தில்...

"இலுமினாட்டி" என்று எழுதினீர்களானால் உங்களுக்குப் பெயர் "கான்ஸ்ப்பிரசி தியரிஸ்ட்" அனைவரது கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாவீர்கள்.

"அந்தி கிறிஸ்து" என்று எழுதினீர்களானால் உங்களுக்கு பெயர் "இரண்டாம் வருகையைக் குறித்து பிரசங்கிக்கும் ஸ்பெஷலிஸ்ட் பிரசங்கியார்" மொத்த கிறிஸ்தவமும் உங்களுக்கு செவிமடுக்கும்.

"கார்ப்பரேட்டுகள்" என்று எழுதினீர்களானால் உங்களுக்குப் பெயர் "அரசியல் விமர்ச்சகர்". டிவி விவாதங்களில் கூட பங்கெடுக்கலாம்.

ஆனால் மொத்தத்தில் இந்த மூன்று கழுதையும் ஒன்றுதான்.

## 22. விடுதலையே நம் தேவை!

இதுவரை செய்துவந்த பாவத்தை செய்யாமல் நிறுத்துவதற்குப் பெயர் சுய கட்டுப்பாடு. அதனை யார் வேண்டுமானாலும் செய்யலாம். பரிசுத்தம், நரகம், நியாயத்தீர்ப்பு குறித்த வேத வசனங்களை சுட்டிக்காட்டி கண்டித்துப் பிரசங்கித்தோ, அல்லது வேறு ஏதேனும் ஒரு மதப் பிரசங்கத்தின் மூலமாகவோ, ஆன்மீகவாதிகளின் அறிவுரை மூலமாகவோ இதை சாதிக்க முடியும். ஆனால் இதில் அழையா விருந்தாளியாக "அழிவுக்கு முன்னானது" என்று வருணிக்கப்படும் "மனமேட்டிமை" உள்ளே வந்து ஒளிந்து கொள்ளும்.

இதுவரை செய்துவந்த பாவத்தை செய்ய முடியாமல் போவதற்குப் பெயர் விடுதலை. அதை இயேசு மட்டுமே தர முடியும், சிலுவையைக் குறித்த சுவிசேஷம் அதை நமக்குப் பெற்றுத்தரும். இதில் தேவனுக்கு மட்டுமே மகிமை போய்ச் சேரும், இலவச இணைப்பாக "மேன்மைக்கு முன்னானது" என்று வருணிக்கப்படும் "மனத்தாழ்மை" தானாய் வந்து நம்மிடம் ஒட்டிக்கொள்ளும்.

## ட்வீட் - 22

ஞானி என்பவன் எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பவனல்ல, சரியானதைத் தெரிந்து வைத்திருப்பவன்.

மூடன் என்பவன் ஒன்றுமே தெரியாதவனல்ல, தனக்குத் தெரிந்ததே சரியானது என்று நம்பிக் கொண்டிருப்பவன்.

## 23. நேரத்தை விழுங்கும் சத்துரு

வெளியே ஆன்மீகத்தை வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் இங்கே அரசியலை வைத்து கொஞ்சம் ஆன்மீகம் செய்வோம் வாருங்கள்!

மக்களை திசை திருப்புவதற்காகவே பணியமர்த்தப்பட்டுள்ள சில அரசியல் கோமாளிகள் அவ்வப்போது தேவையற்ற கருத்துக்களைப் பேசி அதை வேண்டுமென்றே பிரச்சனையாக்கி ஊடகங்களையும், சமூகவலைதளங்களில் இருக்கிற அரசியல் நோக்கர்களையும் அந்தப் பிரச்சனையிலேயே பிசியாக வைத்திருக்கிறார்களென்றால் அந்த நாடகம் நடந்து கொண்டிருக்கும் திரைக்குப் பின்னால் நாட்டின் வளம் இரகசியமாக சுரண்டப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

நம்முடைய வாழ்க்கையிலும் உலகப்பிரகாரமான ஒன்று மாற்றி ஒன்று பணிச்சுமையோ அல்லது தொடர்ச்சியான பிரச்சனைகளோ வந்து அதிலேயே நம்மை அழுத்தி வைத்திருக்கிறதென்றால் அந்த நாடகம் நடந்து கொண்டிருக்கும் திரைக்குப் பின்னால் இரகசியமாக சுரண்டப்படுவது நமது “நேரம்”. எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம். (சங்கீதம் 90:10)

ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருப்பதாக எபிரேயர் 9:27 சொல்லுகிறது. அந்த மரணம் வரை காலத்தை வீணடிக்க வைப்பது எப்படி என்ற கலையில் நம்முடைய சத்துருவுக்கு 6000 வருட அனுபவம் இருக்கிறது. பல இன, மொழி கலாச்சாரத்தைச் சேர்ந்த ட்ரில்லியன்கணக்கான மனிதர்களிடம் அவன் அதை பயிற்சித்துப் பார்த்தும் இருக்கிறான். எனவே என்னையும், உங்களையும் அதே வழியில் ஏமாற்றுவது அவனுக்கு ஒன்றும் கடினமல்ல.

எனவே நாம் எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும் இன்றே நமது முழு focus-ஐயும் ஆவிக்குரிய வாழ்வின் பக்கம் திருப்புவோம். கர்த்தரோடு ஒப்புவாகுவோம். பாழடைந்து கிடக்கும் நமது ஜெபவாழ்வாகிய பலிபீடத்தை சீரமைப்போம். பிரச்சனைகள் சூரியனைக் கண்ட பனிபோல தானாக விலகும்! உலகப் பிரச்சனைகளை சரிசெய்வதிலேயே காலத்தை வீணடித்துக் கொண்டிருப்போமானால் திடீரென்று மரணத்தை சந்திக்கும் நிலையில் நித்தியத்தை இழப்பது உறுதி…எனவே உணர்வுள்ளவர்களாக எச்சரிக்கையுடன் இருப்போம்!

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள் (எபேசியர் 5:16)

## ட்வீட் - 23

"எனக்கு தேவையானதையல்ல, நான் விரும்புவதைப் பிரசங்கி"

கிறிஸ்தவத்தை தேவ கோபாக்கினைக்கு நேராக இட்டுச்செல்ல "செவித்தினவு" என்கிற இந்த ஒரு வியாதியே போதும்.

ஒரு பிரசங்கி நோய் நீக்கும் மருத்துவராக செயல்பட வேண்டும், ஆர்டர் கொடுப்பதை டெலிவரி செய்யும் சர்வராக இருக்கக் கூடாது. ஆனால் கிறிஸ்தவ உலகில் மட்டும்தான் மருத்துவர்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை, சர்வர்களோ கொண்டாடப்படுகிறார்கள்!

இந்த நிர்பந்த நிலைதான் பல பிரசங்கிகளுக்குள் துடிப்புடன் இருக்கும் தீர்க்கதரிசியைக் கொன்று, வியாபாரியை உயிர்ப்பித்து விடுகிறது

## 24. மோட்சத்தின் முன்ருசி

கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷரில் தமக்கு நெருக்கமான பேதுரு, யாக்கோபு, யோவான் மூவரையும் கூட்டிக்கொண்டு உயர்ந்த மலையின்மேல் போய் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார் என்று மத்தேயு 17-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அப்போது மோசேயும் எலியாவும் அவர்களுடன் பேசுபவர்களாகக் காணப்பட்டனர்.

தேவசமூகத்தில் இருந்து வந்த மோசேயும் எலியாவும் பரலோக வாசனையை சுமந்தவர்களாக வருகின்றனர். இயேசுவும் மறுரூபமடைந்தவராக காணப்படுகிறார். அந்த சில மணித்துளிகள் சீஷர்கள் பூமியிலிருந்தபடியே பரலோக வாசனையை உணர்கிறார்கள். அப்போது பேதுரு செய்த காரியத்தைப் பாருங்கள்!

அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான் (மத்தேயு 17:4)

அந்த சில மணித்துளி அனுபவம் பூமிக்குரிய வாழ்வு அத்தனையையும் மொத்தமாக மறக்கடித்து “இப்படியே இங்கேயே இருந்துவிட்டால் என்ன” என்ற ஆசையை சீஷர்களுக்கு உண்டாக்கி விடுகிறது. நமக்கு வாக்கருளப்பட்ட இடத்தின் மேன்மை அதுதான்! கிறிஸ்துவின் மறுரூப தரிசனமும், அங்கிருந்து வந்த இருவரும் சுமந்து வந்த பிரசன்னமுமே அத்தகைய உணர்வை சீஷர்களுக்கு உருவாக்கியிருந்திருக்குமானால் பிதாவே வாசம் பண்ணும் அந்த இடம் எத்தனை அருமையானதாக இருக்கும்!

தன்னுடைய மோட்ச வீட்டின் முன்ருசியைக் காட்டிவிட்டு அந்த அனுபவத்திலேயே தங்கி தாபரிக்க ஏங்கும் தனது பிள்ளைகளுக்கு பிதா அடுத்த வசனத்திலேயே ஒரு கட்டளை கொடுக்கிறார். அந்த ஒரு கட்டளைக்கு கீழ்ப்படிந்தால் போதும் அதுவே ஒருவனை மோட்ச வீட்டில் கொண்டு போய் சேர்த்துவிடும்.

அந்தக் கட்டளை:

இவருக்குச் (இயேசுவுக்கு) செவிகொடுங்கள் (மத்தேயு 17:5)

### ட்வீட் - 24

ஆவிக்குரிய வாழ்க்கையின் உயர்நிலைக் கல்வி என்பது "கல்லாதது உலகளவு" என்ற உண்மையை மனதார உணரவைக்கும். அதன்பிறகுதான் வாய்க்குத் திரையிட்டு காதுகளை திறந்து வைப்போம். அதுவரைக்கும் அடைமழையின் ஓயாத இரைச்சல்தான்!

ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை (1 கொரி 8:2)

## 25. ஜி.எஸ்.டி தெரியும் 'அச்சவரி' தெரியுமா?

ஒருவன் நம்மை பொம்மலாட்டங்களில் வரும் நூலில் கோர்த்த பொம்மை போல தன் இஷ்டத்துக்கு ஆட்டுவிக்கிறான் என்றால் ஒன்று அவன் நம்மை விட மிகவும் பலசாலியாக இருக்க வேண்டும், அல்லது நாம் ஏதோ ஒரு தவறு செய்து அவனிடம் மாட்டிக்கொண்டு நமது குடுமியை அவன் கையில் கொடுத்து விட்டு திண்டாடிக் கொண்டிருக்க வேண்டும்.

கி.பி 17 ஆம் நூற்றாண்டில் ஸ்காட்லாந்து நாட்டில் மோசமான சட்ட ஒழுங்குப் பிரச்சனை நிலவி வந்தது. ஒரு கொடூரமான கொள்ளைக் கூட்டத்தினர் அருகே விவசாயிகள் வாழ்ந்த கிராமங்களுக்குள் புகுந்து கொள்ளையிடுவதையும் அவர்களைத் தாக்கி காயப்படுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.
அவர்களை சமாளிக்க முடியாமல் திணறிய விவசாயிகள், சட்டம் நம்மைக் காப்பாற்றும் என்று நம்பி நாசமாவதை விட, பேசாமல் சண்டைக்காரன் காலிலேயே விழுந்து விடலாம் என்ற முடிவுக்கு வந்து கொள்ளையர்களுக்கு மாதந்தோறும் ஒரு தொகையைக் கப்பமாகக் கட்ட சம்மதித்து அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டனர்.

அப்படி அவர்கள் கட்டிய கப்பத்துக்குப் பெயர்தான் "பிளாக்மெயில்" என்பதாகும். பிளாக்மெயில் என்ற வார்த்தை உருவானதன் வரலாறு இதுதான்.

'மெயில்' என்ற வார்த்தைக்கு 'கப்பம்' அல்லது 'வரி' என்று பொருள். அதாவது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எதிரி கேட்கும் விலையை அவனுக்கு பணிந்து கொடுத்துவிடுவது. இது சட்டரீதியான உடன்படிக்கை அல்லாததால் மெயிலுடன் "பிளாக்" ஒட்டிக்கொண்டது. பிளாக்மெயில் என்ற வார்த்தைக்கு இணையான தமிழ்ச்சொல்தான் "அச்சவரி" என்பதாகும்.

சரி அதிருக்கட்டும், நம்மில் பலரும் ஏன் குரங்காட்டியிடம் சிக்கிய குரங்குபோல மாம்சத்தின் கையசைவுகளுக்கெல்லாம் ஆடிக்கொண்டிருக்கிறோம்? அது நம்மைவிட பலமிக்கது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஆனால் நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகள் அல்லவா? இயேசுவின் கிருபைக்கு  முன் மாம்சமோ, சாத்தானோ எதன் வல்லமையும் நில்லாதே! அப்படியிருக்க

கிருபைக்கு கீழாக இருக்கும்  நாம் ஏன் இன்னும் மாம்சத்தின் இச்சைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்?

ஒருவேளை நாம் பாவப் பழக்கவழக்கங்களில் சிக்கி, அதன் விளைவாக குற்ற மனசாட்சியால் வதைக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் நம் பாவங்களை மன்னித்து நம்மை தமது தூய இரத்தத்தால் கழுவி, விடுவித்து சாம்பலில் இருந்து சிங்காரத்துக்கு உயர்த்த நமது கர்த்தர் ஆவலுள்ளவராகவே இருக்கிறார். இதை மனதார உணர்ந்தால் மாம்சத்தின் தந்திரமான பிளாக்மெயில் உங்களிடம் செல்லாதல்லவா?

“சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்” (ரோமர் 8:12,13)

### ட்வீட் - 25

நாம் ஜெபிக்கும் போது தேவன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை,  நமது இருதயத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆகவே அதிக நேரம் ஜெபிப்பதல்ல, விசுவாசமுள்ள ஜெபமே அவரை ஈர்க்கும். (அதிக நேரம் ஜெபிப்பதே தவறென்று சொல்லவில்லை, அதிக நேரம் ஜெபிப்பதுதான் ஆவிக்குரியது என்று நினைப்பவர்களுக்காக இந்தப் பதிவு)

## 26. நம்பிக்கை துரோகம்

நம்முடைய விசுவாசத் தகப்பனாகிய ஆபிரகாமின் சொந்த ஊர், “ஊர் (Ur)” எனும் நகரம் என்பது நமக்குத் தெரியும். ஆபிரகாமின் மூதாதையர் வழிபட்டு வந்த கடவுளுக்குப் பெயர் “சின்(Sin)” அல்லது நன்னா(Nanna) ஆகும். இது நிலவுக் கடவுள். இதில் நன்னா முழுநிலவையும், சின் பிறை நிலவையும் குறிக்கும். இந்த நிலவு வழிபாட்டு மதம் ஊர் நகரத்தில் மட்டுமல்ல, மெசபடோமியா முழுவதும் பின்பற்றப்பட்டு வந்த மதம்.

சின் கடவுளின் அடையாளம் நிலாப்பிறை ஆகும். காளை மாடும், படகும் இவர்களின் புனிதச் சின்னங்கள். காளைமாட்டின் கொம்புகளின் வடிவமும், படகும் நிலாப்பிறை வடிவில் இருப்பதே அதற்குக் காரணம். மத்தியக் கிழக்குப் பகுதி முழுவதும் தங்கத்தினால் செய்யப்பட்ட கன்றுகுட்டி நிலவு வழிபாட்டின் அடையாளம் ஆகும்.

1 இராஜாக்கள் 12-இல் யெரோபெயாம் பெத்தேல் மற்றும் தாணில் பொன் கன்றுக்குட்டிகளை நிறுவி, நிலவு வழிபாட்டை தேசிய மதமாக அறிவித்ததையும் நம்மால் வாசிக்க முடியும். யாத்திராகமம் 32-ஆம் அதிகாரத்தில் எகிப்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் பொன்கன்றுக்குட்டி செய்து வணங்கி கர்த்தரின் கோபத்துக்கு ஆளானதைக் காண்கிறோம்.

அவர்களுக்கு மோசே கொடுத்த தண்டனை சற்று வித்தியாசமானது, “அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து,

தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்" என்று யாத் 32:20-இல் வாசிக்கிறோம்.
சரி, மோசே ஏன் அவ்வாறு செய்தார் அதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன என்று ஆராய்ந்தால். புருஷனுக்கு துரோகம் செய்து வேறொரு ஆணுடன் உறவு கொண்ட ஒரு பெண்ணை அவளது நம்பிக்கை துரோகத்தை உணர்த்தும் விதமாக ஒரு மண்பாண்டத்தில் பரிசுத்த நீரை ஊற்றி அதில் தரையிலிருக்கும் புழுதியை கொஞ்சம் எடுத்து அந்தத் தண்ணீரில் கலந்து அந்தப் பெண்ணுக்கு குடிக்கக் கொடுக்கும் பரீட்சை குறித்து எண்ணாகமம் 5: 11-27-இல் வாசிக்கலாம். அவள் தவறு செய்திருந்தால் அவள் உடல்நிலை பாதிக்கப்பட்டு ஜனங்களுக்குள் அடையாளமாக இருப்பாள்.

இங்கு அதையே ஒரு அடையாளமாக மோசே செய்வதைக் காணலாம். இஸ்ரவேலர் பிதாவாகிய தேவனை விட்டு விலகி அந்நிய தேவர்களைப் பின்பற்றிய போதெல்லாம் கணவனுக்கு துரோகம் செய்து வேறொரு ஆணுடன் உறவு கொள்ளும் பாவத்தையே கர்த்தர் சுட்டிக்காட்டி மக்களை எச்சரிப்பதை பழைய ஏற்பாட்டு புத்தகம் முழுவதிலும் அதிலும் விசேஷமாக ஓசியா புத்தகத்தில் காணலாம். இப்பொழுது மோசே ஏன் அப்படிச் செய்தார் என்பதன் பொருள் உங்களுக்கு விளங்கும் என்று நினைக்கிறேன்.

## ட்வீட் - 26

துயரப்பட்டவனுக்கு எப்படி ஆறுதல் செய்ய வேண்டும் என்பதற்கு மரித்த லாசருவின் வீட்டில் இயேசு ஒரு உதாரணம். அனைத்தும் அறிந்தவராக இருந்தும் அவர்கள் மனநிலையறிந்து அழுகிறவர்களோடு அழுதார்.

துயரப்பட்டவனுக்கு எப்படி ஆறுதல் செய்யக்கூடாது என்பதற்கு யோபு வீட்டில் நண்பர்கள் ஒரு உதாரணம். ஒன்றுமறியாதவர்களாக இருந்தும் எரிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுவதுபோல பேசி அவனை மேலும் மனமடிவாக்கினார்கள். "காரியத்துக்கு உதவாத வைத்தியன்" என்ற வார்த்தைக்கு பொருத்தமான உதாரணம் இவர்களே!

ஆறுதல் அளிப்பதும், காயங்கட்டுவதும் ஊழியங்களில் முக்கியமான, சென்சிட்டிவான ஊழியமாகும். நாம் யாருக்கு ஊழியம் செய்கிறோமோ அவர்கள் மனநிலைக்கு நம்மால் மாற இயலாவிட்டால் வாயை மூடிக்கொண்டு அவர்களுக்காக ஜெபிப்பதோடு நின்றுவிடுவது நல்லது!

# 27. தியாகமான அஸ்திபாரம்

இன்று கர்த்தருடைய வார்த்தையை பகிரும் நமக்கு மக்களிடம் கிடைக்கும் அன்புக்கும், மரியாதைகளுக்கும், பொருளாதார நன்மைகளுக்கும் அடித்தளம் அமைத்தவர்கள் நமக்கு முந்தைய தலைமுறையில் தியாகத்துடன் பணியாற்றிய மிஷனரிகளே!

நம்மைவிடவும் அர்ப்பணிப்புடன் ஊழியம் செய்த அவர்களுக்கு மக்களிடமிருந்து அன்று கிடைத்தது முற்றிலும் மோசமான எதிர்வினைதான்! அடிகளும், அவமானங்களும், காயங்களும் பெற்றுத்தான் இரத்தத்தை சிந்தி, அதன்மீது திருச்சபைகளைக் கட்டி எழுப்பினார்கள். அவர்களை அடித்து காயப்படுத்திய கூட்டத்தில் நமது முன்னோர்களும்கூட இருந்திருக்கலாம். அடித்தவர்களை அவர்கள் அன்று அன்புடன் மன்னித்ததால்தான் நாம் இன்று தேவ இரக்கம் பெற்று ஆசீர்வாதத்துடன் இருக்கிறோம்.

அடித்தவர்களை அந்த சத்தியம் ஏதோ ஒரு சூழலில் தொட, அதனால் அவர்கள் மனந்திரும்பி கர்த்தரை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுடைய பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும்தான் இன்று ஊழியர்களுக்கு அன்பையும், கனத்தையும், பணத்தையும் வாரி வழங்குகிறார்கள்! இன்று ஊழியம் செய்யும் ஒவ்வொருவரும் நமக்கு அருமையான அடித்தளம் அமைத்துக் கொடுத்த அந்த ஆதி ஊழியர்களை நன்றியுடன் நினைத்துப்பார்த்து கர்த்தரை துதிக்க கடமைப்பட்டிருக்கிறோம். இன்று கிறிஸ்தவம் ஆலமரம் போல தழைத்து நிற்கிறது. தியாகத்தின் வலிமை அதுதான்! எல்லா தியாகங்களுக்கும் மேலானது கர்த்தர் இயேசுவின் சிலுவை தியாகம்! உண்மையான ஊழியத்துக்கான மாதிரியும் அவரே!!

நமக்கு முந்தைய தலைமுறை ஊழியர்கள் கண்ணீரும், இரத்தமும் சிந்தி முழங்கால் நோக ஜெபித்து கூட்டிய மந்தையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் பணியைத்தான் ஆவியானவர் நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார் என்று உணர்ந்தாலே ஒரு நடுக்கம் நம்மைப் பற்றிக்கொள்ளும், இந்த ஜனங்களைப் பயன்படுத்தி ஆதாயம் அடையலாம் என்ற எண்ணம் நமக்கு கனவில்கூட வராது, வரவும் கூடாது!

## ட்வீட் - 27

யூதர்கள் யாரையாவது படு கேவலமாக திட்டி அவமானப்படுத்த வேண்டியதிருந்தால் அவனை “சமாரியன்” என்று திட்டுவார்கள். கர்த்தர் இயேசுவும் அந்தத் திட்டுதலுக்குத் தப்பவில்லை.

அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: உன்னைச் சமாரியனென்றும், பிசாசுபிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள். அதற்கு இயேசு: நான் பிசாசுபிடித்தவனல்ல, நான் என் பிதாவைக் கனம்பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள். (யோவான் 8: 48,49)

இங்கு நம் ஆண்டவரின் அழகு குணத்தைப் பாருங்கள். அவர் “நான் சமாரியனுமல்ல, பிசாசுபிடித்தவனுமல்ல” என்று மறுக்காமல், “நான் பிசாசுபிடித்தவனல்ல” என்று மட்டும் சொல்லுகிறார். தாம் சமாரியன் என்று அழைக்கப்பட்டதைக் குறித்து அவர் வெட்கமோ, வேதனையோ, கோபமோ அடையவில்லை. இது அவர் இனத்தை விடுத்து இதயத்தை மட்டுமே பார்க்கிறவர் என்பதை நமக்குத் தெளிவாக்குகிறது.

## 28. சிஸ்டம் சரியில்ல...

சிஸ்டம் சரியில்ல... என்று நடிகர் ரஜினிகாந்த் சொன்ன பிறகு அந்தக் கருத்து தற்சமயம் அதிகம் பொதுவெளிகளில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உண்மையில் இதை அதிகம் விவாதிக்க வேண்டியதும், பிரசங்கிக்க வேண்டியதும் நாம்தான். ஆனால் நாமோ இந்த சிஸ்டத்துக்குள் (world system) ஆசீர்வாதமாக இருப்பது எப்படி என்பதையே பேசிக்கொண்டும், பிரசங்கித்துக் கொண்டும் இருக்கிறோம்.

சிஸ்டம் என்பது என்ன?

இது மனிதர்கள் தனியாகவும், சமூகமாகவும் ஒன்றிணைந்து வாழும்படியும், ஒரு வளர்ச்சியை நோக்கி முன்னேறும்படியும் உருவாக்கப்பட்ட ஒரு பொதுவான உலகளாவிய ஒழுங்குமுறை. அந்த பொதுவான ஒழுங்கு முறைக்குள் இனம், மொழி, சமய நம்பிக்கை, இடம் மற்றும் சூழலுக்கேற்றவாறு மனித இனம் சிற்சில மாற்றங்களை செய்துகொண்டு வாழ்ந்து வருகிறது. இந்த சிஸ்டம் குறித்து வேதாகம வெளிச்சத்தில் நாம் சில காரியங்களை தியானிக்கலாம்.

இந்த சிஸ்டம் யாரால், யாருக்காக உருவாக்கப்பட்டது?

இது ஏழைகளுக்கும், உழைக்கும் வர்கத்துக்கும், எளிய பாமர மக்களுக்கும் எதிராக அவர்களை சுரண்டும்படி பணக்கார மற்றும் அதிகார வர்க்கதினரால் உண்டாக்கப்பட்டது என்று சிலர் வாதிடுகிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. இந்த சிஸ்டம் மனிதர்களுக்காக உருவாக்கப்பட்டதே அல்ல. மனிதர்களால் உருவாக்கப்பட்டதும் அல்ல. இது வேதாகமத்தின்படி முதல் மனிதனான ஆதாமிடமிருந்து அதிகாரத்தை பிடுங்கிய தள்ளப்பட்ட தூதர்கள் தங்களுக்காக, தங்கள் எதிர்கால திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும்படி உருவாக்கிய பொது ஒழுங்குமுறையே இது!

பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து: இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்துகொண்டால், எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்.(லூக்கா 4:5-7)

இறைமகன் இயேசுவிடமே இப்படிப்பட்ட டீலை முன்வைத்தவன்தான் தள்ளப்பட்ட தூதர்களின் தலைவனாகிய சாத்தான். அவனது இந்த டீலுக்கு ஒத்துக்கொண்டு அவனுக்கு ஒத்துழைக்கும் எவருக்கும் அதிகாரத்தையும், ஐசுவரியத்தையும், புகழையும் வாரி வழங்குகிறான். நமது மாம்ச கண்களுக்கு அந்த மனிதர்கள்தான் தெரிகிறார்களேயொழிய பின்னே இருந்து செயல்படுத்தும் அந்தகார சக்திகள் தெரிவதில்லை.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! இந்த சிஸ்டமானது என்னதான் சுயநல மனிதர்களால் ஒருவேளை உருவாக்கப்பட்டிருந்தாலும் அது மனித இனத்தையே அழிக்கும் விதத்தில் நிச்சயம் உருவாக்கப்பட்டிருந்திருக்காது. ஏனெனில் மனித இனம் அழியும்போது அவர்களும் அவர்கள் சந்ததியும் சேர்ந்துதான் அழியும் என்பது அவர்களுக்கு தெரியாதா? பூமியையே பொசுக்கும் அணு ஆயுதங்களும், மருந்து மற்றும் உணவு வடிவில் விற்கப்படும் விஷங்களும், அரசியல் இனப்படுகொலைகளும், நாசகாரத் திட்டங்களும் மனித இனத்தையே கருவறுக்கும் வன்மமுள்ள ஒருகூட்டத்தால்தான் உருவாக்கப்பட்டிருக்கும் என்பது திண்ணம் அல்லவா? அந்தக் கூட்டத்தைத்தான் பரிசுத்த வேதாகமம் இனம் காட்டுகிறது.

இந்த சிஸ்டம் எதை நோக்கி போகிறது? ஓருலக அரசாங்கம், அதற்கு ஒரே தலைவன், ஒரே ராணுவம், ஒரே வணிகம், ஒரே மதம் என்ற நோக்கில் முன்னேறிக்கொண்டிருக்கிறது. இது இன்று, நேற்று போடப்பட்ட திட்டமல்ல 6000 ஆண்டுகால காய் நகர்த்தல். எனவே இது சாதாரண மனிதர்களையும் தாண்டி, பூமிக்கு சம்பந்தமில்லாத ஆனால் பூமியை கைப்பற்றத் துடிக்கும் ஒரு சக்தி இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை உணரமுடிகிறதல்லவா?

இன்று இவற்றைப் பற்றி பேசாமல் சபை தூங்கிக்கொண்டிருக்கும் வேளையில் உலகத்தார் ஆராயவும், பேசவும் தொடங்கிவிட்டார்கள். வேதம் தள்ளப்பட்ட தூதர்கள் என்று சொல்லியிருக்க, அவர்களோ ஏலியன்கள் என்று ரெப்டீலியன்கள் என்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எது எப்படியோ சாத்தான் இந்த பூமியை சாராதவன் என்ற பட்சத்தில் அவனை ஏலியன் என்றும், அவனை வேதம் “சர்ப்பம், வலுசர்ப்பம்” என்று அழைப்பதால் அவனை ரெப்டீலியன் என்று அழைப்பதும் ஒரு விதத்தில் சரியே! அந்த நாகம் உண்டாக்கிய “நாக”ரீகம்தான் இன்று மனித இனத்தையே ஆட்டிப்படைக்கிறது. ஆனால் அப்படி ஆராய்பவர்களையும் வேதாகம உண்மையிலிருந்து திசைதிருப்பும் விதத்தில் பல ஏலியன் மற்றும் பறக்கும்தட்டு கதைகள் மீடியாக்களால் பரப்பப்பட்டு வருகிறது.

இந்த சிஸ்டத்தையும் அதை உருவாக்கியவனையும் தோலுரிக்க வேண்டிய கடமை சபைகளுக்கே உரியது. இந்த சிஸ்டத்துக்கு எதிரான ஒன்று இருக்குமானால் அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நிறுவிய “இறையரசு” மட்டுமே! அதைக் குறித்து நாம் எவ்வளவு பிரசங்கித்திருக்கிறோம் அல்லது அறிந்து வைத்திருக்கிறோம்? நமது ஆவிக்குரிய தேடல் எதை நோக்கியிருக்கிறது என்பதை இந்த வேளையில் நாம் சிந்திக்க வேண்டிய அவசியத்திலிருக்கிறோம்.

இந்த சிஸ்டம் நமக்கு நெருடலாகவும், uncomfortable- ஆகவும் இருந்தால் அதுதான் நீங்களும் நானும் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கு அடையாளம். இந்த சிஸ்டத்திலும் நம்மை பாதுகாக்கவும்வும் நம்மை ஆசீர்வதித்து உயர்த்த தேவன் பிரியமுள்ளவராகவும், வல்லமையுள்ளவராக இருக்கிறார் என்பது உண்மைதான். ஆனால் அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு இந்த சிஸ்டத்துக்குள்ளேயே செட்டில் ஆக விரும்புவது ஆபத்தான அறிகுறி. நமது இருதயம் பரலோக ராஜ்ஜியம் அதன் நீதி இவைகளை நோக்கியே இருக்க வேண்டும். அதற்காக ஏங்க வேண்டும். கிறிஸ்துவின் நீதியுள்ள அரசாட்சியின் நாளைக் காண ஏங்க வேண்டும். அந்த ஏக்கம் நமக்கு இருக்கிறதா அல்லது அந்த ஏக்கத்தை மக்களின் மனதில் உருவாக்கும் விதத்தில் நமது ஊழியம் இருக்கிறதா என்பதை ஆராயக்கடவோம்.

## ட்வீட் - 28

பிரசங்கம் கேட்பது பழுது போக்கவா? பொழுது போக்கவா?

## 29. பொன்னான பாடம்

அன்று ஞாயிறு ஆராதனையில் சிறப்புப் பாடல் பாட வேண்டும். ஜேனட் அதற்காக அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தாள். தன்னுடன் இணைந்து பாடவிருக்கும் மெர்சி, மேரி, டெபி மற்றும் சர்ச்சுக்கு வரும் அனைத்துப் பெண்களையும் விட தானே உடையும், நகையும் சிறப்பாக அணிந்திருக்க வேண்டுமென்ற ஆசை அவளுக்கு. சில காஸ்ட்லி நகைகளை அள்ளிப் போட்டுக்கொண்டாள்.

அதே ஊரின் இன்னொரு மூலையில் மெர்சி தன்னிடமிருக்கும் தங்கம் போலவே தோற்றமளிக்கும் சில கவரிங் நகைகளை பீரோவிலிருந்து எடுத்து அணிந்து கொண்டாள். அவளுக்கு நகை மீதெல்லாம் ஆசையில்லை. ஆனால் சொற்பமே சம்பாதிக்கும் தனது கணவனை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது என்ற எண்ணம் அவளுக்கு. அதைவிட தன்னை நம்பும் அவளை கர்த்தர் வறுமையில் தவிக்க விட்டு விட்டாரே என சுற்றத்தார் கர்த்தரை இகழ்ந்துவிடக் கூடாது என்பதில் அதிக கவனம் கொண்டவள்.

இன்னொரு பக்கம் பெரும் பணக்காரியாகிய மேரி, ஆனால் நகை அணிவதை விரும்பாதவள். அதற்கு காரணம் வெளிப்புற அலங்காரமல்ல, உள்ளான அழகே கர்த்தருக்குப் பிரியம் என்ற விசுவாசம் அவளுக்கு. அதுமட்டுமன்றி ஆராதனைக்கு வரும் ஏழை சகோதரிகள் தனது படோபடோபத்தைப் பார்த்து ஏங்கிப்போய் விடக் கூடாது, அவர்களுக்கு இடறலாக தான் இருக்கக் கூடாது என்ற சிந்தையுள்ளவள்.

கடைசியாக டெபி, அவளுக்கு நகை என்றால் கொள்ளை ஆசை, ஆனால் அவளுக்கு வீட்டில் நகை அணிய தடா. காரணம் நகை அணிவது பாவம் என்ற பாரம்பரியத்தில் வாழும் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டவள். குடும்பத்தார் பார்க்காத வேளைகளில் தனது தோழிகளின் நகைகளை வாங்கி அணிந்து கண்ணாடியில் அழகு பார்த்துக்கொள்வது அவள் வழக்கம்.

நால்வரும் அழகிய குரல்வளம் கொண்டவர்களாதலால் அவர்களுக்கு அன்று ஆராதனையில் சிறப்புப் பாடல் பாடும் வாய்ப்பு கிடைத்தது. நால்வரையும் பார்த்த அன்று போதிக்க வந்த வெளியூர் பிரசங்கியார் குழம்பிப் போனார். இதென்ன இந்த சபையில் ஒழுங்கே இல்லையே! நால்வரில் இருவர் நகையணிந்திருக்கிறார்கள், இருவர் அணியவில்லை. நகை குறித்தெல்லாம் இந்த போதகர் பிரசங்கிக்க மாட்டாரா? ம்ம்ம்... மக்களை தக்க வைக்க வேண்டுமென்றால் சில பிரசங்கங்களை தவிர்க்கத்தான் வேண்டியதிருக்கிறது. என்னே மாய்மாலம் இது! இதுவே எனது சபையாக இருந்திருந்தால்....

இப்படி அவர் சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே பாடல் முடிந்து பிரசங்கத்துக்கான அழைப்பு வந்தததது. "கர்த்தாவே! தேவையுள்ள ஆத்துமாக்களோடு பேசும்!" என்று மனதுக்குள் ஜெபித்த படியே பீடத்தில் ஏறினார். ஏறி நின்றதும் எதிரே வாசலின் நிலைக்காலின் மேல் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த வசனம் அவர் கண்களில் மின்னியது.

மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமு 16:7)

## ட்வீட் - 29

உலகை ஆளும் அரசியல், மத, பொருளாதார சித்தாந்தங்கள் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவைகளாக இருந்தாலும் அவை அத்தனையும் ஒருவனுக்குச் சொந்தமானவைதான்!

கொடுங்கோல் அரசாட்சியின் பிரதான சூழ்ச்சியே ஆளுகையைப் பிடித்தவுடன் தனக்கு ஆதரவாளனை ஏற்படுத்திக் கொள்வதல்ல, ஒரு போலியான எதிரியை ஏற்படுத்தி அவனே தனக்கு மாற்று என அனைவரையும் நம்பவைப்பதுதான்.

உதாரணமாக தனது வலதுகைக்கு மாற்றாக இடது கையை முன்னிறுத்துவது. பல நூற்றாண்டுகள் கழித்து தம்மை ஆளும் இரு கைகளுமே ஒரே ஆளுக்கு சொந்தமானதுதான் என்று பாமர மக்கள் உணர்ந்து விழிப்பதற்குள் உலகம் முழுமையும் அவனுக்கு சொந்தமாகியிருக்கும்!

அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே (2 கொரி 2:11)

## 30. அபாயகரமான கொக்கி

பக்கத்து ஊருக்கு பயணப்பட்ட ஒரு தந்தையும் மகனும் கழுதையில் செல்லும்போது எதிர்ப்படும் மக்களின் கருத்துக்களுக்கேற்ப அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்டே இருந்து கடைசியில் சளைத்துப்போய் இனி அடுத்தவர்களது விமர்ச்சனங்களுக்கு செவிகொடுக்கக் கூடாது என்று முடிவெடுத்த ஈசோப் நீதிக்கதையை நம் அனைவரும் சிறு வயதில் கேள்விப்பட்டிருப்போம்.

ஆவிக்குரிய பயணத்திலும், அதிலும் விசேஷமாக ஊழியத்திலும் அப்படித்தான். பலதரப்பட்ட சபை மற்றும் உபதேசப் பின்னனியிலிருந்து வரும் மக்களை நாம் கடந்து செல்ல வேண்டியதிருக்கலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்து சொல்லுவார்கள். யார் என்ன சொன்னாலும் நாம் காது கொடுத்துக் கேட்கத்தான் வேண்டும். பயனுள்ள ஆலோசனைகளுக்கு நாம் தாராளமாக கீழ்ப்படியலாம்.

ஆனால் பலநேரங்களில் அப்படி இருப்பதில்லை. பலருடைய கருத்துக்கள் மற்றும் விமர்ச்சனங்களில் “நீ இதைப் பின்பற்றினால்தான் எங்களில் ஒருவனாக ஏற்றுக்கொள்ளப்படுவாய்” என்ற அபாயகரமான ஒரு கொக்கி இருக்கும். அந்தக் கொக்கியில் நாம் சிக்கினால் எடுப்பார் கைப்பிள்ளையாகிவிடுவோம்.

கர்த்தராகிய இயேசு தனது ஊழியத்தை தொடங்கியதிலிருந்து சிலுவையில் முடிக்கும்வரை அந்த சோதனை அவரைத் தொடர்ந்துகொண்டே இருந்தது. “நீ சிலுவையிலிருந்து இறங்கி வா! உன்னை எங்கள் இராஜாவாக ஏற்றுக்கொள்கிறோம்” என்று சவால்கள் எழுப்பியவண்ணம் இருந்தன. அவரது ஊழிய நாட்களில் “வானத்திலிருந்து எங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டும்” என்று ஒரு கூட்டம் அவருக்கு ஒரு நெருக்கடி கொடுத்துக்கொண்டே இருந்தது. பிசாசின் சோதனையும்கூட “நீர் தேவனுடைய குமாரனேயானால்…” என்ற கொக்கியோடுதான் தொடங்கியது.

ஆதி அப்போஸ்தலர்கள் போல யூதரை ஆதாயப்படுத்த யூதனாகவும், ரோமனை ஆதாயப்படுத்த ரோமனாகவும் மாறுவதில் தவறு இல்லை. அந்த ஒரு வளைந்து கொடுக்கும் குணாதிசயமும் ஒரு

தேவனுடைய மனிதனுக்குள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அந்த வளைந்து கொடுத்தல் வேறு, அது தேவனுக்காகவேயன்றி நமது ஆதாயத்துக்காக அல்ல!

ஆனால் நம்மை ஆட்டிவைக்கும் கட்டுப்பாட்டை மற்றவர்கள் கையில் கொடுத்துவிட்டு அவர்களிடம் நம்மை இழப்பது என்பது வேறு! உலகத்தில் பல ஆயிரம் சபைகள் உள்ளன, பல ஆயிரம் போதனைகள் உள்ளன. அவர்களுக்காக நாம் பல ஆயிரம் வேஷங்களைப் போடமுடியாது. எங்கே வளையவேண்டும், எங்கே நிமிர வேண்டும் என்று ஒரு கர்த்தருடைய பிள்ளைக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

சரி என்று பட்ட விஷயங்களில் மாறுவதில் தவறு இல்லை. அங்கு பிடிவாதம் பிடித்தால் அங்கு சுயம் கிரியை செய்கிறது என்று பொருள். சரியில்லாத விஷயங்களுக்காக வளைந்து கொடுக்கக்கூடாது, அப்படிச் செய்தால் அங்கும் சுயமே கிரியை செய்கிறது

## ட்வீட் - 30

இயேசுவின் இரத்தம் உன் இந்துத்துவ வருணாசிரம சாதி அடையாளத்தையும் சேர்த்துத்தான் கழுவி நீக்கும்...சம்மதமா?

## 31. கூகுள் கற்றுத்தரும் பாடம்

உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும் (யோபு 8:7) பல நேரங்களில் நமது துவக்கங்களில் சில எதிர்மறையாய் துவங்கிவிடுவதோ அல்லது தொடக்கத்திலேயே நாமே ஏதோ தவறிழைக்கும்போதோ சோர்ந்துவிடுகிறோம். ஆனால் வேதம் “ஒரு காரியத்தின் துவக்கத்தைப்பார்க்கிலும் அதின் முடிவு நல்லது” (பிரசங்கி 7:8) என்கிறது.

இன்றும் சிலர் திருமணவிழாவுக்காக பணத்தை இலட்சக்கணக்கில் கடன்வாங்கி செலவிட்டு பணத்தை வீணடிப்பதைக் காணமுடிகிறது. கேட்டால் “இது வாழ்க்கையில் ஒருநாள்” இதை பிரம்மாண்டமாக நினைவில் நிற்கும் வகையில் செய்ய வேண்டும் என்பார்கள். ஆனால் திருமணம் என்பது ஒரு துவக்கப்புள்ளிதான். அதன்பின்னர் வாழ்க்கையை எப்படி நடத்துகிறோம் என்பதே காரியம். திருமண விழாவில் பிர்ம்மாண்டம் காட்டிய பலர் திருமணமாகி சில ஆண்டுகளுக்குள்ளாகவே வாழ்க்கைத் துணையை ‘அம்போ’ என்று தவிக்கவிட்டு விலகி ஓடுவதைக் காணமுடிகிறது.

எனவே தொடக்கமல்ல, தொடர்ச்சி சரியாக இருக்கிறதா என்பதையே நாம் முதன்மையாகக் கொள்ளவேண்டும்.

யாராவது கூகுளை googol என்று எழுதினால் அதை ஸ்பெல்லிங் மிஸ்டேக் என்று சொல்லிவிடுவோம். ஆனால் உண்மையில் அதுதான் சரி, google என்பதுதான் ஸ்பெல்லிங் மிஸ்டேக்.

கூகுளின் நிறுவனர் லாறி பேஜ் முதலில் தனது தேடுபொறிக்கு Backrub என்றுதான் பெயர் வைத்திருந்தார். அதன் பின்னர் வேறு ஏதாவது நல்ல பெயர் வைக்கலாம் என்ற எண்ணத்தில் தனது சகாக்களுடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்த போது, தனது புதிய தேடுபொறியின் பெயர் “கணக்கிலடங்காத எண்ணைக் குறிக்கும்” சொல்லாக இருக்க வேண்டும் என தனது குழுவினரிடம் தெரிவித்திருந்தார்.

அங்கிருந்த சீன் ஆண்டர்சன் என்பவர் “googolplex” என்ற பெயரைப் பரிந்துரை செய்திருக்கிறார். ஒன்றுக்கு அடுத்து நூறு பூஜ்ஜியங்கள் போட்டால் வரும் எண்ணுக்குத்தான் googolplex என்று பெயர். அது லாறிக்கு மிகவும் பிடித்திருக்க, அதை இன்னும் சுருக்கமாக googol என வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லவே, அப்போது கம்பியூட்டரில் அமர்ந்திருந்த சீன் ஆண்டர்சன் googol என்பதற்கு பதிலாக google என்று தவறாக டைப் செய்து Domain name – ஐப் பதிவு செய்திருக்கிறார். இப்படியொரு ஸ்பெல்லிங் மிஸ்டேக்கில்தான் கூகுள் பிறந்தது. ஆனால் அது இன்று அடைந்திருக்கும் அபார வளர்ச்சியைப் பாருங்கள்! (இது கூகுள் முதன்முதலில் தொடங்கப்பட்ட Stanford Computer Graphics Lab மூலம் பெறப்பட்ட தகவல்)

எனது திருமணம் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணமாக இருந்தாலும், அது பயங்கரமான பொருளாதார நெருக்கடிக்கிடையிலும், குடும்ப பிரச்சனைகள் மத்தியிலும், கடுமையான மனப்போராட்டங்களுக்கு நடுவிலும் நடந்து முடிந்தது. எங்கள் திருமண ஆல்பத்தைப் பார்த்தால் முதலில் எங்களுக்கு நினைவுக்கு வருவது அந்த காலங்களில் நாங்கள் சந்தித்த போராட்டங்கள்தான்.

ஆனால் கர்த்தர் கிருபையால் கடந்த 14 ஆண்டுகளாக ஆசீர்வாதமான இரு குழந்தைகளுடன் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை கர்த்தர் அருளியிருக்கிறார். இப்போது அந்த பழைய சோகங்களை நாங்கள் நினைப்பதில்லை, நினைத்தாலும் அந்த வலிகள் இப்போது எங்கள் மனதில் இல்லை. கர்த்தர் அதிசயமாக எங்களை நடத்திவந்த பாதையை எண்ணி அவரை மகிழ்ச்சியுடன் துதிக்கிறோம்!

எனவே உங்கள் குடும்ப வாழ்க்கையோ, ஊழியமோ தொடக்கங்கள் சொதப்புவது குறித்து கவலைப்படாதிருங்கள்! கர்த்தருக்குள் நிலைத்து நின்று முடிவில் சம்பூரணத்தை அனுபவிப்பதை மட்டும் இலக்காகக் கொள்ளுங்கள். கர்த்தர் பிரமிப்பூட்டும் வகையில் உங்களை நடத்துவார்!

## ட்வீட் - 31

எருசலேமில் கேயாசியாய் வாழ்வதை விட பாபிலோனில் தானியேலாய் வாழ்வது மேல். சபைக்குள் இருந்து அரசியல் செய்பவனைவிட அரசியல் கட்சிக்குள் இருந்து சேவை செய்பவன் மேலானவன்.

## 32. ஆனால் முடிவில்.....

**ஆதாம் – ஏவாள்:**
கனி புசித்தால் கண் திறக்கும் என்றது சர்ப்பம்
உடனடியாக கண் திறந்ததா? “ஆம்” – ஆனால்
முடிவில் மனுக்குலம் பெற்றது சாபமே!
தேவன் விலக்கியதை வைராக்கியமாய் விலக்குக!

**நோவா:**
அழிவு வருகிறது பேழை செய் என்றார்
உடனடியாக அழிவு வந்ததா? “இல்லை” – ஆனால்
முடிவில் மனுவர்க்கம் காக்கப்பட்டது!
தாமதம் ஏற்படினும் அவர் இட்டபணி முடித்திடுக!

**ஏசா:**
புத்திர பாகத்தைவிட பயற்றங்கூழ் இனித்தது.
உடனடியாகப் பெற்றானா? “ஆம்” – ஆனால்
முடிவில் ஆகாதவனென்று தள்ளப்பட்டான்!
ஆசிகள் அற்பமானவை அல்லவென்று அறிக!

**யோசேப்பு:**
தேவன் எதிர்கால தரிசனங்கள் கொடுத்தார்.
உடனடியாக அவை நிறைவேறிற்றா? “இல்லை” – ஆனால்
முடிவில் யோசேப்பு பெற்றது கிரீடம்!
தேவன் தரும் தரிசனத்தை தயங்காமல் தொடர்க!

**இஸ்ரவேலர்:**
நியாயாதிபதியல்ல ராஜாவே தேவையென வாதிட்டனர்.
உடனடியாகப் பெற்றார்களா? “ஆம்” – ஆனால்
முடிவில் அதே ராஜாக்களால் வழிகெடுக்கப்பட்டார்கள்!
தேவன் தருவதே உகந்ததெனக் கொள்க!

**எரிகோ கோட்டை:**
ஏழுநாள் சுற்றிவந்து எக்காளம் ஊதச் சொன்னார்
உடனடியாக இடிந்ததா? “இல்லை” – ஆனால்
முடிவில் தகர்க்கவியலாக் கோட்டை தரைமட்டமானது!
எதிர்மறைச் சூழலிலும் விசுவாசம் காக்க!

**தாவீது:**
அதிகார போதையில் பத்சேபாளை இச்சித்தான்!
உடனடியாகக் கிடைத்தாளா? “ஆம்” – ஆனால்
முடிவில் துதி வீரன் வாழ்வில் கரும்புள்ளி விழுந்தது!
பிறன்மனை நோக்கா பேராண்மை காக்க!

**சிம்சோன்:**
பரிசுத்தப் பாதை துணிகரமாய் விலகினான்
உடனடியாக வீழ்ந்தானா? “இல்லை” – ஆனால்
முடிவில் இகழப்பட்டு இழிவைச் சுமந்து மரித்தான்!
எவ்விலை கொடுத்தேனும் பரிசுத்தம் காக்க!

## ட்வீட் - 32

செய்ய வேண்டிய பணியை முழுநிறைவாக செய்துவிட்டு, கீழே உண்மையான தாழ்மையோடு "அப்பிரயோஜனமான ஊழியக்காரன்" என்று கையெழுத்திடும்போதுதான் Performance ஊழியமாக மாற்றமடைகிறது.

## 33. விண்மீன்களை ஆளுகிறவர்!

அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? (யோபு 38:31)
கார்த்திகை மீனைக் கட்டி விலங்கிடுவாயோ? (யோபு 38:31 திருவிவிலிய மொழிபெயர்ப்பு)
Canst thou bind the sweet influences of Pleiades (Job 38:31)

பக்தனாகிய யோபு வாழ்ந்ததாகக் கருதப்படும் காலம் கி.மு 2350-க்கும் கி.மு 1750-க்கும் இடைப்பட்டது என்று வேதாகம அறிஞர்கள் சொல்லுகின்றனர். அதாவது ஜலப்பிரளயத்துக்கும் மோசேக்கும் இடைப்பட்ட காலம்.

கார்த்திகை நட்சத்திரக் கூட்டம் என்று தமிழில் அழைக்கப்படும் பிலேயடஸ் நட்சத்திரக் கூட்டம் பற்றி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய யோபுவிடம் தேவன் பேசுகிறார். பழங்காலத்தில் வானில் இந்த நட்சத்திரக் கூட்டம் மிகத் தெளிவாகத் தெரிந்ததாகவும், ஆதி அமெரிக்க பழங்குடிகள் கண் பார்வையினுடைய வலிமையைச் சோதிப்பதற்கு பிலேயடஸைப் பார்த்து அதில் பிரதான 12 நட்சத்திரங்களைக் காணமுடியுமா என்று சோதிப்பார்கள் என்றும் தகவல்கள் காணக் கிடைக்கின்றன.

இந்த பிலேயடஸ் விண்மீன் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று அறிவியலாளர்கள் கூறுகிறார்கள். அவற்றில் பல நமது சூரியனைவிடப் பெரியவை. நம்முடைய பூமியிலிருந்து 400 ஒளியாண்டுகள் தூரத்தில் இருக்கிறது. சரி, இந்த நட்சத்திரக் கூட்டம் பற்றி தேவன் ஏன் யோபுவிடம் பேசுகிறார் என்ற விஷயந்தான் நம்மை வியப்பில் ஆழ்த்தக் கூடியது.

மற்ற நட்சத்திரக் கூட்டங்களில் இருந்து பிலேயடஸ் சற்று வேறுபட்டது. பொதுவாக நட்சத்திரக் கூட்டங்களில் உள்ள நட்சத்திரங்கள் தங்களுக்குள் தனியான சுற்றுவட்டப் பாதைகளில் ஒன்றுக்கொன்று வேறுபட்ட வேகத்தில் சுற்றும்.

ஆனால் பிலேயடஸ் Open Cluster வகையைச் சேர்ந்தது. அதில் உள்ள அனைத்து விண்மீன்களும் ஏதோ ஒரு அதிசய வல்லமையால் கட்டுண்டதுபோல ஒரே வேகத்தில் ஒரே திசையில் சுற்றுகின்றனவாம். பொதுவாக நட்சத்திரக் கூட்டங்களில் run away stars என்று அழைக்கப்படும் தன்னிச்சையாக அலைந்து திரியும் நட்சத்திரங்கள் இருக்கும். ஆனால் இந்த நட்சத்திரங்கள் அனைத்தும் கடந்த 100 மில்லியன் ஆண்டுகளாக தங்களது இணைப்பை விட்டு விலகாமல் இருக்கின்றன என்கிறார்கள் அறிவியலாளர்கள். இந்த பிணைப்பு இன்னும் 250 மில்லியன் ஆண்டுகள் தொடருமாம்!

நட்சத்திரங்களைப் பேரிட்டு அழைக்கிற தேவனின் வார்த்தைதான் எவ்வளவு வலிமையானது. பல நேரங்களில் நமது பிரச்சனைகள் தேவனைவிட வலிமையானது என்று எண்ணி

சோர்ந்துவிடுகிறோம். பல ஆயிரம் சூரியன்களைக் கட்டி நடத்தும் தேவனுடைய வார்த்தை எத்தனை வலிமையானது என்பதை உணர்த்தவே இந்தக் கட்டுரை!

அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் (சங்கீதம் 33:9)

## ட்வீட் - 33

சமூக வலைதளங்களில் தர்க்கங்களை தவிருங்கள்:

ஒழுங்காக "வேத தியானம்" செய்து வந்த பலரை "வாத தியானம்" செய்ய வைத்த பெருமைக்குரியது முகநூல் (Facebook). உடல் நலம் கருதி முழு இரவுகளை முழங்காலில் செலவிட தயங்குவோரைக் கூட விவாதங்களில் வெல்வதற்காக விடிய விடிய விழிகளுக்கு விலங்கிட வைத்ததுதான் இந்த முகநூல் செய்த சாதனை.

தங்களை மாற்றிக்கொள்ள மனமற்றவர்கள் முன் முத்துக்களை நாம் ஏன் கொட்ட வேண்டும்? தர்க்கங்களில் நேர்மைகள் இருப்பதில்லை, வெறும் நேர விரயங்கள் மட்டுமே மிஞ்சுகிறது. 'வார்த்தையை' விவாதம் செய்து காப்பாற்ற யாராலும் இயலாது. வார்த்தையானவர்தான் நம்மையும், அண்ட சராசரங்களையும் படைத்துக் காக்கிறவர்.

ஐயங்களை அன்புடன் போக்குவது வேறு, விதாண்டாவாதமாக விவாதம் புரிவது வேறு. விவாதித்து வெல்ல வேண்டியதல்ல, வார்த்தையை சொல்ல வேண்டியது மட்டுமே நமது கடமை.

தர்க்கங்களை தவிர்ப்போம்!

# 34. பெண் என்பவள்…

கர்த்தர் சகல உயிரினங்களையும் ஆணும் பெண்ணுமாக படைத்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஆனால் மனிதனை உருவாக்கும்போது மட்டும் இருவரையும் ஒரே நேரத்தில் உருவாக்கவில்லை. ஆதாம் சிறிதுகாலம் ஏதேனில் தனியாக இருந்தான். ஆதாம் தனது தேவையை உணர்வதற்கு முன்பாகவே அதை தேவன் நன்கு அறிந்திருந்தார்.

பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் (ஆதி 2:18)

இந்தச் சூழலில்தான் தனியாக இருந்த ஆதாமிடம் அனைத்து உயிரினங்களுக்கும் பெயரிடும்படி பணிக்கிறார் (ஆதி 2:19,20). ஒருவேளை அனைத்து உயிரினங்களும் ஜோடுஜோடாக இருப்பதைப் பார்த்து ஆதாமும் தனக்கு ஒரு துணையின் தேவையை நிச்சயம் உணர்வான் என்று நினைத்தாரோ என்னவோ!

உயிரினங்களுக்கு பெயரிட்டு முடித்தபின்னர். ஆதாமும் ஒருவேளை தேவன் நினைத்தபடியே ஒரு துணையின் தேவையை உணர்ந்திருக்க வேண்டும். எனவே அடுத்த வசனத்திலேயே தேவன் செயலாற்றுகிறார்.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார் (ஆதி 2:21)

தேவனிடம் உள்ள ஒரு அழகான குணம் அவர் முதலாவது விருந்தை ஆயத்தம் பண்ணிவிட்டு விருந்தாளிகளை அழைக்கிறவர். இந்த குணாதிசயத்தை நாம் வேதாகமம் முழுவதிலும் காணலாம். மனிதனுக்குரிய உணவு உறைவிடத் தேவைகள் அனைத்தையும் முதலாவது படைத்த பிறகுதான் கடைசியில் ஆதாமை தேவன் படைத்தார் என்று பார்க்கிறோம். ஒருவேளை பெண்ணை ஆணுக்கு பணிவிடை செய்யும் பாத்திரமாக மட்டும் தேவன் நினைத்திருந்தால் முதலில் ஏவாளைப் படைத்துவிட்டு பின்னரே ஆதாமைப் படைத்திருந்திருப்பார். ஆனால் அப்படி நடக்கவில்லை.

படைப்பின் வரலாற்றில் தேவன் மனிதனுக்கு தேவையை உணரவைத்து, அதற்காக அவனைக் காத்திருக்க வைத்து கொடுத்த ஒரே ஒரு காரியம் “பெண்ணின் துணை” மட்டுமே! எனவேதான் மற்ற எல்லாவற்றையும் குறித்து “ஆண்டுகொள்” என்று கட்டளையிட்ட தேவன் மனைவியிடம் மட்டும் “அன்புகொள்” என்று கட்டளை விதிக்கிறார்.

எனவே மனைவியை வெறும் அடிமைப் பிண்டமாக மட்டுமே நினைக்கும் கணவன் கிறிஸ்தவனாக மட்டுமல்ல, மனிதனாகக்கூட இருக்கமுடியாது!

## ட்வீட் - 34

நமது ஆவிக்குரிய வாழ்வின் வெற்றி கிறிஸ்து நிரப்பும்படி நாம் நம்மை எவ்வளவு வெறுமையாக்குகிறோம் என்பதில் இருக்கிறது.

## 35. ஜெபமும் விசுவாசமும்

ஜெபமும் விசுவாசமும் பிரிக்க முடியாத இரட்டையர்கள். ஒன்று இன்றி இன்னொன்று பயனற்றது. ஒன்றை மகிமைப்படுத்தி இன்னொன்றை மட்டுப்படுத்துதல் தகாதது. ஆண்டவர் விசுவாசிக்கிறவனிடத்தில் “கேள்” என்கிறார் (லூக்கா 18: 35-43), ஜெபிக்கிறவனிடத்தில் விசுவாசி என்கிறார் (மாற்கு 11:24).

“விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்” (யாக் 5:15)

விசுவாசத்தை மையப்படுத்தும் பிரசங்கங்கள் அதிகரித்து வரும் நாட்கள் இவை. விசுவாசம் மகா உன்னதமானது என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது. ஆனால் ஜெபமும் அதே அளவு மகா முக்கியமானது என்பதற்கு வேதத்தில் மிக மிக வலிமையான சான்று ஒன்று உள்ளது.

அது என்ன தெரியுமா?

“இயேசு ஜெபித்தார்”

(லூக்கா 3:21, மத்தேயு 14:23, மாற்கு 6:46, லூக்கா 6:12, லூக்கா 9:18, மத்தேயு 26:39,42,44, லூக்கா 22:32… இன்னும் பல வசனங்கள்)

## ட்வீட் - 35

**ஒரு கத்தரி வெயில் பதிவு:**
வெயில் காலத்தில் தனக்கு ஏசி வேண்டும் என்று ஜெபிப்பதைவிட எல்லோருக்கும் மழை வேண்டும் என்று ஜெபிப்பது புத்தியுள்ள பொதுநல ஜெபம்!

## 36. எது முக்கியமான செய்தி?

ஒரு திருச்சபையில் செய்தியளிக்க ஒரு பிரசங்கியார் வந்திருந்தார். இதற்கென வெகுநாட்கள் ஜெபத்தில் அவர் ஆயத்தம் செய்து வைத்திருந்த செய்தி “விசுவாசத்தினால் உண்டாகும் நீதி” என்பதாகும். கூட்டத்துக்கு முந்திய நாள் சபை இளைஞர்கள் சிலர் அவரை சந்திக்க வந்தனர். அவர்கள் அவரிடம் “நாளைக்கு எது குறித்து போதிக்கப் போகிறீர்கள்?” என்று கேட்க அவர் “விசுவாசத்தினால் உண்டாகும் நீதி” என்றார்.

இளைஞர்களில் ஒருவன் பிரசங்கியாரிடம், “ஐயா உலகம் அழிவை நோக்கி விரைவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. அந்தி கிறிஸ்துவின் அதிகாரபூர்வ ஆட்சி மிகவும் நெருங்கிவிட்டது போல தெரிகிறது… ஏதேதோ வடிவங்களில் அரசாங்கங்கள் அடையாள அட்டைகளை மக்கள் மீது திணிக்கத் துவங்கியிருக்கின்றன. இந்த அடையாள அட்டைகள் எப்போது வேண்டுமானாலும் 666 முத்திரையாக மாற்றப்பட்டு நம் நெற்றிகளிலோ அல்லது வலக்கரங்களிலோ பதிக்கப்படலாம். இதுபோன்ற சூழலுக்கு எப்படி தப்புவது என்று கற்றுக்கொடுங்கள் அதுதான் இன்றைய உடனடித் தேவை” என்றானாம்

அதற்கு பிரசங்கியார் “அந்தி கிறிஸ்துவின் முத்திரையை தரித்தால் நித்தியத்தை எங்கே கழிப்பீர்கள்?” என்று கேட்க அதற்கு அந்த இளைஞன் “நரகத்தில்” என்று பதிலளித்தான். “பெயர் கிறிஸ்தவராக பாவத்தில் வாழ்ந்து மரித்தால் உங்கள் நித்தியத்தை எங்கே கழிப்பீர்கள்?” என்று கேட்க “அதே நரகத்தில்தான்” என்று பதிலளித்தான்.

பிரசங்கியார், “நம்மை பாவத்துக்குள் தள்ளும் சரீரத்தை மேற்கொள்ளுவது எளிதா? அல்லது இராணுவங்களையும், சட்டங்களையும், ஆயுதங்களையும் வைத்து தனது முத்திரையை ஏற்க நம்மை மிரட்டும் உலக வல்லாதிக்கத்தை மேற்கொள்ளுவது எளிதா? என்று கேட்க சற்று யோசித்த அந்த இளைஞன், “நமது சொந்த சரீரத்தையே சமாளிக்க முடியவில்லை என்றால் ஒரு உலக வல்லாதிக்கத்தை எப்படி சமாளிக்க முடியும்?” என்று அவரையே திருப்பிக் கேட்டான்.

பிரசங்கியார் சிரித்தபடியே, “அதனால்தான் பாவத்தோடு போராடிக் கொண்டிருக்கும் நமக்கு “விசுவாசத்தினால் உண்டாகும் நீதி” என்ற செய்தி மிகவும் முக்கியமானது. நீங்கள் இன்று கிறிஸ்துவின் நீதியுடையவர்களாக வாழ்ந்து கொண்டிருந்தால் வரப்போகும் வல்லாதிக்கத்தைக் குறித்தோ அந்திகிறிஸ்துவின் முத்திரை குறித்தோ அச்சப்படவேண்டியதில்லையே” என்றாராம்.

## ட்வீட் - 36

**ஒரு கிறிஸ்துமஸ் பதிவு:**
மனுபுத்திரரை தேவபுத்திரர் ஆக்கும்படிக்கு தேவகுமாரன் மனுஷகுமாரன் ஆனார்.

## 37. விருந்தோம்பல், ஒரு ஆவிக்குரிய அழகு

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்பூர் இளஞ்சிவப்பு நகரம் (Pink City) என்று அழைக்கப்படுகிறது. இந்நகரில் அனைத்து கட்டிடங்களும் இளஞ்சிவப்பு நிறத்திலேயே இருக்கும்.

அதற்குக் காரணம் என்ன தெரியுமா?

1876-இல் அரசர் ராம்சிங், ஜெய்பூர் நகருக்கு வந்த வேல்ஸ் நாட்டு அரச குடும்பத்தினரை வரவேற்க விருந்தோம்பலின் நிறம் என்று கருதப்படும் இளஞ்சிவப்பை (terracotta pink) நகரில் இருக்கும் அனைத்து கட்டிடங்களிலும் பூசினார் என்று வரலாறு கூறுகிறது. இன்றளவும் ராஜஸ்தானில் திருமண நிகழ்ச்சிகளின்போது விருந்தினரை வரவேற்க இளஞ்சிவப்பு நிறத் தலைப்பாகை அணிவது வழக்கம்.

விருந்தோம்பலைக் குறிக்கும் நிறம் இளஞ்சிவப்பு என்பது ஒருபுறமிருக்க, இன்று பலருக்கு வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தாலே கோபத்தில் முகம் சிவந்துவிடுகிறது. விருந்தோம்பல் என்ற மிக மேன்மையான பழக்கத்தை நாம் படிப்படியாக இழந்துவருகிறோம்.

நமது ஆதிப் பெற்றோராகிய ஆபிரகாமும் சாராளும் விருந்தோம்பும் பழக்கத்தில் சிறந்து விளங்கியவர்கள் என்பதை நாம் வேதத்தின் வழியாகக் காணமுடிகிறது. அப்படித்தான் அவர்கள் தேவத்தூதர்களைக்கூட உபசரித்தார்கள் என்று பார்க்கிறோம். ஆபிரகாம்-சாராளைப் பார்த்து வளர்ந்த லோத்தும்கூட விருந்தோம்பும் பழக்கத்தில் சிறந்தவர் என்பதை நாம் ஆதியாகமம் புத்தகத்தில் காணமுடியும். மத்தியக் கிழக்கு நாடுகளில் பண்டைய காலங்களில் ஒரு வீட்டுக்கு வெளியே சென்று கொண்டிருக்கும் அந்நியர் ஒருவரை அவ்வீட்டில் வசிப்பவர்கள் இல்லத்தினுள் வருமாறு அழைப்பு விடுப்பர். குடும்பத் தலைவர் அந்த அந்நியரின் பாதங்களைக் கழுவி, உணவு மற்றும் திராட்சை ரசத்தை அளித்து அவர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட பிறகே அவரது பெயர் என்னவென்பதைக் கேட்கும் பழக்கம் இருந்ததாகக் காண்கிறோம்.

விருந்தோம்பல் என்பது நமது ஆவிக்குரிய முன்னோர்களின் குணாதிசயம் மட்டுமல்ல, நமது தமிழரின் மரபும்கூட.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு.

என்று திருக்குறள் கூறுகிறது. அதாவது “குடும்ப வாழ்வில் பொருள்களைச் சேர்ப்பதும் காப்பதும் வந்த விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உதவுவதற்கே ஆகும்” என்று பொருள். இப்படி விருந்தோம்பல் குறித்து திருக்குறளிலும் மற்ற தமிழ் இலக்கியங்களிலும் பல குறிப்புக்கள் உள்ளன.

அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு (எபிரேயர் 13:2)

### ட்வீட் - 37

குடும்பத்தை சபை போல நடத்தும் தகப்பன்மார்களும், சபையை குடும்பம் போல நடத்தும் மேய்ப்பர்களும் உள்ள கிறிஸ்தவ சமூகம் உருவாகிவிட்டால் அதுவே இறையரசு!

## 38. வடிகட்டி(Filter) அவசியத் தேவை

வேதத்தை தனது சொந்த ஆதாயத்துக்காக திரித்து போதிக்கும் ஊழியர்கள் அநேகர் உள்ளனர். கடைசி கால கிறிஸ்தவம் இப்படித்தான் இருக்கும் என்று ஆண்டவரும் நமக்கு முன்னுரைத்திருக்கிறார்.

ஆனால் தேவனையும், சபையையும் உயிராக நேசிக்கும் நல்ல ஊழியர்கள்கூட சில சமயங்களில் தவறான போதனைகளை கொடுத்து விடுவதுண்டு. அவர்கள் செய்யும் தவறுகள் ஆத்துமாக்களை வழிகொடுக்கும் அளவுக்கு வஞ்சகமானவைகளாக நிச்சயம் இருக்காது. ஆனாலும் வேதத்தின் படி அது தவறாக இருக்கக்கூடும். அறியாமையால் அவர்கள் அதை பிரசங்கித்திருக்கலாம். அத்தகைய தவறை நானோ, நீங்களோ யார் வேண்டுமானாலும் இழைக்க வாய்ப்புக்கள் உண்டு. எல்லோருமே அறிவில் குறைந்த மனிதர்கள் என்ற பட்சத்தில் முதலில் தவறிழைப்பதும் பின்பு திருத்திக் கொள்வதும் இயல்பான ஒன்றுதான். அப்படிப்பட்டவர்களைக் குறை சொல்வதும், குறைத்து மதிப்பிடுவதும் தவறாகும்.

ஆனால் தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் தவறான ஒரு உபதேசம் என்பது அதன் பாதிப்பை கேட்டவர்களுக்கு ஏற்படுத்தாமல் போகாது. எனவேதான் வேதம் பெரேயா கிறிஸ்தவர்களை நமக்கு உதாரணமாக முன்னிறுத்துகிறது. யாருடைய பிரசங்கத்தைக் கேட்டாலும் வேத வசனம் என்கிற ஒரு வடிகட்டியை நமது கையில் வைத்து அதன் ஊடாக ஆராய்ந்த பின்னரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வேதத்தில் வஞ்சிக்கப்பட மாட்டீர்கள் என்ற வாக்குத்தத்தம் இல்லை. வஞ்சிக்கப்படாதிருங்கள் என்ற எச்சரிப்பே உள்ளது!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## ட்வீட் - 38

அந்திகிறிஸ்து எங்கே இருக்கிறானோ தெரியாது ஆனால் அவன் வாய் எல்லாருடைய வீட்டிலும் இருக்கிறது டிவி வடிவில்!

## 39. எல்-ரோயீ!

சகல துதிகளுக்கும் ஆராதனைகளுக்குமுரிய சேனைகளின் கர்த்தருக்கு சிறப்புபெயர்கள் பல உண்டு, அந்த சிறப்புப் பெயர்களுள் சிறப்பான ஒரு பெயர்தான் “எல்-ரோயீ”. “நீர் என்னைக் காண்கிற தேவன்” என்று அதற்கு அர்த்தமாம். இந்த நாமத்தை சூட்டியவள் அவரது இரக்கத்துக்கு பாத்திரமானவள். தன் எஜமாட்டியால் ஆகாதவள் என்று தள்ளப்பட்ட ஆகார் எனும் எகிப்திய அடிமை!

எல்லோராலும் எள்ளப்பட்டு ஏதிலியாக தள்ளப்பட்டவளை எல்ஷடாயின் கரம் அணைத்தது!

அடிமையென்பதே தாழ்வு. அதிலும் தன் ஆண்டையால் துரத்தப்பட்ட அடிமைக்கு ஏது வாழ்வு? உயிரை மட்டும் சுமந்து வந்தவள் அதையும் இழக்கும் தருவாயில் எல்-ரோயீயின் வார்த்தையை சூருக்குப்போகிற வழியில் நீரூற்றண்டையில் கேட்டபின் புத்துயிர் பெறுகிறாள். சர்வ வல்லவரின் கட்டளைப்படியே சாராளிடம் திரும்பிப் போகிறாள். உலகோர் பார்வையில் அவள் இனியும் அடிமைதான் என்றாலும், வரலாறு சொல்கிறது சாராளைப் போலவே அவளும் கோடான கோடிகளுக்குத் தாய்!

பொதுவாக ஆண்டைகள்தான் தங்கள் அடிமைகளுக்குப் பெயரிடுவர். இங்கோ ஒரு ஒரு அடிமை சர்வலோக ஏக சக்ராதிபதிக்கு பெயரிடுகிறாள். அந்தப் பெயரை தானும் ஏற்றுக்கொண்டு அவர் அதை மகிழ்ச்சியுடன் தனது வேதத்தில் பதிவு செய்தும் வைத்திருக்கிறார். இந்த நாமத்தின் மூலம் சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர் தனது ஆளுகையின் கீழ் இருக்கும் தனது பணிவிடக்காரராகிய சகல ராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும், தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும்,முதலாளிகளுக்கும் பொட்டில் அறைந்தாற்போல சொல்லும் தகவல் என்னவென்றால்!

“நான் திக்கற்றவர்களின் தேவன்”

எளியவர்களையும், திக்கற்றவர்களையும் சுரண்டிக் கொழுக்கும் பெல்ஷாத்சார்களின் எண்ணச் சுவர்களில் தோன்றும் கையுறுப்பு அவர்களின் ஈரக்கொலை நடுங்கும்படி இந்த நாமத்தைத்தான் எழுதும் “எல்-ரோயீ”

மத்தேயு 25-ஐ வாசித்துப்பாருங்கள். அங்கே இறுதிநாளின் தீர்ப்பை செலுத்தப்போகிறவர் இந்த எளியோரின் தேவன்தான்! அங்கே எளியோர்க்கு இரங்கியோர் மீது இரக்கமுள்ள நியாயத்தீர்ப்பு எழுதப்படுகிறது. இரங்காதோரை இரக்கமின்றி இருள் கவ்விக் கொள்ளுகிறது! இங்கே கவனிக்கப்பட வேண்டியது மிகவும் சிறியவர்களாகிய இவர்களுக்கு என்பதல்ல, மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் “ஒருவனுக்கு” என்பதே!

பழைய ஏற்பாட்டு ஆகாரிலிருந்து, புதிய ஏற்பாட்டு ஒநேசிமு வரைக்கும் அவர் அடிமைகளுக்கு அநுகூலக் கர்த்தர்!

எகிப்திய காளவாயில் ஈசாக்கின் பிள்ளைகள் அடிமைகளாய் ஆளோட்டிகளின் நிமித்தம் இட்டக் அபயக் குரலைக்கேட்டு ஓரேப்பிலே பச்சைப் புதரொன்று பற்றி எரிந்தது!

எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் “பார்க்கவே பார்த்து”… பாருங்கள்… இங்கும் வந்திருப்பவர் அடிமைகளின் இரட்சகராம் அதே எல்-ரோயீ!

அவ்வளவுதான்…பிடித்தது பார்வோனுக்கு அனத்தம்… எகிப்திய ஆண்டையின் ஆட்டத்தை அடக்க பத்து வாதைகள் எனும் எறிகுண்டுகளைச் சுமந்தபடி கையில் பிரம்புடன் புறப்பட்டு வந்தான் பக்தனொருவன்…மோசே எனும் சரித்திர நாயகன்! ஆண்டவரின் பலத்த கரம் அடித்த அடியில் அடங்கியது வல்லரசு! அடிமைகளுக்காக பரலோகம் தொடுத்த அந்த பிரம்மாண்டப் போரைக் கண்டு அன்று பிரமிடுகளும் பிரமித்துப் போயிருக்கும்!

ஆக்கினையின் பிடியில் ஐசுவரியவானும், ஆபிரகாமின் மடியில் லாசருவும்! இது நமக்கு தெரிந்த கதைதானே! இக்கதை சொல்லும் பாடம் என்ன? ஒருநாள் தலையெழுத்துகள் தலைகீழாக திருப்பப்படும், இன்று லாசருக்களிடம் தனது மேஜைகளின் “துணிக்கையை” வீசுவோர், நாளை அதே லாசருவின் “நுனிக்கையில்” இருந்து சொட்டும் நீருக்காக ஏங்க வேண்டியிருக்கும்! அவர் அனைத்தையும் காண்கிற தேவன்! நீதியுள்ள நியாயாதிபதி!!

ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற (நீதி 31: 8,9) என்பது இராஜாவாகிய லெமுவேலுக்கு அவன் தாய் உரைத்த வசனங்கள். கர்த்தரின் பிரமாணங்களை உணர்ந்தவள் அவள்! பேசமுடியாதோருக்காக பேசாதவனின் கரங்கள் செங்கோல் பிடிப்பதற்கே தகுதியற்றவை! ஊருக்கே உணவளிக்கும் உழவர்கள் வாழ வழியற்று விஷமருந்தி மடிவது கண்டும் மனம் பதறாத அதிபதிகள் அமர்ந்திருப்பது சிம்மாசனமல்ல, அது யாருக்கும் பயனற்ற ‘சும்மா’சனம்! அப்படிப்பட்ட அரசுகளின் சிரசுகள் தாங்கள் அணிந்திருக்கும் மணிமுடிகளை இழக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. வலியோரின் நன்மைக்காக எளியோர் சுரண்டப்படும்போது எளியோர் இடும் கூக்குரல் கேட்டு எல்-ரோயீ இறங்கி வரத்தான் செய்வார். அவர் களத்தில் இறங்கிய பின்னர் மலைகளே…குன்றுகளே மறைத்துக் கொள்ளுங்களே என ஓலமிட்டு ஓடி பயனில்லை!கார்ப்பரேட்டுகள் தங்கள் கரன்சிகளைக் கொட்டி கட்டித்தந்த கான்கிரீட் கோட்டைகள் அன்று யாரையும் பாதுகாக்காது!

இன்று வியாபாரத்திலும், அதிகாரத்திலும் கோலோச்சுபவர்கள் யூதர்கள்! இன்று வேண்டுமானால் அவர்கள் இறையாசியால் பில்லியன்களில் புரளலாம். ஆனால் அவர்களை தேவன் தெரிந்துகொண்ட விதம் கூறுகிறார் கேளுங்கள்!

கர்த்தராகிய ஆண்டவர் எருசலேமுக்குச் சொல்லுகிறார், கானான் தேசமே உன் உற்பத்திக்கும் உன் பிறப்புக்கும் இடம், உன் தகப்பன் எமோரியன், உன் தாய் ஏத்தித்தி.உன் பிறப்பின் வர்த்தமானம் என்னவென்றால், நீ பிறந்த நாளிலே உன் தொப்புள் அறுக்கப்படவுமில்லை; நீ சுத்தமாவதற்குத் தண்ணீரினால் குளிப்பாட்டப்படவுமில்லை; துணிகளில் சுற்றப்படவுமில்லை.

உனக்காகப் பரிதபித்து, இவைகளில் ஒன்றையாகிலும் உனக்குச் செய்ய ஒரு கண்ணும் உன்பேரில் இரக்கமாயிருந்ததுமில்லை; நீ பிறந்தநாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்துவிடப்பட்டாய்.நான் உன் அருகே கடந்துபோகும் போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப்பார்த்து: பிழைத்திரு என்றேன் (எசேக்கியேல் 16: 3-6)

மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் “கண்டு”, உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் “பார்த்து” – அன்று எல்-ரோயீயின் இரக்கப் பார்வையில் சிக்கியது அந்த

சின்னஞ்சிறு சிசு! அவர் அதை நோக்கி “பிழைத்திரு” என்று சொன்ன ஒரே வார்த்தை, இன்றுவரை யுகங்கள் பல சென்றும், பிரளயங்கள் பல கடந்தும் இன்னும் யூத இனத்தின் வித்தை ஜீவனோடு காத்துக் கொண்டிருக்கிறது!

எளியோரை வாட்டும் வலியோரை வதம் செய்ய ஒருபோதும் தயங்கியதில்லை தேவன்!

வலியோரிடம் லஞ்சம் பெற்று, எளியோரை குற்றவாளியாக்கும் நீதிபதிகள், கூலிக்காரரின் கூலியை வஞ்சிக்கும் முதலாளிகள், அதிகார பலம் காட்டி ஏழை நாபோத்துகளின் நிலங்களை அபகரித்த அரசியல் ஆகாப்புகள், கல்வியை வியாபாரமாக்கி ஏழைகளுக்கு அறிவைத் தர மறுக்கும் கல்விக் கொடையாளிகள், சாவுடன் போராடும் ஏழையின் உடலைக்கூட காசின்றி தொட மறுக்கும் மருத்துவர்கள், சபையிலிருக்கும் ஏழைகளை திரும்பிக்கூடப் பார்க்காத போதகர்கள், எளியவர்களிடம் வனவிலங்கு போல நடந்து கொள்ளும் காவல்துறையினர், ஏழைச் சிறுமிகளைக் கடத்தி விபச்சார இருளுக்குள் தள்ளும் மனிதப் பேய்கள், எளியோர் சுரண்டப்படுவதைக் கண்டும் காணாமலிருக்கும் அதிகாரிகள், இப்படி தனது கண்ணின் மணிகளை துணிகரமாக தொட்ட ஒவ்வொருவனுடனும் இறைமகனுக்கு தீர்க்க வேண்டிய கணக்கு ஒன்றிருக்கிறது!

இப்போதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள்… குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள் (சங் 2:10,12)

இப்படிப்பட்டவர்களுக்கு நேரிடப் போவதை வேதம் இரண்டே வார்த்தையில் இரத்தினச் சுருக்கமாக முடித்து விட்டது!

“உங்களுக்கு ஐயோ!”

சூளை ஏழு மடங்கு சூடாக்கப்படுவதை அறியாமல் தேவன் சும்மா இருந்ததாக நினைத்துக் கொண்டிருந்தார்களே!

ஆனால்…

இன்றும் சூர் வனாந்திரங்களில் சுற்றித் திரிகிற ஆகார்களை அவரது கண்கள் காணவே காணுகிறது! அவர்களை ஆதரிக்க அவரது கரம் தயங்குவதே இல்லை…

அவர்தான் இயேசு!

ஒருபோதும் மாறாத தேவன் அவர், ஒருவனையும் தள்ளாத அன்பர் அவர், நிழல்போல கூட வரும் நண்பர் அவர், பரலோகத் தந்தை அவர், பறந்து காக்கும் பறவை அவர், இறந்தாலும் உயிர்ப்பிக்கும் மீட்பர் அவர்! – நாம் மறந்தாலும் பின் தொடரும் நேசர் அவர், இரக்கத்தின் சிகரம் அவர், மனதுருக்கத்தின் தேவன் அவர்!

“எல்-ரோயீ”. “நீர் என்னைக் காண்கிற தேவன்”

## ட்வீட் - 39

அற்புதத்தைக் கண்டால்தான் விசுவாசிப்பேன் என்பவர்கள் விசுவாசம் செய்யும் அற்புதங்களை தவறவிட்டு விடுகிறார்கள்.

## 40. பரிசேயன் – ஆயக்காரன் உவமை

வேதத்தில் ஆண்டவர் கூறியிருக்கும் உவமைகளை ஆராய்வது ஒரு இனிமையான அனுபவம். தோண்டத் தோண்ட ஞானப் புதையல்களுக்கு பஞ்சமே இருக்காது. எல்லா உவமைகளுமே ஒவ்வொரு முறை வாசிக்கும்போதும் புதுப்புது வெளிப்பாடுகளைத் தரும். எனவே வேதத்தில் இந்த உவமையின் மறைபொருளை நான் வெளிப்படுத்திவிட்டேன் என்று எந்தக் கொம்பனும் மேன்மை பாராட்ட முடியாது. பலமுனைகளும் மின்னும் வைரமொன்றின் ஒரு சில பகுதிகளிலிருந்து ஒளிக்கீற்று தெறிப்பதுபோல ஒரே உவமையை ஒவ்வொரு முறை வாசிக்கும்போதும் அதிலிருந்து ஒரு புதிய கோணத்தை விளங்கிக்கொள்ள இயலும். இந்த முறை பரிசேயனும் ஆயக்காரனும் ஜெபிக்கும் நிகழ்வை வைத்து ஆண்டவர் மொழிந்த உவமையை சற்று ஆராய்வோம்.

**உவமை:**

அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார். இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.

பரிசேயன் நின்று; தேவனே! நான் பறிகாரரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்.

ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார் (லூக்கா 18: 9-14)

இந்த உவமையின் நேரடிப்பொருள் யாவருக்கும் எளிதாக விளங்கும் வண்ணமே ஆண்டவர் உவமையைக் கட்டமைத்துக் கூறியிருக்கிறார். “மனிதன் சுயநீதியினாலோ, கிரியைகளினாலோ அல்ல, தேவனுடைய கிருபையினாலேயே இரட்சிக்கப்படுகிறான். எந்த மனிதனும் தனது இழிநிலையை உணர்ந்து, தன்னைத் தாழ்த்தி இரக்கத்துக்காக கெஞ்சும்போது அந்த இரட்சிப்பானது அவனுக்கு இலவசமாகக் கிடைக்கிறது” என்பதே இவ்வுவமையின் வழியாக ஆண்டவர் கூறவரும் நேரடிச் செய்தியாகும். ஆனால் அந்த செய்தியைப் பகிர ஆண்டவர் பயன்படுத்தும் இரண்டு பாத்திரங்களும் சுவாரஸ்யமானவை. ஒருவன் பரிசேயன், இன்னொருவன் ஆயக்காரன். இந்த இருவரும் யார் என்பதைச் சற்று ஆராய்வோம்.

**பரிசேயர்கள்:**

பழைய ஏற்பாட்டில் நீங்கள் பரிசேயன் என்ற பதத்தை எங்கு தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. பழைய ஏற்பாட்டின் கடைசி நூலான மல்கியா புத்தகத்திற்கும் புதிய ஏற்பாட்டின் முதல் நூலான மத்தேயு புத்தகத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த மக்கபேயப் புரட்சியின்போது முளைத்தவர்கள்தான் இந்தப் பரிசேயர்கள். “பரிசேயன்” என்ற பதத்திற்கு “தன்னை வேறுபடுத்திக் கொண்டவன்” என்று பொருள். ஏரோது கட்டின இரண்டாம் தேவாலயம் இடிக்கப்படுவதற்கு முன்னர் கிட்டத்தட்ட 6,000 பரிசேயர்கள் பாலஸ்தீனத்தில் வாழ்ந்ததாக ஜோசிபஸ் என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார்.

இந்தப் பரிசேயர்கள் யூத மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர்களாயும், சமூகத்தில் செல்வாக்கு மிக்கவர்களாகவும் வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. பொது இடங்களிலும், விருந்து வீடுகளிலும் இவர்களுக்கே முதல் மரியாதை என்னுமளவுக்கு இவர்கள் ஜனங்களின் மனங்களிலும் ஆதிக்கம் செலுத்தினார்கள். பரிசேயர்கள் அனைவரும் மோசேயின் ஆகமங்களை எழுத்தளவில் கசடறக் கற்ற அறிஞர்கள். தாங்கள் கற்றவைகளை பின்பற்றுவதில் கண்மூடித்தனமான வைராக்கியம் பாராட்டியவர்கள். தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டி, சமூகத்தில் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள அந்த முரட்டு வைராக்கியம் அவர்களுக்கு அவசியமாகவும் இருந்தது.

இவர்கள் எந்த அளவுக்கு நியாயப்பிரமாணத்தை எழுத்தளவில் கண்முடித்தனமாக பின்பற்றுவார்கள் என்றால் Gnat என்னப்படும் கொசுவை ஒத்த சிறிய பூச்சி ஒன்று கூட தாங்கள் குடிக்கும் திராட்சைரசத்தில் விழுந்துவிடாதபடி பார்த்துப் பார்த்து ஜாக்கிரதையாக வடிக்கட்டி குடிப்பார்களாம். நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கும் உண்ணக்கூடாது என்று விலக்கப்பட்ட உயிரினங்களிலேயே மிகச் சிறியது இந்தப் பூச்சிதானாம். இதைத்தான் ஆண்டவர் கொசு இல்லாதபடி வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறவர்கள் (மத் 23:24) என்று இடித்துரைக்கிறார். நியாயப்பிரமாணத்தில் உண்ணக்கூடாது என்று விலக்கப்பட்ட உயிரினங்களிலேயே மிகப்பெரியது ஒட்டகமாகும். அதுமட்டுமன்றி வெந்தயம், சீரகம் முதலான சின்னஞ்சிறு தானியங்களைக் கூட ஒவ்வொன்றாக சரியான அளவு எண்ணி தசமபாகம் செலுத்துவதை இவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

பழைய ஏற்பாட்டில் அடிக்கடி இஸ்ரவேல் மக்கள் விக்கிரக ஆராதனையில் விழுந்து சோரம் போய் ஆண்டவரால் கைவிடப்படுவதையும் தண்டனைக்கு ஆளாவதையும் நாம் வேதத்தில் வாசிக்கமுடியும். ஆனால் அந்த நிலை பரிசேயர்கள் தலையெடுத்த பின்னர்தான் அறவே மாறியது. பரிசேயர்கள் யூத சமயத்தில் மிகுந்த செல்வாக்கு செலுத்தி மக்களை மதத்தின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அதனால்தான் மிக மோசமான விக்கிரக ஆராதனையைப் பின்பற்றும் ரோம பேரரசின் கீழ் அடிமைப்பட்டிருந்த காலத்திலும் கூட இஸ்ரவேலர்கள் விக்கிரக ஆராதனையின் பக்கம் சாயவில்லை.

ஒரு விதத்தில் இது ஆரோக்கியமான விஷயமாகத் தோன்றினாலும் அதனால் தேவன் மனம் மகிழவில்லை என்பதற்கு பரிசேயர்களிடம் ஆண்டவர் இயேசு இடைப்பட்ட விதமே சாட்சியாக இருக்கிறது. ஜனங்களை விக்கிரக ஆராதனைக்குள் சாயவிடாமல் பார்த்துக் கொள்வதில் பரிசேயர்களின் சுயலாபமும் அடங்கியிருக்கிறது என்பதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். பரிசேயர்கள் மதத்தளவில் யூத சமயத்தை உயர்த்திப் பிடித்து கொண்டிருந்தார்களேயன்றி தேசத்தின் ஆவிக்குரிய வாழ்க்கையோ காரிருளைப் போல இருண்டேதான் இருந்தது.

பரிசேயர்களின் முழு கவனமும் அவர்களது இறைப்பணியும் முழுக்க முழுக்க சடங்குகளைச் சுற்றியே இருந்ததே தவிர அவர்கள் பிதாவின் இருதய விருப்பத்தை அறிந்து அதற்கு இணங்கி அதை நிறைவேற்றுவது குறித்து துளியளவும் அக்கறை செலுத்தவில்லை. இவர்கள் வெளியே தங்களைப் பரிசுத்தவான்களாகக் காட்டிக்கொண்டு மனதளவில் கேடான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். எனவேதான் ஆண்டவர் இவர்களை “வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்” என்று விமர்சித்தார். பரிசேயரைக் குறித்த ஆண்டவரின் பகிரங்க விமர்சனம் மத்தேயு 23-ஆம் அதிகாரத்தில் தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆயக்காரர்கள்:**

ஆயக்காரரும் யூதர்களே! ஆனாலும் இவர்கள் சமாரியருக்கு நிகராக யூதர்களால் வெறுக்கப்படக் காரணம் என்ன? இவர்கள் வரிவசூல் செய்பவர்களாக இருந்ததுதான். வரிவசூல் செய்வதில் என்ன பிரச்சனை இருக்கிறது. இன்றும்கூட வருமான வரித்துறையில் பணிபுரியும் நண்பர்கள் நம்மிடையே வசிக்கிறார்களே! அந்தக் காரணத்துக்காக யாரேனும் அவர்களை வெறுப்பார்களா என்ன? என்று கேட்கத் தோன்றலாம்.

அந்தக் காலச் சூழலில் வரி வசூல் செய்யும் வழக்கம் எப்படி இருந்தது என்பதைப் புரிந்து கொண்டால் ஆயக்காரர்கள் வெறுக்கப்பட்டதன் காரணத்தை நம்மால் புரிந்துகொள்ள இயலும். ரோமர்கள் வரிவசூல் செய்து அரசுக்கு செலுத்தும் பொறுப்பை யூதர்களிடமே ஒப்படைத்திருந்தனர். அந்த வேலையை செய்த யூதர்களுக்குத்தான் ஆயக்காரர்கள் என்று பெயர். அவர்கள் அரசு நியமித்திருந்த வரித் தொகையை மக்களிடமிருந்து வசூல் செய்து அதை அரசுக்கு செலுத்த வேண்டும், அரசு நியமித்த தொகை போக அதிகமாக வசூலிக்கப்பட்டதெல்லாம் ஆயக்காரர்களையே சேரும். எனவேதான் தாங்கள் கொழுக்கும்படி தங்கள் சொந்த இனமக்களையே இந்த ஆயக்காரர்கள் ஈவு இரக்கமின்றி சுரண்டினர். பிரச்சனைகள் ஏற்படும்போது தங்கள் சொந்த இனமக்களையே ரோமர்களிடம் காட்டிக்கொடுத்தனர். எதிரியைக் கூட மன்னிக்கலாம் ஆனால் துரோகியை மன்னிக்கக்கூடாது என்று இன்று ஒரு பேச்சு வழக்கு இருக்கிறதல்லவா? அந்த அடிப்படையில்தான் ஆயக்காரர்கள் அந்தச் சமுதாயத்தில் மிக மோசமானவர்களாகவும் கீழ்த்தரமானவர்களாகவும் கருதப்பட்டனர்.

அப்படிப்பட்ட ஆயக்காரர்களில் ஒருவராகத்தான் ஆண்டவராகிய இயேசுவின் சீஷனான மத்தேயு (மத்தேயு சுவிசேஷத்தின் ஆசிரியர்), ஆண்டவரால் தொடப்பட்டு மனந்திரும்பிய சகேயு ஆகியோர் இருந்தனர். சமுதாயத்தில் ஏனைய மக்கள் மதித்தது போல இயேசு பரிசேயர்களை மதிக்கவுமில்லை, மக்கள் வெறுத்தது போல இயேசு ஆயக்காரர்களை வெறுக்கவுமில்லை. மனுஷர் பார்க்கிறவிதமாக அவர் பார்க்கவில்லை. அவர் நடுநிலையாக இருந்தார். அவர் ஆயக்கார்களோடு பந்தியிருந்ததை அநேகர் பார்த்து முகம் சுளித்ததை நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கக்கூடும்.

**உவமை காட்டும் காட்சி:**

இந்த உவமையில் சுயநீதி, தனது சுய கிரியைகளில் திருப்தி மற்றும் பெருமை, ஆணவம், வறட்டு வைராக்கியம் இவற்றின் உருவகமாக பரிசேயன் நிறுத்தப்படுகிறான், இங்கே பாவ உணர்வடைதல், மனசாட்சியால் வாதிக்கப்பட்ட நிலை, தாழ்மை, உடைந்த இருதயம், இரக்கத்துக்காக கெஞ்சும் பரிதாப நிலை ஆகியவற்றின் வடிவமாக ஆயக்காரன் காட்டப்படுகிறான். இந்த உவமையில் மட்டுமல்ல உண்மையிலேயே அன்றைய சமுதாயத்தில் மதத்தலைவர்களும், ஆயக்காரர்களில் பலரும் இந்த நிலையில்தான் இருந்திருப்பார்கள் என்பதற்கு நாம் புதிய ஏற்பாட்டில் காணும் பரிசேயர்களும், சகேயுவும் ஒரு சாட்சி!

பரிசேயன் தனது சுய நீதியில் திருப்தியுற்றவனாக துணிகரமாக தேவாலயத்தின் முக்கியமான இடத்தில் “நின்று” நெஞ்சை நிமிர்த்தி ஜெபிக்கிறான். ஆயக்காரனோ தனது மனசாட்சியில் குத்தப்பட்ட மனிதனாக தூரத்தில் நின்று “தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல்” தலை கவிழ்ந்தவாறே மார்பில் அடித்துக்கொண்டு “தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்” என்று அபயமிடுகிறான். பரலோகம் பரிசேயனைப் புறக்கணித்து பாவியாகிய ஆயக்காரனைப் பட்சமாக நோக்குகிறது. அவன் நீதிமானாக்கப்பட்டவனாக தன் வீட்டுக்குத் திரும்பிப் போகிறான்.

**நமது புரிதல்:**

நமது சுயநீதிகளெல்லாம் அழுக்கான கந்தைகள் (ஏசா 64:6) என்று வேதம் சொல்லுகிறது. ஒரு மனிதனின் சுயநீதியையே அழுக்கான கந்தையாகக் கருதும் தேவன் ஒரு மனிதனின் பாவத்தை எப்படி ஏற்றுக்கொள்ளுவார்? சுயநீதியில் வாழும் பரிசேயனைப் புறக்கணித்த தேவன், பாவியாகிய ஆயக்காரனை ஏற்றுக்கொண்டது எதன் அடிப்படையில்? இங்குதான் காட்சியில் “கிருபை” வந்து நிற்கிறது. தகுதியற்ற ஒருவன் தனது தகுதியின்மையை உணர்ந்து இரக்கத்துக்காக கெஞ்சும்போது அங்கே தேவ கிருபை வந்து நின்று அவனை தூக்கியெடுக்கிறது. ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் சிலுவை மரணமே அந்தக் கிருபையை நமக்குப் பெற்றுத் தந்ததாகும். சிலுவையின்றி இரட்சிப்பில்லை!

“தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்” என்ற அழகானதொரு நீதியைக் கூறி கர்த்தர் அந்த உவமையை முடிக்கிறார். இங்கே உயர்த்தப்படுதல் என்ற பதம் ஒருவனது பொருளாதார நிலையையோ அல்லது சமூகநிலையையோ உயர்த்துவதைக் குறிக்காமல் அவர்களது ஆன்மீக நிலையை உயர்த்துவதைக் குறிப்பதாகும். ஆயக்காரன் நீதிமானாக ஆக்கப்பட்டவனாக திரும்பிப் போனான் என்று ஆண்டவர் கூறுவதிலிருந்து இங்கு உயர்த்தப்படுதல் என்ற பதம் நீதிமானாக்கப்படுதல் என்ற அர்த்ததைக் கொண்டிருக்கிறது என்பதை நம்மால் விளங்கிக்கொள்ள முடிகிறது.

### ட்வீட் - 40

எகிப்தில் தேவபிள்ளைகள் யாருக்கோ பட்டணங்களைக் கட்டிக்கொண்டிருந்தார்கள் (யாத் 1:11). கானானில் யார்யாரோ தேவபிள்ளைகளுக்கு பட்டணங்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள் (உபா 6:10). கானானாகிய தேவசித்தத்தில் இருப்பதே ஆசீர்வாதம்!

## 41. வேலையா, டார்ச்சரா?

தேவனாகிய கர்த்தருடைய கட்டளையை மீறி புசிக்கக்கூடாது என்று கட்டளையிட்ட மரத்தின் கனியை புசித்ததால் மனுவர்க்கத்தின்மீதும், மனுவர்க்கத்தின் நிமித்தம் பூமியின்மீதும் கர்த்தருடைய சாபம் வந்தது என்று வேதம் சொல்லுகிறது.

கர்த்தர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய் (ஆதியாகமம் 3: 17-19)

நெற்றி வியர்வை நிலத்தில் விழ கடினமாக உழைத்து உண்ணும் சாபத்தை மனிதன் தேவனிடமிருந்து பெற்றதாக மேற்கண்ட வேதபகுதியில் வாசிக்கிறோம். பல்வேறு மொழிகளில் உழைப்பு அல்லது வேலை என்ற வார்த்தையின் வேர்ச்சொல் வேதம் சொல்லும் வரலாற்றை மெய்ப்பிக்கும் விதத்தில் உள்ளது.

பெரும்பாலான ஐரோப்பிய மொழிகளில் வேலை, உழைப்பு என்பதைக் குறிக்கும் "Work" என்ற வார்த்தை "சித்திரவதை அல்லது உபத்திரவம்" என்ற மூலச்சொல்லில் இருந்து வந்தது என்ற தகவலை "த கார்டியன்" இதழ் வெளியிட்டுள்ளது.

வேலையைக் குறிக்கும் பிரஞ்சு மொழிச் சொல்லான travail என்பது trepaliare என்ற லத்தீன் மூலச்சொல்லியிருந்து வந்தது, இதன் பொருளும் "சித்ரவதை" ஆகும். வேலையைக் குறிக்கும் Arbeit என்ற ஜெர்மானியச் சொல் rabota என்ற ரஷ்ய மூலச்சொல்லில் இருந்து வந்தது. இதன் பொருள் "வேலைக்கார அடிமை" என்பதாகும். "ரோபாட்" என்ற சொல்லும்கூட இந்த மூலச்சொல்லில் இருந்தே வந்தது.

வேலையைக் குறிக்கும் லத்தீன் சொல்லான lavoro என்பதற்கு சிரமம்பட்டு வேலை செய்தல் என்பதே பொருளாகும்.

எல்லா சாபங்களுக்கும் ஏதேனும் ஒரு விமோசனத்துக்கான வழியும் இருக்குமல்லவா? தேவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட இந்த சாபத்திற்கு தேவனே ஒரு விமோசனத்தையும் முன்வைக்கிறார். “இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால்…கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்” (உபாகமம் 28: 1,8)

ஆம், கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து அதற்குக் கீழ்ப்படிவதிலிருந்தே எல்லா ஆசீர்வாதங்களும் துவங்குகிறது.

## ட்வீட் - 41

அந்நியபாஷை பேசும்போது மாத்திரமல்ல…
அல்லேலூயா, ஆமென் போடும்போது மாத்திரமல்ல…
பிரசங்கம் பண்ணும் போது மாத்திரமல்ல…
திருவிருந்து வாங்கும் போது மாத்திரமல்ல…
ஊமையனுக்காகவும், திக்கற்றவர்களாயிருக்கும் எல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற. (நீதிமொழிகள் 31:8)

இது ஆவிக்குரியது மாத்திரமல்ல, ஆண்டவரின் கட்டளையும் கூட….

## 42. கிடைத்தது பொம்மையா, குழந்தையா?

தங்களுக்கு கிடைக்கும் வெளிப்பாடுகளில் மேன்மை பாராட்டிக்கொள்ளும் ஊழியர்களும் தேவ பிள்ளைகளும் பலர் உண்டு! வெளிப்பாடுகள் மாம்சத்திலும் இரத்ததிலும் இருந்துகூட தோன்றக்கூடும். பரலோகத்தில் இருக்கும் பிதா தரும் வெளிப்பாடே ஜீவனுள்ளது!

அப்படிப்பட்ட வெளிப்பாடொன்று பேதுருவுக்கு கிடைத்தது. உலகம் காணாத தலைசிறந்த வெளிப்பாடு ஒன்று இருக்குமென்றால் அது இதுதான், இது மட்டும்தான்!

“இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து”

அட இது என்ன பெருசா? சண்டே ஸ்கூல் போன காலத்துல இருந்து எனக்கு இது தெரியுமே பிரதர்! என்று நமக்கு ஒருவேளை நினைக்கத் தோன்றலாம்.

இந்த அறிவை நமக்கு கிறிஸ்தவ மதம் தந்திருந்தால் அது நம் வீட்டு அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்ட புத்தகங்களுள் ஒன்று போன்றதுதான். ஆனால் இதை பரலோகத்தில் இருக்கும் பிதாவே உங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தால் இது ஒரு ஒரு வற்றாத ஜீவ நீரூற்று. உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை வறண்ட பாலைவனமாக இருந்தால்கூட அதை சோலைவனமாக மாற்ற இந்த ஒரே ஒரு வெளிப்பாடே போதுமானது.

இது உலகில் வாழும் கோடானுகோடி கிறிஸ்தவர்களுக்கு இது வெறும் அறிவுதான். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல், சாது சுந்தர்சிங், வில்லியம் கேரி போன்ற பலருக்கு அது வெளிப்பாடு. இப்போது புரிந்திருக்கும் வித்தியாசம்!

“இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்ற சத்தியத்தை அறிவாக நாம் பெற்றுக்கொள்வதில் பிசாசுக்கு ஒன்றும் பிரச்சனையில்லை. ஏனெனில் அது வெறும் மூளையோடு தங்கிவிடும். அந்த அறிவை நீங்கள் “ஊழியம்” என்ற பெயரில் பகிர்ந்தாலும் அவனுக்கு பிரச்சனை இல்லை. ஏனெனில் அது ஒரு மூளையில் இருந்து இன்னொரு மூளைக்குத்தான் பகிரப்படும்.

ஆனால் இதை வெளிப்பாடாக நாம் பெற்றுக்கொள்வதையும் நாம் பெற்றுக்கொண்டதைப் பகிர்வதையும் அவன் என்ன விலை கொடுத்தேனும் தடுக்கப் பார்ப்பான். ஏனெனில் இந்த வெளிப்பாடு ஜீவனுள்ளது. உலர்ந்த எலும்புகளை உயிர்ப்பிக்க வல்லது! இந்த வெளிப்பாட்டை நாம் விசுவாசித்தால் நாம்தான் உலகத்தை ஜெயிக்கிறவர்கள்! இந்த வெளிப்பாடு ஒரு காட்டுத்தீ இது பக்கத்திலுள்ள அத்தனை பச்சை மரங்களையும் பற்ற வைக்கும்! பவுல் கால் பதித்த இடங்களிலெல்லாம் கலவரம் வெடித்ததை நினைவுகூருங்கள். ஆசியாவே தன் கையைவிட்டுப் போவதை உணர்ந்து துடித்த சாத்தான் தனது ஜனங்களின் வாய்வழியாகவே தனது ஆதங்கத்தைக் கொட்டுவதை அப் 19:26-இல் நீங்கள் வாசிக்கலாம்.

“இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்ற சத்தியம் உங்களுக்கு கிடைத்த விதம் அறிவானால் அது உங்கள் கையில் கொடுக்கப்பட்ட குழந்தைபோல தோற்றமளிக்கும் அழகான பொம்மை. அதை நீங்கள் வாங்கி உங்கள் வீட்டு ஷோ-கேசில் வைத்துக் கொள்ளலாம். தூசு படிந்தால் அவ்வப்போது துடைத்தும் வைத்துக்கொள்ளலாம். அந்த பொம்மையை நீங்கள் புனிதமாக மதித்தபடியால் அதை உங்கள் சந்ததிக்குக்கும் பரிசாகக் விட்டுச் செல்லலாம், அதைக் குறித்து பெருமையும் பட்டுக்கொள்ளலாம்.

“இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்ற சத்தியம் உங்களுக்கு கிடைத்த விதம் வெளிப்பாடானால் அது உங்கள் கையில் கொடுக்கப்பட்ட ஜீவனுள்ள குழந்தை. அது பசிக்கும் தாகத்துக்கும் அழும், உணவை ரசித்து உண்ணும், சிரிக்கும், பின்னர் தவழும், நடக்கும், ஓடும், பாடும், பேசும்…நாளடைவில் நன்கு வளர்ந்த இளைஞனாகும். இந்த மாற்றங்கள் எங்கு நிகழும்? உங்களுக்குள்தான். நீங்கள் ஒருநாள் கிறிஸ்துவின் வளர்ச்சிக்குத்தக்க பூரண புருஷராக மாறி பிதாவுக்கு முன்பாக நிற்ப்பீர்கள்!

சபைக்கு அஸ்திபாரமே இந்த வெளிப்பாடுதானே!

இந்த வெளிப்பாடு யாருக்கு கிடைக்கிறது? தாகமுள்ளோருக்கு (யோவா 7:37), பலவந்தம் பண்ணுவோருக்கு (மத் 11:12), இறைஞானத்தை வெள்ளியைப் போலும் பொன்னைப்போலும் புதையலைப் போலும் தேடுவோருக்கு (நீதி 2:4), மீட்படைய வேண்டும் என்ற உள்ள தாகத்தோடு தட்டுகிறவர்களுக்கும், கேட்கிறவர்களுக்கும், தேடுகிறவர்களுக்கும் (மத் 7:7,8) இந்த வெளிப்பாடு தரப்படுகிறது.

சாது சுந்தர்சிங் வாழ்க்கையைப் பாருங்கள், மெய்யான இறைவன் தம்மை தனக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று ஆர்வமாக கதவை தட்டத் துவங்கியவர், பற்றியெரியும் வாஞ்சையால் கதவை முட்டவே தொடங்கிவிட்டார். உம்மை எனக்கு வெளிப்படுத்தும், இல்லையேல் சாகிறேன்! என்ற வைராக்கியமான கதறல் பரலோகத்தின் தேவனுடைய இருதயத்தை உலுக்கியே விட்டது. குமாரன் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவாக தன்னை அவருக்கு வெளிப்படுத்தினார். இந்தியாவுக்கு ஒரு மாபெரும் அப்போஸ்தலன் கிடைத்தார்.

வேத அறிவிலேயே ஊறிக்கிடந்த பிறவி கிறிஸ்தவர்கள் பலருக்கும்கூட ஒருநாள் இந்த அறிவு வெளிப்பாடாக மாறிய போது அவர்கள் வாழ்க்கையும் மாறியது. உலகத்தை புதிதாக பார்க்கத் தொடங்கினார்கள். மாம்சத்தில் வந்த கிறிஸ்துவை தேவகுமாரனென்று உணர்ந்து அறிக்கையிட்டார்கள். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையேயன்றி வேறொன்றைக் குறித்தும் மேன்மை பாராட்டுவதில்லை என்று முடிவெடுத்தார்கள். யூதர்கள் அடையாளம் கேட்கட்டும், கிரேக்கர் ஞானத்தை தேடட்டும் நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை மட்டுமே பிரசங்கிப்போம் என்று ஒப்புக்கொடுத்தார்கள். இவர்களே வரலாற்றை மாற்றியவர்கள்!

“மாம்சத்தில் வெளிப்பட்ட தேவகுமாரனாகிய இயேசுவை” மையபடுத்தாத சுவிசேஷமும், தீர்க்கதரிசனமும், போதகமும் ஜீவனற்றவை! பாழானவை, பாழ் படுத்துபவை!

பிரியமானவர்களே! பல்லாயிரம் பிரசங்கங்களை நாம் கேட்டாயிற்று. பலநூறு ஆவிக்குரிய புத்தகங்களை நாம் படித்தாயிற்று. நமது கிறிஸ்தவ வாழ்க்கை ஏன் இன்னும் ஆழமற்று, ஜீவனற்று இருக்கிறது?

நமக்கு தேவை மேலும் ஒரு பிரசங்கம் அல்ல, நம்மை உயிர்ப்பிக்கும் வெளிப்பாடு! அதுதான் உயிர்மீட்சியைக் கொண்டுவரும். சிறுசிறு வெளிப்பாடுகள் கூட வரலாற்றை மாற்றியிருக்கின்றன. ரோமர் 1:17 இல் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாகவே வேதத்தில் பதிவு செய்யப்பட்ட “”விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்” என்ற வசனம் மார்ட்டின் லூத்தருக்கு வெளிப்பாடாக கிடைத்தபோது 16-ஆம் நூற்றாண்டில் ஒரு மாபெரும் யுகப்புரட்சி உண்டாகவில்லையா?

தாகமுள்ள மனதுடையவன் தூங்க வைக்கும் பிரசங்கம் ஒன்றைக் கேட்டால்கூட அதற்குள்ளிருந்து ஒரு வெளிப்பாடு துள்ளிக்குதித்து வந்து அவன் முன் நிற்கும். நம் விருப்பமும் வாஞ்சையும்தான் காரியம்!

நான் தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன் (ஏசாயா 44:3)

## ட்வீட் - 42

உலகத்தின் பக்கம் சார்ந்து கொண்டு நாம் தேவனிடம் கேட்கும் கேள்வி: இவ்வளவு கவர்ச்சியான உலகத்தின் இச்சைகளால் ஈர்க்கப்படாமல் பரிசுத்தமாய் வாழ்வது எப்படி?

தேவன் பக்கம் சார்ந்து கொண்டு யோசேப்பு உலகத்திடம் கேட்ட கேள்வி: நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி? (ஆதி:39:9)

## 43. மருந்தும் உணவும்

எதற்கெடுத்தாலும் குறை சொல்லிக்கொண்டு, காரணமின்றி நம்மைக் காய்காமாரமாக பார்க்கும் ஒரு அதிகாரிக்குக் கீழே வேலை செய்வது எவ்வளவு கஷ்டம்! நம்மைச் சுற்றி அதேபோல 1000 பேர் இருந்து அவர்கள் நடுவில் வேலைசெய்தால் அந்த அனுபவம் எப்படி இருக்கும்! உடையிலிருந்து, உடல்மொழி வரை அத்தனையும் ஈவு இரக்கமின்றி விமர்ச்சிக்கப்படும்.

எந்த நிபந்தனையுமில்லாமல் நம்மை உயிராக நேசிக்கும் ஒரு நண்பனுடன் இணைந்து செயல்படுவது எத்தனை இனிமையானது! அதே போல நம்மை நேசிக்கும் 1000 பேர் இருந்து அவர்கள் நடுவில் பணியாற்றுவது எவ்வளவு உற்சாகமாக இருக்கும்! இவர்களுடனே இப்படியே காலெமெல்லாம் இருந்து விடமாட்டோமா என்று தோன்றுமல்லவா!

இந்த இரண்டு அனுபவங்களையும் மாறி மாறிப் பெறுவதுதான் ஒரு ஊழியக்காரனின் அனுபவம். நம்மை தம்முடைய குமாரனின் சாயலில் வளர்க்கும்படி கர்த்தரே இந்த இரு அனுபவங்களையும் வைத்திருக்கிறார். அடிப்பவரும் காயங்கட்டுபவரும் அவரே!

நான் இன்னும் குறையுள்ளவர்களாக இருக்கிறபடியால் நம்மை பண்படுத்தும்படி நமக்கு முதல் அனுபவம் தேவையாக இருக்கிறது. இல்லாவிட்டால் “இது தேவசப்தம்” என்று ஆர்ப்பரிக்கும் ஒரு கூட்டத்தை தன்னை சுற்றி வைத்துக்கொண்டு தேவதூதனால் அடிக்கப்பட்டு புழுபுழுத்து செத்த ஏரோதின் கதை போல நம் கதையும் ஆகிவிடும்.

குறையுள்ள நமக்கு சரி, குறையற்ற இயேசு ஏன் இந்த வழியாக கடந்து செல்ல வேண்டும்? அவர் மட்டும் இந்தப் பாதை செல்லாவிட்டால் நமக்கு முன்மாதிரி ஏது? உமக்கென்ன ஆண்டவரே, நீர் ஊழியம் செய்தபோது உமக்கு எந்த பிரச்சனையும் இல்லை, என் நிலைமை உமக்கு என்ன தெரியும்? என்று நாம் அவரையே குறைத்து மதிப்பிட்டு விடுவோம்.

குறைகள் நம்மில் இருந்தாலும் நாம் தேவனால் மிகவும் நேசிக்கப்படுபவர்களாக இருக்கிறபடியால்தான் இந்த இரண்டாவது அனுபவத்தை கர்த்தர் நமக்குத் தந்திருக்கிறார். நம்மை உயிரென நேசித்து ஊழியத்தில் உற்சாகப்படுத்தும் சகோதர சகோதரிகள் இல்லாவிடில் நாம் மனக்கிலேசத்தில் நொறுங்கியே போய் விடுவோம். தேவன் தமது அன்பை கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

இந்த இரு தரப்பாருமே நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நன்மை செய்பவர்களே! இருவரையும் நாம் நேசிக்கத்தான் வேண்டும். முதல் தரப்பார் இரண்டாம் தரப்புக்கு மாறுவதும், இரண்டாம் தரப்பார் முதல் தரப்புக்கு மாறுவதும் சாத்தியமே!

பின்னவர்கள் இனிப்பான உணவென்றால், முன்னவர்கள் கசப்பான மருந்து. மருந்து, உணவு இரண்டுமே நமக்கு அவசியம்! இரண்டையும் நமக்குக் கொடுக்கும் நமது தகப்பன் நம்மை வளர்த்தெடுப்பதில் அத்தனை அக்கறையுள்ளவர்!

### ட்வீட் - 43

வாழ்க்கை என்பது நமது வாக்குப்பதிவு இயந்திரம் போல, ஏற்கனவே எல்லாம் அழகாக தீர்மானிக்கப்பட்டு விட்டது. நீங்கள் free will என்ற பெயரில் எந்த பொத்தானை அழுத்தினாலும் கடைசியில் தேவ திட்டம் என்ற தாமரைதான் மலரும்!

# 44. ஒன்றுமில்லாமை எனும் உச்சகட்ட வெற்றி!

உலகத்தில் எந்த மனிதனும் பேசியிராத, பேசமுடியாத சில வசனங்களை இயேசுவால் மாத்திரமே பேச முடிந்தது. அவற்றுள் ஒன்றுதான் இந்த யோவான் 14:30 “இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை” என்கிற வசனம். வேதத்தில் எனக்கு மிக மிக மிக பிடித்த வசனங்களில் இதுவும் ஒன்று. இது வெறும் வசனமல்ல.. ஒட்டுமொத்த மனுக்குலத்தின் பிரதிநிதியான மனுஷகுமாரனின் வெற்றி முழக்கம்!

இந்த ஒன்றுமில்லையின் அர்த்தம் வெறுமை அல்ல…ஆளுமை! ஒன்றுமில்லை என்றவரின் கை வெறுங்கை அல்ல, சாத்தானை செவுட்டில் அடித்து வீழ்த்திய பெரும் கை!

அந்த ஒன்றுமில்லைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போமா!

ஆராதனைக்காரன் லூசிபரை அருவருப்பின் அடையாளமாக மாற்றியதுதான் இந்தப் பெருமை எனும் பாவம், அந்தப் பெருமை வறுமையுற்றது இயேசுவிடம் மட்டுமே! அல்லும் பகலும் ஆராதிக்கப்பட்டவராக இருந்தும் அனைத்தையும் துறந்து அடிமை ரூபமெடுத்து மனுஷசாயானவரிடம் பெருமையை எங்கே தேடுவது? ஆராதித்தவனை வீழ்த்திய பெருமையால் ஆராதிக்கப்பட்டவரை அணுகக்கூட முடியவில்லை. உலகில் யாரையும் என்னால் வீழ்த்த முடியும் என்று இனி பெருமை பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது! ஆக…பெருமை இவர்முன் நில்லாது!

பயம் என்பது மனிதனின் நிழல் போன்றது. அது அவனை எப்பொழுதும் விடாமல் தொடர்கிறது. இயேசுவோ தாம் எதற்காக, யாரால், இன்னவிதமாய் மரிக்கப் போகிறோம் என்று தெரிந்தே பிறந்தார். அவர் உடல் பிளக்கப்பட்ட போதுகூட இரத்தமும் தண்ணீருந்தான் மிச்சமின்றி வந்ததே தவிர அச்சம் அணுவளவேனும் வெளியேறவில்லை. அது இருந்தால்தானே வருவதற்கு? காரிருளில் கரும் கடலுக்குள் கடும்புயல் வீசிகொண்டிருக்கையில் அதற்குள் சாவகாசமாக வாக்கிங் போவதற்கு வேறு யாரால் முடியும்? கொடுங்கோலன் ஏரோது அதிகாரத்தில் இருக்கையிலேயே சொல்லி வைத்து அவன் எல்லைக்குள்ளேயே பிறந்தவர் இவர்! வளர்ந்து நாட்டு நடப்புகளைக் கண்டபின்னராவது இவருக்கு ஏரோதிடம் பயம் வந்ததா? எள்ளளவும் இல்லை, நான் சொன்னதாக போய் அந்த நரிக்கு சொல்லுங்கள் என்ற இந்த யூத ராஜசிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டு உள்ளூர்க்காரர்களுக்கு மட்டுமல்ல உலகத்தின் அதிபதிக்கே உள்ளூர உதறல் எடுத்திருக்கும்! கொடும் மரணத்துக்கே அஞ்சாவர் களிமண்ணான ஏரோதைக் கண்டா அஞ்சுவார்! அவன் மணிமுடி இவர் காலடி தூசுக்கு சமம்! ம்ம்ம்..பயமும் இவரிடம் செல்லாது!

உலகோர் எல்லோருக்கும் கவலைகளை அள்ளித்தரும் கொடூரக் கொடையாளிதான் இந்த உலகத்தின் அதிபதி. அப்படிப்பட்ட அவனையே கன்னத்தில் கை வைத்து கவலையுடன் மூலையில் அமரவைத்தவர்தான் இயேசு! காரணம் இவரை வீழ்த்தும் ஆயுதம் எதுவும் அவனிடம் இல்லை. அவனது பிரதான அஸ்திரமாகிய மரணத்தையே முனையை மழுங்கடித்து மூலையில் வீசிவிட்ட இந்தக் கன்மலையிடம் இனி வேறு எந்த ஆயுதத்தைக் கொண்டுதான் மோதுவது?! காகங்களையும் காட்டு புஷ்பங்களையுமே கவலைக்குள்ளாக்க விடாமல் உணவளித்து, உடுத்துவிக்கும் அவர் தானா கவலைப்படுவார்? அண்ட சராசரங்களைக் கட்டி ஆளும் எல்ஷடாயின் பிள்ளை இவர், கவலை என்றால் கிலோ என்னவிலை என்று கேட்கும் இடத்திலிருந்து வந்தவர் இவர். ஆக கவலையும் இவரிடம் ஃபெயில்!

நசரேயனாகிய சிம்சோனைப் பதம்பார்த்த பிசாசின் ஆயுதமொன்று நாசரேத்தூர் இயேசுவிடம் மண்ணைக் கவ்வியது! அதுதான் இச்சை! இச்சையடக்கமுள்ள பல இளைஞர்களைப் பிசாசு பார்த்திருப்பான். ஆனால் இச்சையடக்கமே ஒரு இளைஞனாக வந்ததை அவன் இயேசுவிடம்தான் பார்த்திருப்பான்! தாவீதின் வம்சம்தானே! பத்சேபாள்களுக்கு மயங்கிவிடுவார். எல்லோரையும் இச்சையை வைத்து இம்சை செய்வதுபோல இவரையும் பிடித்துவிடலாம் என்று மனக்கணக்கு போட்டிருப்பான். ஆனால் இயேசுவுடன் இடைப்பட்ட கன்னிகைகள் யாவரும்

கண்ணியமுள்ளவர்களாய் மாறினார்களே தவிர இவரைக் கண்ணிகளால் வசப்படுத்த யாராலும் இயலவில்லை! பிதாவின் திவ்ய பிரசன்னத்தில் திருப்தியடைந்தவர் இவ்வுலகத் தேன்கூடுகளை மிதிக்கத்தானே செய்வார்! (நீதி 27:7) ஆக இச்சை எனும் விக்கெட்டும் அங்கு காலி!

பிலேயாமையும் கேயாசியையும் கொள்ளை கொண்ட பொருளாசையே, போய் இறைமகன் இயேசுவைக் கவர்ந்து கொண்டு வா! என்று ஒரு வேளை உலகத்தின் அதிபதி பொருளாசையை அனுப்பியிருப்பான். அது இவரது முகவரியை விசாரித்துப் பார்த்து மிரண்டே போயிருக்கும்! வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்கு பாதபடி என்று சொன்னவரின் பிள்ளையை எந்தப் பொருளைக் காட்டி மயக்குவது?! பொன்னும் வெள்ளியும் வேண்டுமானால் இவரிடம் மயங்கி இவர் பின்னாலே போகும். இருக்கிறவராகவே இருக்கிறவரின் இன்முகத்தையே தரிசித்த இவருக்கு இகத்திலுள்ள இரத்தினங்கள்கூட இருளாகத்தானே தெரியும்!? தன் முதல் முயற்சியிலேயே தலைகுப்பறக் கவிழ்ந்தது பொருளாசை!

இயேசுவை பிடிக்க முடியாவிட்டாலும், இயேசுவை பிடிக்க முயன்றவர்களைப் பிடிக்க பிசாசுக்கு உதவியதுதான் இந்தப் பொறாமை எனும் பேராயுதம்! இயேசுவைப் பிடிக்க பொறாமைக்கு கட்டளை கொடுக்கலாம் ஆனால் யாரைக் கொண்டு இயேசுவை பொறாமைக்குள்ளாக்குவது? இந்தக் கேள்விக்கு பிசாசிடம் இன்றுவரை பதில் இல்லை! முக்காலத்திலும் எக்காலத்திலும் அப்படியொருவன் வந்ததுமில்லை, வரப்போவதுமில்லை. ஆகவே பொறாமைக்கு இப்போரில் பங்கே இல்லை!

பெருந்தீனிக்காரர் பல்லாயிரம் பேரைக் கண்டவனாயிற்றே பிசாசு! பெருந்தீனியால் இவரை வசப்படுத்தலாம் என்று நினைத்து, உலகின் எந்த மூலையில் இருந்தாலும் எத்தனை கோடிகள் செலவிட்டாலும் இவரது விருப்ப உணவைக் கொண்டு இவரை உணவுக்கு அடிமையாக்குவது என்று முடிவெடுத்து இவரது ஃபேவரைட் மெனு எதுவென ஆராய்ந்தவன் பிதாவின் சித்தம் செய்வதே இயேசுவின் விருப்ப உணவு (யோவா 4:34) என்று அறிந்து அதிர்ந்தே போய்விட்டான்! காரணம் அந்த உணவை இவர் உண்டால் இவன் யுகாயுகங்களாகக் கட்டிவைத்த அஸ்திபாரங்களே நொறுங்கி விடுமே!இயேசுவின் விஷயத்தில் சாஅத்தான் பெருந்தீனியை பட்டினி போடவேண்டியதாயிற்று! ஆக பெருந்தீனி முதல் சுற்றிலேயே நாக்அவுட்!

மூர்க்கம், உக்கிரம், எரிச்சல் என்ற மூன்றையும் அனுப்பிப் பார்த்தான்… அவைகள் மூர்க்கமாக முன்னேறிச் சென்று இயேசுவுக்குள் உக்கிரமாக நுழைய முயன்று ஊசிமுனையளவும் இடம் காணாமல் எரிச்சலுடன் திரும்பி வந்தன. தாங்கள் கால் நுனி வைக்கக்கூட அந்த நடமாடும் தேவாலயத்தில் இடமில்லையென அவை தங்கள் எஜமானனிடம் அறிக்கையிட்டன!

இனியும் வேறென்ன?…

தான் ஆணென்ற அகங்காரம் இல்லை, அழகனென்ற அகம்பாவம் இல்லை, யூதனென்ற இனப்பெருமை இல்லை, வேற்று இனத்தோர்மேல் வெஞ்சினமும் இல்லை, பேதைகள்மேல் உதாசீனம் இல்லை, மேதை என்கிற மமதையும் இல்லை, ஒடுங்கிக் கிடக்க விலங்குகள் இல்லை , முடங்கிக் கிடக்க சோம்பலும் இல்லை, மதவாதிபோல் மாய்மாலம் இல்லை, பரிசேயன்போல பகல்வேஷமும் இல்லை, யூதத் தலைமைக்கு இணங்கவில்லை, ரோம அரசுடன் தோழமையும் இல்லை, சொத்துக்கள் குவிக்கும் இலக்குகள் இல்லை, சொந்தங்கள் ஆதிக்கம் செலுத்த அனுமதித்ததும் இல்லை, ஆசாரியப் பட்டங்களுக்கு அலைந்ததும் இல்லை, மோசேயின் சட்டங்களை மீறியதும் இல்லை, தாசரின் தவறுகளை உணர்த்தத் தயங்கியது இல்லை, சீசரின் வரிகளைச் செலுத்த தாமதித்ததும் இல்லை. வறுமையை பிடித்துக்கொள்ளவில்லை, ஐசுவரியத்திடம் பிடிபடவும் இல்லை, நோய்கண்டு வாடியதில்லை, பேய்கண்டு ஓடியதுமில்லை, வெறுப்பு இல்லை, கசப்பு இல்லை, சலிப்பு இல்லை, நடிப்பு இல்லை, உலகத்தின்மேல் பிடிப்பும் இல்லை, பகைமை இல்லை, கயமை இல்லை, சிறுமை இல்லை, வெறுமை இல்லை, பிதாவோடு இருந்ததால் தனிமையும் இல்லை. இல்லை இல்லை இல்லை..ஒன்றும் இல்லை…

“இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை”

அவரது காலுக்கடியில் குற்றுயிராய் நெளிந்து கொண்டிருந்த தலை நசுக்கப்பட்ட சர்ப்பமொன்று ஆமோதித்து முணுமுணுத்தது.. ஆம் அவருக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை… என்னிடமும் அவரை வீழ்த்த ஒன்றுமில்லை….

## ட்வீட் - 44

அன்று சிலர் ஆண்டவரைக் குறித்து அவரிடமே வினவியபோது அவர் சொன்ன நறுக்கான பதில்:

"வந்து பாருங்கள் (யோவான்1:39)"

போய்ப்பார்த்தவர்கள் சகலத்தையும் விட்டுவிட்டு அவரது சீஷர்களாய் மாறிப்போனார்கள்…

வேதாகமத்தை நாம் பல நேரங்களில் சுரத்தையின்றி பாடப் புத்தகம் போல வாசிப்பதால் நமது ஹீரோ பேசிய பல அழகான பஞ்ச் டயலாக்குகளை ரசிக்காமல் கடந்துவிடுகிறோம். அவரது ரசிகனாய் மாறாமல் சீஷனாக மாறுவது எப்படி?

## 45.இராயனுக்கு அபயம்

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு விரோதமாக யூதர்கள் ரோம அரசிடன் புகார் செய்து விசாரணை என்ற பெயரில் அவரை கைது செய்து, கொலை செய்யும் நோக்கத்தில் இருந்தார்கள். அவர்களது திட்டத்தை அறிந்த பவுல் விசாரணையின் போது மிக ஞானமாக தனது வாயைத் திறந்து சொன்ன ஒரு வார்த்தை ஒட்டு மொத்த சூழலையும் புரட்டிப் போட்டது. அவர் சொன்ன வார்த்தை "இராயனுக்கு அபயமிடுகிறேன் (அப்: 25:11)"

அந்த வார்த்தை விசாரணையின் போக்கையே மாற்றியது, எதிராய் குரலெழுப்பியவர்கள் அடங்கிப் போனார்கள். பவுல் ரோமக் குடியுரிமை பெற்றவர், அந்த நாட்டின் சட்டதிட்டங்களை அறிந்தவர். "இராயனுக்கு அபயம்" என்ற வார்த்தை எவ்வளவு வலிமையுள்ளது என்பதை அறிந்து வைத்திருந்தார். அதைப் போலவே தாவீதும் நெருக்கடியான சூழலில் "தேவனிடத்தில் அபயமிடுதலின்" வலிமையை நன்றாகவே அறிந்து வைத்திருந்தார். அப்படியொரு சூழலில் தான் தேவனிடத்தில் அபயமிட்டபோது என்ன நடந்தது என்பதை அழகாக எழுதிவைத்திருக்கிறார்.

எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று.அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது, அவர் கோபங்கொண்டபடியால் பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது. (சங்கீதம் 18: 6,7)

தொடர்ந்து நடக்கும் காரியங்கள் அந்த அதிகாரம் முழுவதிலும் எழுதப்பட்டிருக்கிறது. வாசித்துப் பாருங்கள், தனது பிள்ளைக்கு ஒரு பிரச்சனையென்றால் ஊரையே அல்லோகலப் படுத்திவிடும் ஒரு பாசக்காரத் தகப்பனைப் போல களமிறங்கிய கர்த்தருடைய வைராக்கியத்தைக் கண்டு தேவதூதர்கள்கூட நடுங்கியிருப்பார்கள். கர்த்தருடைய கோபத்தில் பூமியின் அஸ்திபாரங்கள் குலுங்கியதாக வேதம் சொல்லுகிறது.

இன்றும் நமக்கு கஷ்டமான சூழல்கள் வரும்போது நாமும் தேவனை நோக்கி அபயமிடுகிறோம். ஆனாலும் அந்த அபயக் குரலுக்கு பரலோகத்தில் இருக்கும் மரியாதையும், அதன் அதிகாரமும் வலிமையும் நமக்கு தெரிவதில்லை. அழுது, புலம்பி, கத்தி, கதறி மனதில் ஒரு ஆறுதல் வந்த பின்னர்தான் நமது ஜெபம் கேட்கப்பட்டதாக ஒரு உறுதி நமக்கு வருகிறது. தேவனிடம் அழுது புலம்புவது தவறல்ல, வேறு யாரிடம் போய் நமது உள்ளக் குமுறல்களைக் கொட்ட முடியும்? ஆனால் அழுது புலம்பியதால்தான் ஜெபம் கேட்கப்பட்டது என்ற எண்ணம்தான் தவறு.

அந்த ஆறுதல் ஜெபம் கேட்கப்பட்டதனால் வந்த ஆறுதல் அல்ல, அதிகமாக அழுது புலம்பியதால் மூளையில் feel-good hormone என்றழைக்கப்படும் எண்டோர்ஃபின் சுரந்ததால் வந்த ஆறுதல். ஆனால் உண்மையில் நீங்கள் ஜெபிக்கும் முன்னரே தேவனிடமிருந்து தீர்வு வெளிப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை.

தேவகுமாரன் தன்னை தாவீதின் குமாரன் என்று அழைத்துக் கொண்டார், ஆனால் தாவீது தன்னை தேவகுமாரன் என்று அழைத்துக் கொள்ள முடியாது. என்ன இருந்தாலும் அவர் பழைய ஏற்பாட்டு தேவனுடைய தாசன்தான். ஆனால் நானும் நீங்களும் தேவனுடைய சுவீகார குமாரரும், குமாரத்திகளுமாய் இருக்கிறோம் என்பதை மறவாதிருங்கள். தாசனாகிய தாவீதின் அபயக் குரலுக்கே அவ்வளவு மரியாதையிருக்குமானால்...பிள்ளைகளாகிய நீங்களும் நானும் அபயமிடும்போது....?

## ட்வீட் - 45

தங்க வீதிகளும்,  கொட்டிக் கிடக்கும் இரத்தினங்களுமல்ல. இயேசுவை ரசிப்பதே நித்தியத்தில் நம் மகிழ்ச்சிக்கு ஆதாரமாயிருக்கப் போகிறது. அதை இங்கேயே செய்யத் தொடங்கினால் என்ன?

## 46. இதுதான் பரலோக கெத்து!

இதுதான் பரலோக கெத்து!

இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது (ஏசாயா 9:2)

இது ஆண்டவராகிய இயேசு பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னர் ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம். இன்னும் பல நூறாண்டுகள் கழித்து நடக்கப்போகும் ஒரு விஷயத்தை ஏற்கனவே நடந்து முடிந்தது போல டிக்ளேர் செய்திருக்கிறது பரலோகம்! இது எப்படி சாத்தியம்!!

ஒருவேளை மனுஷகுமாரன் பிறப்பதற்கு சரியான சூழல் பூமியில் அமையுமா? அப்படிப் பிறந்தாலும் இந்த கோணலும் மாறுபாடுமான உலகத்தில், அதுவும் நன்மையே வராத நாசரேத்தில் அவரால் ஒரு பழுதற்ற ஆட்டுக்குட்டியாக வாழ்ந்து காட்ட முடியுமா? சிலுவையின் கோரப் பாடுகளை அவரால் சமாளிக்க முடியுமா? அவர் சமாளித்து வென்றாலும் இந்த பலவீனமான மனிதர்களை நம்பி மார்க்கத்தை அவர்கள் கையில் கொடுக்க இயலுமா என்றெல்லாம் பரலோகம்

சந்தேகத்துடன் ஆராய்ந்து கொண்டு இருந்திருக்குமானால் பெத்தலகேமில் இயேசுவின் பிறப்பு எதிரிக்குக் தெரியாமல் பரம இரகசியமாக வைக்கப்பட்டிருந்திருக்கும்.

ஆனால் இயேசு பிறந்தபோது பரலோகமோ நடுவானில் ஒரு நட்சத்திரத்தைத் தொங்கவிட்டு தூதர்களின் இசைக்கச்சேரியோடு ஒரு திருவிழாவையே நடத்திவிட்டுச் சென்றுவிட்டது. இருளின் அதிபதியோடு நடக்கவிருக்கும் யுத்தத்தில் தனது வெற்றியை மட்டுமல்ல, "நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்று அவனது எல்லை என்ன என்று அவனுக்கே சொன்னவர்தான் கர்த்தர். அதுவரை அவனுக்கே இந்த விஷயம் தெரியாது. இதுதான் பரலோக கெத்து! சொல்லாமல் தந்திரமாய் சூழ்ச்சி செய்து கவிழ்ப்பது பிசாசின் பாணி. முகத்துக்கு நேரே சொல்லி அடிப்பது பிதாவின் பாணி!

இன்றும் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கிறது. நீங்களும் நானும் செய்யும் ஊழியத்தை நம்பி அல்ல, நம்மையும் நமது ஊழியத்தையும் இயக்கும் பரம குயவனின் கரத்தை நம்பி.

என்னால் என் ஓட்டத்தை சிறப்பாக முடிக்க முடியுமா? கிரீடத்தைப் பெறுவேனா என்ற பயமும் பதட்டமும் யாருக்கெல்லாம் வருமென்றால் யாரெல்லாம் கர்த்தருடைய கரத்தை தான் பிடித்திருப்பதாக எண்ணுகிறார்களோ அவர்களுக்கே வரும். இதே போல பரலோகமும் சிந்திக்குமானால் நாம் போய் சேரும்வரை அங்கும் பயமும் பதட்டமுமே நிலைகொண்டிருக்கும். ஆனால் பரலோகத்திலோ மகிழ்ச்சிக்கும், பாடலுக்கும், துதிக்கும், ஆராதனைக்கும் எப்பொழுதுமே குறைவில்லை. பூமியில் நீங்கள் விழுந்துவிட்டதாக கருதும் அந்த கணத்தில் கூட பரலோகம் அதிர்ச்சியில் தனது ஆராதனையை நிறுத்தாது.

யாரெல்லாம் தன்னைக் கர்த்தருடைய கரம் பிடித்திருப்பதாக எண்ணுகிறார்களோ அவர்களால் இந்த பூமியிலேயே பரலோகக் கொண்டாட்டங்களை அனுபவிக்க இயலும். ஒருவனும் என்னை அவரது கைகளிலிருந்து பறித்துக் கொள்ள இயலாது என்று விசுவாசத்தோடு உரக்கச் சொல்ல முடியும் (யோவா 10:28,29).

உங்கள் வித்தைகளை நம்பாதீர்கள், உங்களுக்குள் இருக்கும் வித்தை நம்புங்கள். அப்பொழுதுதான் பிசாசுக்கும் உலகத்துக்கும் முன்பாக நெஞ்சை நிமிர்த்தி பரலோக கெத்தோடு சொல்ல முடியும். "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன் (2 தீமோ 1:12)".

## ட்வீட் - 46

ஒருகாலத்தில் உண்மையாய் ஊழியம் செய்தவர்கள் இன்று அட்டூழியம் செய்துகொண்டிருப்பது நமக்கு எச்சரிப்பையும், ஒருகாலத்தில் அட்டூழியம் செய்தவர்கள் இன்று உண்மையாய் ஊழியம் செய்துகொண்டிருப்பது நமக்கு நம்பிக்கையையும், ஒருகாலத்தில் உண்மையாய் ஊழியம் செய்தவர்கள் இன்றுவரை அதே உண்மையுடன் ஊழியம் செய்துகொண்டிருப்பது நமக்கு நன்றியுணர்வையும், ஒருகாலத்தில் அட்டூழியம் செய்தவர்கள் இன்றுவரை அதே அட்டூழியத்தை தொடர்ந்துகொண்டிருப்பது நமக்கு ஆத்துமபாரத்தையும் கொண்டுவருகிறது.

## 47. நீதிமானின் பழக்கம்

ஆதியாகமம் புத்தகம் பெருவெள்ளம் ஏற்ப்பட்ட காலங்களில் கிட்டதட்ட ஒரு ஆண்டு காலம் நோவாவும் அவரது குடும்பத்தினரும் பேழைக்குள் இருந்தனர் என்று சொல்லுகிறது. தனது 600-வது வயதில் பேழைக்குள் போன நோவா (ஆதி 7:11) ஒரு ஆண்டு கிட்டத்தட்ட கழித்து தனது 601-வது வயதில் (ஆதி8:13) வெளியே வருகிறார்.

அந்த ஒரு ஆண்டில் பூமி முற்றிலும் புதிதாக்கப்பட்டிருக்கிறது. இப்போது பூமியில் வெறும் 8 பேர் மட்டுமே இருக்கிறார்கள் (1 பேதுரு 3:20). ஒரு கடினமான சூழலில் ஒரு வருடமாய் பேழைக்குள் அடைபட்டுக் கிடந்தவர்களின் மனநிலை எப்படி இருந்திருக்கும்! வெளியே வந்து சுதந்திரக் காற்றை சுவாசிக்க எவ்வளாய் ஏங்கியிருப்பார்கள்! திருமணமான நோவாவின் குமாரர் மூவருக்கும் அதுவரை குழந்தை இல்லாதது ஆச்சரியமாக இருக்கிறது. பெற்றோரும் குழந்தைகளும் பேழைக்குள் பட்டிருக்க வேண்டிய கஷ்டத்தை தவிர்க்க எண்ணியோ என்னவோ கிருபையுள்ள தேவன் தாமதித்து ஜலப்பிரளயத்துக்கு பின்னரே அவர்களுக்கு குழந்தைப் பேறு அளித்தார்.

பேழையை விட்டு வெளியே வந்தவர்கள் என்னவெல்லாம் செய்திருப்பார்கள்! நாமாயிருந்தால் என்னவெல்லாம் செய்திருப்போம்? சந்தோஷத்தில் கால் வலிக்குமட்டும் எங்கெங்கோ ஓடி ஆடி மகிழ்ந்திருந்திருப்போம்! அல்லது எங்கே கூடாரம் போடுவது? எங்கே பயிரிடுவது? எங்கே வீட்டு விலங்குகளை மேய்ப்பது? சேம், காம், யாப்பேத் யார் யார் எந்தெந்த இடங்களை சுதந்தரித்துக் கொள்வது? எந்தெந்த மிருகங்களை யார்யார் பங்குபிரித்துக் கொள்வது இப்படி பல விஷயங்களை குடும்பமாக ஆலோசித்து விவாதித்து தர்க்கித்து ஏன் சண்டைகூட போட்டிருந்திருப்போம்.
ஆனால் நோவா செய்த காரியத்தை வாசிக்கும்போது மெய் சிலிர்த்தது. பேழையில் இருந்து வெளியே வந்த முதல் வேலையாக…

நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான் (ஆதி 8:20)

தேவனோடு சஞ்சரிக்கும் ஒரு நீதிமானின் இருதயமும் அவன் பழக்கமும் இதுவாகத்தான் இருக்கும்!

ஒருவேளை நோவாவும் அவர் குடும்பமும் இதைச் செய்யாமல் நான் மேலே சொன்னவைகளை செய்திருப்பாரென்றால் கீழ்கண்ட அத்தனை ஆசீர்வாதங்களையும் நோவாவும் நாமும் இழந்திருப்போம்.

1. நோவாவின் பலியை கர்த்தர் சுகந்தவாசனையாக முகர்ந்தார் (வச:21)
2. பூமியின்மீது கருணை கொண்டார் (வச 21)
3. இனி இன்னொரு ஜலப்பிரளயம் வராதென வாக்குப் பண்ணினார் (வச 21)
4. நாம் உண்ண விவசாயத்துக்கேற்ற காலநிலைகளை வாக்குப்பண்ணினார் (வச 22)
5. நமது பாட்டன் நோவாவையும் அவர் குடும்பத்தையும் அவர்கள் வித்தாகிய நம்மையும் ஆசீர்வதித்தார் (ஆதி 9:1)
6. மனுக்குலத்தோடு உடன்படிக்கை பண்ணினார்.(9:10-17)

கர்த்தரை முதலாவது வைத்து அவரை கனப்படுத்துவதில் இருந்தே அத்தனை ஆசீர்வாதங்களும் தொடங்குகிறது. ஆம், அவர் அந்த கனத்திற்கும் அதிலும் அதிகமான கனத்திற்கும் உரியவரே!

## ட்வீட் - 47

நீதிமானுக்கு வரும் உபத்திரவங்கள் நான் உபத்திரவப்பட்டது நல்லது என்ற வெற்றிக் களிப்போடும், துன்மார்க்கனுக்கு வரும் மேன்மை என் மேன்மையே எனக்கு கண்ணியாகிற்றே என்ற புலம்பலோடும் நிறைவடைகிறது

## 48. பின்னிட்டுப் பாராதே!

பாபிலோனின் தொங்கும் தோட்டத்தைப் பொருத்தவரை இருவேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இது அசீரிய ராஜாவாகிய சனகெரிப்பால் நினிவே பட்டணத்தில் கட்டப்பட்டது என்ற ஒரு கருத்தும். பாபிலோனிய மன்னன் நேபுகாத்நேச்சாரால் (கி.மு 605 – 562) பாபிலோனில் கட்டப்பட்டது என்றும் இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

நேபுகாத்நேச்சார் பற்றிய கதை சற்று சுவாரசியமானது. அக்காலத்தில் மீதியான் தேசத்துடன் பாபிலோன் நட்பு பாராட்டிக்கொண்டிருந்தது. அந்த நட்பின் அடையாளமாக மீதியானிய அரசன் தனது மகள் அமிட்டிஸை நேபுகாத்நேச்சாருக்கு திருமணம் செய்துவைத்தான். மீதியான் தேசம் பசுமையாக காடுகள் மிகுந்த செழிப்பான தேசம். நமக்குத் தெரியும் பாபிலோன் நகரம் இருந்த தற்கால ஈராக் ஒரு பாலைவன நாடு. ஊரே மணற்காடாய் இருப்பதைப் பார்த்ததும் நொந்து போனாளாம் அமிட்டிஸ். ச்சே...இதெல்லாம் ஒரு நாடா! என்று புலம்ப ஆரம்பிக்க அவளை சந்தோஷப்படுத்த நேபுகாத்நேச்சார் எடுத்த முயற்சிதான் இந்தத் தொங்கும் தோட்டம்.

பிரம்மாண்ட கட்டிடங்கள் எழுப்பப்பட்டு அவற்றின் மொட்டை மாடிகளில் செடிகளும், தாவரங்களும் பயிரிடப்பட்டன.  யூப்ரேட்ஸ் ஆற்றிலிருந்து கப்பி முறையில் தண்ணீரை இறைத்து குழாய்கள் வழியாகச் செடிகளுக்குப் பாய்ச்சினர். இப்படித்தான் அந்த உலக அதிசயம் உருவானது. நமது வேதாகமப் புருஷர்களாகிய தானியேல், சாதராக்,மேஷாக், ஆபேத்நாகோ வாழ்ந்தது இந்தக் காலத்தில், இதே இடத்தில்தான்.

உலக வல்லரசுகள் பற்றிய ஒரு கனவை தேவன் நேபுகாத்நேச்சாருக்கு கொடுத்தார் என்று தானியேல் 2-ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். அனைத்து வல்லரசுகளைக் காட்டிலும் நேபுகாத்நேச்சாரின் அரசே பொற்காலம் என்ற கருத்தில் "பொன்னான அந்தத் தலை நீரே" என்று தானியேல் நேபுகாத்நேச்சாரிடன் சொன்னதாக வேதம் கூறுகிறது.

அப்படிப்பட்ட பெருமைமிக்க வரலாற்றுப் புருஷனான ஒரு பேரரசனுடன் வாழ்ந்து கொண்டிருந்ததை அறியாமல் அந்த அரசி தன் சொந்த ஊரிலிருந்த மரங்களையும் செடிகளையும் நினைத்து குழந்தைபோல புலம்பிக் கொண்டிருந்ததாக பாரம்பரியக் கதைகள் சொல்லப்படுகின்றன.

இஸ்ரவேல் மக்கள் தாங்கள் 400 ஆண்டுகால அடிமைத்தனத்தில் இருந்து அற்புதவிதமாக மீட்கப்பட்டதைக் கொண்டாடாமல் "நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறோம் (எண்ணாகமம் 11:5 )" என்று சொல்லிப் புலம்பியதை நாம் வேதத்தில் வாசித்திருக்கிறோம்.

பெற்றுக்கொண்ட மீட்பின் மகத்துவத்தையும், பெற்றுக்கொள்ளப்போகும் ஜீவகிரீடத்தின் மேன்மையையும் உணராமல் போனால் பழைய வாழ்க்கையின் மாம்சீக கிரியைகள் நம்மை மீண்டும் ஈர்க்கத்தான் செய்யும்.

## ட்வீட் - 48

**சராசரி கிறிஸ்தவ வாழ்க்கை:**
விழுகை > அழுகை > எழுகை > விழுகை > அழுகை > எழுகை > ...

**“விசுவாசிக்கிற" விசுவாசியின் வாழ்க்கை:**
விசுவாசம் > வெற்றி > வளர்ச்சி > விசுவாசம் > வெற்றி > வளர்ச்சி > ...

## 49. உம்மைப்போல் யாருண்டு...

உலக வரலாற்றில் பல்வேறு அடிமைத்தனங்களுக்கு எதிராக போராடி உயிரைக் கொடுத்த புரட்சிக்காரர்கள் பலர் தோன்றியதுண்டு. ஆனால் மனிதனின் நிரந்தர அடிமைத்தனத்துக்கு காரணியான பாவத்தின் மென்னியை முறித்து பாவியை விடுதலையாக்கின நம் இயேசுவைப் போன்றதொரு புரட்சிக்காரர் இதுவரை வரலாற்றில் தோன்றியதுமில்லை பல கோடி ஆண்டுகளானாலும் இனி தோன்றப்போவதுமில்லை.

தம் உயர்வை விட்டு கீழிறங்கி மக்களோடு மக்களாக வாழ்ந்து சேவை செய்த தலைவர்கள் பலர் உண்டு, ஆனால் ஆராதனைக்குரிய தேவகுமாரனாய் இருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து சீடர்கள் பாதங்களை கழுவி, சிநேகிதருக்காக கொடூர மரணமாய் ஜீவனை விட்ட நம் இயேசுவைப் போன்றதொரு உன்னதத் தலைவர் இதுவரை தோன்றியதுமில்லை இனி தோன்றப்போவதுமில்லை.

மாபெரும் மருத்துவ சாதனைகளை செய்து நோபல் பரிசுகளை அள்ளிய மருத்துவர் வரலாற்றில் பலருண்டு, ஆனால் யாராலும் குணமாக்க முடியாத, தேவனை விட்டு மனிதனை நிரந்தரமாக பிரிக்கும் பாவம் என்னும் கொடூர ஆன்மீக வியாதிக்கு தன் இரத்தத்தையே மருந்தாகத் தந்த இயேசுவைப் போன்றதொரு ஆன்மீக மருத்துவர் இதுவரை தோன்றியதுமில்லை இனி தோன்றப்போவதுமில்லை.

பேதைகளை புறந்தள்ளி அறிவாளிகளுக்கு அறிவை போதித்து அவர்களை ஒளிரவைத்த அரிஸ்டாட்டில் போன்ற ஆசிரியர்கள் பலர் பூமியில் தோன்றியதுண்டு, ஆனால் ஞானிகளை புறந்தள்ளி மீன்பிடிக்கும் பேதைகளுக்கு அறிவை போதித்து அவர்களைக் கொண்டு உலகை கலக்கிய நம் இயேசுவைப் போன்றதொரு பேராசிரியர் இதுவரை தோன்றியதுமில்லை இனி தோன்றப்போவதுமில்லை.

தீயவருக்கு நன்மை செய்த நல்லவர்கள் இந்த பூமியில் பலர் வாழ்ந்ததுண்டு, ஆனால் தனக்கு சத்துருவாய் மாறிப்போனவர்களின் மீட்புக்காக தம் ஜீவனைக் கொடுக்கவே மனிதனாகப் பிறந்து, அவர்கள் தம்மை ஏற்றுக்கொள்ளாத போதும், கொடூரமாய் துன்புறுத்தியபோதும் தயவாக மன்னித்து அவர்களுக்காக ஜெபிக்கவும் செய்த இறைமகன் இயேசுவைப் போன்றதொரு நல்லவர் இந்த பூமியில் இதுவரை தோன்றியதுமில்லை இனி தோன்றப்போவதுமில்லை.

உத்தமர் என்று அழைக்கப்படுவோர் பலர் வரலாற்றில் வந்துபோனதுண்டு, ஆனால் குறை கண்டுபிடிப்போர் எப்போதும் அவரை சூழ்ந்திருந்த போதும் என்னில் பாவம் உண்டு என்று உங்களில் யார் என்னை குற்றப்படுத்தக்கூடும் என்று அவர்களை நோக்கி சவால்விட்டு வென்று

காட்டியதுமன்றி, பழுதற்ற ஆட்டுக்குட்டியாக பிதாவாலேயே அங்கீகரிக்கபட்ட நம் இயேசு போன்றதொரு களங்கமற்ற உத்தமர் இதுவரை தோன்றியதுமில்லை இனி தோன்றப்போவதுமில்லை.

மனிதர் மத்தியில் மேன்மைக்குரியோராய் வாழ்ந்து மரித்த பலருண்டு, ஆனால் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் யாவருடைய முழங்காலும் முடங்கும் மா உன்னத அதிபதியாக இந்த பூமியில் கால்வைத்தவர் நம் இயேசு மட்டுமே. அவரைப்போல மேன்மைக்குரியவர் இதுவரை பூமிக்கு வந்ததில்லை கோடி ஆண்டுகளானாலும் இனி வரப்போவதுமில்லை.

அறிவியல் வல்லமைகொண்டு இயற்கையின் சக்தியோடு போராடி தோற்ற பலருண்டு, ஆனால் இயற்கையை தன் விரலசைவில் அடக்கி வைத்திருந்த சர்வவல்லவர் நம் இயேசு மாத்திரமே! அவரைப் போன்றதொரு வல்லவர் இதுவரை பூமிக்கு வந்ததில்லை கோடி ஆண்டுகளானாலும் இனி வரப்போவதுமில்லை.

உம்மைப்போல் யாருண்டு எந்தன் இயேசுநாதா… இந்தப் பார்தலத்தில் உம்மைப்போல் யாருண்டு!

## ட்வீட் - 49

என்னுடைய வாழ்வில் பல வேத அறிஞர்களை சந்தித்து இருக்கிறேன், ஆழ்ந்த வேத அறிவில்லாவிட்டாலும் குழந்தை மனம் கொண்ட விசுவாசிகள் சிலரையும் சந்தித்திருக்கிறேன். குழந்தை மனம் கொண்ட விசுவாசிகளே எனது மனதில் என்றும் பசுமையாக நிலைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம்தான் நாம் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.

அதனால்தான் பரலோக ராஜ்ஜியம் குழந்தைபோல மாறியவர்களுக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்படிப்பட்டவர்களுடன் சேர்ந்து இருப்பதே ஒரு தனி மகிழ்ச்சி! ஆனால் வேத அறிஞர்கள் போடும் உபதேச சண்டைகளுக்கு அவர்களை பரலோகத்தில் அனுமதித்தால் ஆண்டவரே அங்கு நிம்மதியாக இருக்க முடியாது!!!

## 50. கலாச்சாரமல்ல…சாரமே முக்கியம்!

சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்.(அப் 15:2)

சில யூதக் கிறிஸ்தவர்கள் சபைக்குள் யூதக் கலாச்சாரத்தைப் புகுத்த முயன்றாலும் முயன்றார்கள் உடனே பவுலும் பர்னபாவும் அவர்கள் மீது புலிகளைப் போல பாய்ந்துவிட்டார்கள், பின்னே என்ன அவர்கள் நம்மைப் போலவா? எந்தக் கள்ளத்தீர்க்கனும் வந்து வாலாட்டிவிட்டுப் போகட்டும் என்று காலாட்டிக் கொண்டு அமர்ந்து வேடிக்கை பார்க்க! தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்று ஒரு பழமொழி உண்டு. நீங்கள் அவருடைய இரத்தத்துக்கு இரத்தமான சதைக்குச் சதையான உடன்பிறப்புக்களாக இருப்பீர்களானால் அப்பா வீடு சீரழிவது கண்டு நீங்கள் ஆடாவிட்டாலும் உங்கள் சதை ஆடும், இரத்தம் கொதிக்கும்.

அன்று பவுலும் பர்னபாவும் கலகம் பண்ணாதிருந்திருந்தால் நியாயப்பிரமாணம் மறுபடியும் சபையை ஆக்கிரமித்து கிறிஸ்துவின் மரணத்தை அர்த்தமற்றதாக மாற்றியிருந்திருக்கும். புதிய ஏற்பாட்டு சபையை ஒரு குறிப்பிட்ட கலாச்சாரம் ஆக்கிரமிப்பதை எந்த தேவமனிதனும் பொறுத்துக் கொள்ளமாட்டான். அது யூதக்கலாச்சாரமாக இருந்தாலும் சரி, மேற்கத்திய கலாச்சாரமாக இருந்தாலும் சரி. காரணம் சபை என்பது உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கானது. வெவ்வேறு இன, நிற, மொழிகளைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூடி ஒரே சரீரமாக மாறும் அதிசயம்தான் சபை. சபைக்கு உள்ள தெய்வீக அழகே இந்த வேற்றுமையில் ஒருமைதான். இந்த ஒருமைக்குள் நம்மை கிறிஸ்துவின் அன்பு என்ற காருண்யக் கயிறுதான் கட்டிவைக்க வேண்டுமே தவிர ஒரு கலாச்சாரக் கயிறல்ல.

பல்வேறு மக்கள் கூட்டத்தை ஒரே கலாச்சாரத்துக்குள் அடக்கி எல்லோருக்கும் ஒரே ஆராதனை மொழி, ஒரே வேதமொழி, ஒரே பழக்க வழக்கம் என்று திணித்து அதை ஒரு மதமாகவோ அல்லது ஒரு இயக்கமாகவோ கட்டி எழுப்புவது ஒரு பெரிய காரியமல்ல. அப்படி எழுப்பினால் அது முழுக்க முழுக்க மாம்சம்! ஆவியானவரோ நம்மை வேற்றுமைகளின் மத்தியிலும் சகோதர அன்பு எனும் அலங்காரக் கயிறால் நம்மை ஒன்றாகக் கட்டி அழகு பார்ப்பவர். இந்தக் கட்டுக்குள் வந்தபிறகு இனம், நிறம், மொழி எல்லாவற்றிற்கும் மரித்தவர்களாகிவிடுகிறோம்.

பிரியமானவர்களே! இந்தக் கட்டுரை எதைப் பற்றியதென்றால் நாம் ஆவிக்குரிய காரியங்களுக்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது பற்றியதுதான். குதிரைகளைக் குறித்தும் இரதங்களைக் குறித்தும் மேன்மை பாராட்டுபவர்கள் பாராட்டிக் கொண்டே இருக்கட்டும். நாமோ கர்த்தரைக் குறித்து மாத்திரமே மேன்மை பாராட்ட அழைக்கப்பட்டவர்கள்.

மாம்சக் கண்களை முற்றிலும் மூடிவிட்டு, ஆவியின் கண்களை அகலத்திறந்து பார்க்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். சீர்கேடுக்கும் கிழவிகள் பேச்சுக்கும் செவிகளை மூடி, தேவசத்தத்துக்கு செவிகளைத் திறந்து வைப்போம். பாத்திரத்தின் வெளிப்புறமல்ல உட்புறமே தேவனுக்கு முக்கியம். கலாச்சாரமல்ல, கிறிஸ்துவின் சாரமானது உப்பாகிய நமக்குள் இருக்கிறதா என்பதே பரலோகத்துக்கு நம்மீது உள்ள கரிசனை.

நம்மை ஆவிக்குரிய வளர்ச்சியில் முழுமையாக கவனம் செலுத்த அனுமதிக்க வேண்டும் என்றுதான் பாரமான வேறு எந்த சுமையையும் நம்மீது சுமத்தப் போவதில்லை என்று ஆவியானவரும் அப்போஸ்தலரும் கலந்து முடிவெடுத்தார்கள். (அப் 15:29) எவ்வளவு நல்ல தேவன் பாருங்கள்! நீங்கள் ஆவிக்குரியவர்களாக வாழும்படி கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் ஆகவே மனுஷருக்கு அவர்தம் பழக்கவழக்கங்களுக்கு அடிமைகளாகாதிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது.

அப்போஸ்தலர் 15க்காக தேவனைத் துதிக்கிறேன்! நல்லவேளை விருத்தசேதன முறை அன்றே வேரறுக்கப்பட்டுவிட்டது. இல்லாவிட்டால் கத்தி சுவிசேஷம் சொல்லும் நாம் கத்தியோடும் செல்லவேண்டியதாயிருந்திருக்கும். கத்தியும் கையுமாக வரும் நம்மைக் கண்டு ஜனங்கள் காததூரம் ஓடியிருக்க மாட்டார்களா? இருதயத்தில் செய்யப்படும் விருத்தசேதனமே விருத்தசேதனம் என்று அன்றே அப்போஸ்தலர் அறுதியிட்டுக் கூறிவிட்டனர் (ரோமர் 2:29)

நல்லவேளை (பழைய ஏற்பாட்டு) வேதகலாச்சாரத்தின்படிதான் உடையணிய வேண்டும் என்ற அவசியம் புது உடன்படிக்கை கிறிஸ்தவருக்கு இல்லை. தமிழகத் தெருக்களில் யூத உடையணிந்து நானும் என் மற்ற சகோதரர்களும் வலம் வருவதை என்னால் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியவில்லை. இவ்வித பாரத்தை நம் மீது சுமத்தாத ஆதிஅப்போஸ்தலருக்கு நன்றிகள்(அப் 15:29). மாம்சீக விழிகளுக்கு புலப்படும் வெண்ணாடைதான் அணியவேண்டும் என்றும் வேதம் சொல்லவில்லை. நீங்கள் உங்கள் கலாச்சார உடையை தாராளமாக அணியலாம். ஆனால் ஆன்மீக விழிகளுக்குப் புலப்படும் ஒரு வெண்ணாடையை நாம் இயேசுவிடமிருந்து வாங்கி அணியவேண்டும்(வெளி 3:18). மாத்திரமல்ல அந்த ஆடையை அசுசிப்படாமல் கடைசிவரை காத்துக் கொள்ளவேண்டும்(வெளி 3:4). அந்த ஆடையற்றவன் புறம்பான இருளில் தள்ளப்படுவான் என்று வேதம் எச்சரிக்கிறது(மத்22:11-13).

வேதக்கலாச்சாரத்தை அல்ல வேதவார்த்தையாகிய இயேசுவின் சாரத்தை உங்களில் ஏற்றுக்கொள்ளுங்கள்.

திருமணத்தில் நீங்கள் தாலி வேண்டுமானாலும் கட்டுங்கள், மோதிரம் வேண்டுமானாலும் மாற்றுங்கள் வேதம் இதைத்தான் செய்யவேண்டும் என்று அறிவுறுத்தவில்லை. ஆனால் கிறிஸ்து சபையை நேசிப்பதுபோல கணவன் மனைவியை நேசிக்கவேண்டும் என்றும், சபை கிறிஸ்துவுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தது போல மனைவி தன்னைக் கணவருக்கு ஒப்புவிக்கவேண்டுமென்றும் வேதம் திட்டவட்டமாக போதிக்கிறது(எபே 5), மாத்திரமல்ல நாமே கிறிஸ்துவுக்கு கறைதிரையற்ற மணவாட்டிகளாக வாழும்படி நம்மை அது அறிவுறுத்துகிறது. திருமணம் செய்யும் முறையல்ல திருமணத்துக்குப் பின் ஒரே மாம்சமாய் வாழும் வாழ்க்கையே முக்கியம். உலகத்துக்கு உப்பான நமது குடும்பங்களே சாரமற்று சாட்சியற்று வாழ்ந்தால் உலகத்துக்கு வேறு என்ன நம்பிக்கை இருக்கிறது?

நல்லவேளை அடக்க ஆராதனை முறைமைகள் சபைப் புத்தகங்களில்தான் காணப்படுகிறது வேதபுத்தகத்தில் அல்ல. மரித்தோரை புதைக்க வேண்டுமானாலும் புதையுங்கள் புதைக்க முடியாத பட்சத்தில் எரிக்க வேண்டுமானாலும் எரியுங்கள் ஆனால் சுயத்தை வென்று, கொன்று புதைக்க வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது (ரோமர் 6). சுயத்துக்கு மரிக்காத ஆத்துமாவை ஆயிரம் பிஷப்புகள் கூடி ஆராதனை நடத்திக்கூட பரலோகத்துக்குள் தள்ளிவிட முடியாது. கிறிஸ்தவக் கலாச்சாரமல்ல, கிறிஸ்துவின் சாரமே முக்கியம்.

தேவன் நமக்கு இவ்வித விடுதலை அளித்திருக்கும் வேளையில் நாம் கலாச்சாரம் என்ற பெயரில் விக்கிரக அடையாளங்களை மட்டும் சுமந்துவிடாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நம் பிள்ளைகளுக்கு அர்த்தமுள்ள வேதப்பெயர்களைச் சூட்டலாம் அல்லது அழகான தமிழ்ப்பெயரைக் கூட சூட்டலாம். வேதப்பெயரைத்தான் சூட்டவேண்டுமென்று வேதமே நமக்குச் சொல்லவில்லை. ஆனால் அவர்களை வேதத்தின்படி வளர்க்கவேண்டும் என்பதே மகா மகா முக்கியம். அப்படியில்லாததால்தான் போத்திபார் மனைவி மடியில் தூங்கும் யோசேப்புகளாலும், வயதானாலும் கர்த்தர் உரக்கக் கத்திக் கூப்பிட்டாலும் கூட காது கேட்காத செவிட்டு சாமுவேல்களாலும், ஞானம் எந்தக் கடையில் கிடைக்கும் என்று கேட்கும் சாலமோன்களாலும், மூன்று முறையல்ல மூன்று லட்சம் முறை மறுதலித்துக் கொண்டே இருக்கும் பீட்டர்களாலும் இன்றைய கிறிஸ்தவம் நிறைந்து காணப்படுகிறது.

எனக்கன்பானவர்களே கலாச்சாரமல்ல..சாரமே முக்கியம். யூதம் அல்ல வேதமே முக்கியம். பாத்திரத்தின் வெளிப்புறமல்ல உட்புறமே முக்கியம். உப்பு சாரமற்றுப்போனால், அதற்கு எதினாலே சாரமுண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள் (மாற்கு 9:50)

## ட்வீட் - 50

அடுத்த சபையுடன் ஒருமனமில்லாமல் இருக்கவேண்டும் என்பதில்
எல்லா சபைகளும்
ஒருமனமாயிருக்கின்றன...

அன்பைப் பற்றிய உபதேசத்தால் இணைந்திராமல்
உபதேசங்களின் மீதான அன்பினால்
பிரிந்து கிடக்கிறோம்...

## 51. கழுகைக் குறித்த நம்பிக்கைகள்(myths)

கழுகைக் குறித்த ஆவிக்குரிய ஒப்புமைகள் பலவற்றை நாம் பிரசங்கங்களில் கேட்டிருப்போம். பழங்காலத்தில் கழுகைக்குறித்த பல்வேறு நம்பிக்கைகள் மக்களிடையே நிலவி வந்தன. அவற்றில் எதுவும் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கபடவில்லை. ஆனாலும் அந்த நம்பிக்கைகள் அறிந்துகொள்ள சற்றே சுவாரசியமானவை. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

கண்பார்வை குறைந்த வயதில் முதிர்ந்த கழுகுகள் ஏதேனும் நீர்நிலைக்கு மேலே சூரியனின் வெயில் சுட்டெரிக்கும் அளவுக்கு உயரப் பறந்து சென்று அங்கிருந்து சூரியனை உற்றுப்பார்த்து தனது சிறகுகளையும் கண்களையும் கருக்கிக் கொள்ளுமாம். பிறகு நேரே நீர்நிலையில் வந்து பாய்ந்து அதில் மூன்று முறை மூழ்கி எழுந்தவுடன் அதன் இளம்பருவம் திரும்பத் தொடங்கும் என்பது பொதுவாக பழங்காலத்தில் நிலவி வந்த ஒரு நம்பிக்கை.

கழுகால் மட்டுமே சூரியனை நேரடியாக கண்கொட்டாமல் வெகுநேரம் பார்க்க முடியுமாம். தனது குஞ்சுகளையும் அது அவ்வாறே பழக்குவிக்குமாம். சூரியனைப் பார்க்கும்போது கண் சிமிட்டும் குஞ்சுகள் கூட்டிலிருந்து துரத்தப்படும் என்பது இன்னொரு நம்பிக்கை.

கழுகுகள் தங்களது அலகுகளை கற்பாறைகளில் மோதி உடைத்து கூர்மையாக்கிக் கொள்ளும் என்பது மற்றொரு நம்பிக்கை.

மேற்சொன்னவை மூடநம்பிக்கைகளாக இருந்தாலும். கழுகுக்கென்று பல பிரத்யேக குணங்கள் இருப்பதை அறிவியல் ஒத்துக் கொள்ளவே செய்கிறது. அவற்றில் மிக முக்கிய குணம் கடும் பயிற்சி மற்றும் முயற்சிகளின் மூலம் மேன்மையடைதல் என்பதாகும். இத்தகைய அரிய குணமே கழுகுகளை பறவைகளின் அரசன் என்று கருத வைத்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

ஆவிக்குரிய மேன்மையும் அப்படிப்பட்டதே. சோம்பேறிகளுக்கல்ல, பலவந்தம் பண்ணுகிறவர்களுக்கே பரலோக ராஜ்ஜியம் என்று மத்தேயு 11:12 திட்டமும் தெளிவுமாகச் சொல்லுகிறது. சுயத்தை சிலுவையில் அறையும் அனுபவம் என்பது கிட்டத்தட்ட அப்படிப்பட்டதுதான். அது உடலை வருத்திக் கொள்ளுதல் அல்ல, விசுவாசப் போராட்டந்தான் என்றாலும் சிந்தையில் மாம்சத்துக்கு விரோதமாக நடக்கும் விசுவாசப் போராட்டமானது சரீரத்தின் போராட்டத்தைவிட தீவிரமானது.

தேவன் நம்மை ஆளுகைக்கு ஆயத்தப்படுத்த பூக்கள் நிறைந்த பாதையை ஆயத்தப்படுத்தவில்லை. அதற்கு அவர் இராணுவப் பயிற்சிக்கு ஒப்பான களத்தையே தெரிந்து கொண்டிருக்கிறார்.

என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக்கோபு 1:2,3)

## ட்வீட் - 51

உலகத்துக்குரிய தேவைகளில் "நான் தருபவைகளை நீ ஏற்றுக்கொள், அதுவே உனக்கு நன்மை" என்று கர்த்தர் சொன்னால், "இல்லை நான் கேட்பதை எனக்குத் தாரும்" என்று அடம்பிடிக்கிறோம்!

ஆவிக்குரிய காரியங்களில் "நான் கேட்பதை எனக்குக் கொடு" என்று கர்த்தர் சொன்னால், இல்லை நான் கொடுப்பதை நீர் ஏற்றுக் கொள்ளும், இவ்வளவுதான் என்னால் முடியும் என்கிறோம். என்னே நம் பக்தி!

## 52. காரிருளிலிருந்து பேரொளிக்கு

ஆழத்தில் இருள் இருந்தது என்று ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் தொடங்கும் வேதம் கர்த்தரே வெளிச்சமாயிருப்பார் என்று வெளிப்படுத்தல் கடைசி அதிகாரத்தில் முடிகிறது. காரிருள் to பேரொளி - இதுதான் வேதம்

சுவிசேஷம் எனும் புள்ளியில் பயணத்தை தொடங்கும் நாம் கிருபை என்ற பாதை வழியே பயணிப்போமானால் முன்னோக்கிப் பயணித்து பேரொளியில் பயணத்தை முடிப்போம். பிரமாணம் என்ற பாதையில் பயணித்தால் ரிவர்ஸில், பழைய ஏற்பாடு வழியே போய் காரிருளில் பயணத்தை முடிப்போம்.

காரியம் இப்படியிருந்தாலும் கர்த்தர் தாம் கரம் பிடித்தவர்களை கைவிடமாட்டார் என்பதே வேதாகம மற்றும் அனுபவ உண்மை! ரிவர்ஸில் பயணிப்பவர்களையும் ஏதோ ஒரு புள்ளியில் சந்தித்து, நிறுத்தி, முன்னோக்கி அழைத்து வருவார். எனவே சுயநீதியை அல்ல, கிறிஸ்துவுக்குள் தேவநீதியாக நம்மை மாற்றும் கிருபையைப் பற்றிக்கொள்வோம்!

Do, Don't என்று பிரமாணத்தையே போதிக்கும் போதகர்கள் நிறைந்துள்ள நிலையில், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வரும் நீதியைக் குறித்து பேசி நம்மை மெய்யான கிருபையின் பாதையில் நடத்தும் புதிய ஏற்பாட்டு ஊழியர்களை கர்த்தர் நம் மத்தியில் அதிகமாய் எழுப்புவாராக!

## ட்வீட் - 52

**உண்மையான அன்பென்றால் கர்த்தரின் செவிக்கு இரைச்சலும் இசையாகும்...**
உன் சத்தத்தை நான் கேட்கட்டும், உன் சத்தம் இன்பமும், உன் முகரூபம் அழகுமாயிருக்கிறது. (உன் 2 :14)

**அன்பற்ற ஆராதனையென்றால் அவர் செவிகளில் இசையும் இரைச்சலாகும்...**
உன் பாட்டுக்களின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று. உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன். (ஆமோஸ் 5 :23)

## 53. பாடம் கற்ற பேதுரு

பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத்தேயு 26:33,34)

அப்போஸ்தலனாகிய பேதுரு ஆண்டவராகிய இயேசுவை உயிரைப்போல் நேசித்தார் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் அவ்வப்போது அவர் உணர்ச்சிவசப்பட்டு பேசிய வீர வசனங்களும், சுய பலத்தை நம்பி செய்த செயல்களும் ஆண்டவரால் கடிந்து கொள்ளப்பட்டதையும், பின்பு அவர் பாடம் கற்றுக்கொண்டதையும் நாம் நற்செய்தி நூல்களில் ஆங்காங்கே காண இயலும். நமக்கும் அவை நல்ல பாடமாகவே அமைகின்றன.

ஆண்டவருக்காக வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான். ஆனால் சுய பெலத்தினாலோ, மாம்சீக வைராக்கியத்தினாலோ நம்மால் ஒரு அணுவைக்கூட நகர்த்த முடியாது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்ட வெற்றிகளை நமக்கு தேவன் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார், காரணம் என்னவென்றால் அது நமக்கே நல்லதல்ல. நம்மை வெறுமையாக்கி தேவபலத்தைச் சார்ந்து செய்யும் ஊழியமும் அதில் கிடைக்கும் வெற்றிகளுமே தேவனால் அனுமதிக்கப்படுபவை. மேலும் தெளிவுக்கு கிதியோனின் சரித்திரத்தை வாசித்துப் பாருங்கள்!

வீரவசனம் பேசிய பேதுரு பாடம் கற்றுக்கொண்டார், "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று தனது இயலாமையை உணர்ந்து கண்ணீரோடே கதறிய மனிதன் அற்புதத்தைப் பெற்றுக்கொண்டான் (மாற்கு 9: 17-27). ஆனால் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பட்ட பின்னர் செயல்வீரனாக மாறிய அதே பேதுருவைக் கொண்டு தேவன் செய்த அரிய செயல்களையும் நாம் கற்றுக்கொள்ளும்படி அப்போஸ்தலர் நடபடிகளில் தேவன் பதிவு செய்து வைத்திருக்கிறார்.

என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது (யோவான் 15:5)

## ட்வீட் - 53

**Attention Christian Parents!**
பெற்றோரை கனம் பண்ண வேண்டும் (யாத் 20:12) என்ற வேத வசனத்தை நம் பிள்ளைகளுக்கு அடிக்கடி கற்றுக் கொடுக்கும் அதே வாயால், இயேசுவிலும் தன் பெற்றோரை அதிகமாய் நேசிக்கிறவன் அவருக்குப் பாத்திரன் அல்ல (மத் 8:37) என்ற வசனத்தை ஒருமுறையேனும் கற்றுக்கொடுத்திருக்கிறோமா?

## 54. அற்பமான ஆரம்பம்

இன்று மனித வாழ்வில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் பல விஷயங்கள் ஆரம்பகாலத்தில் பலரால் கண்டுகொள்ளாமல் விடப்பட்டவை, அல்லது கேவலப்படுத்தி புறக்கணிக்கப்பட்டவை. இது படைப்புகளுக்கும் பொருந்தும், படைப்பாளிகளுக்கும் பொருந்தும். மாபெரும் விஞ்ஞானிகளாக ஐன்ஸ்டீன் மற்றும் தாமஸ் ஆல்வா எடிசன் ஆகியோர் தங்கள் பள்ளிகளால் "உருப்படாத மாணவர்கள்" என்று புறக்கணிக்கப்பட்டவர்களே!

எடிசன் டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்பட்டவர், ஐன்ஸ்டீனை அவரது ஆசிரியர்கள் மனவளர்ச்சியற்ற குழந்தை என்று எண்ணினர்; அவருக்கு 9 வயதுவரை சரியாகப் பேச்சு வரவில்லையாம். ஆனால் பிற்காலத்தில் அவர்கள் சாதித்ததை இந்த உலகு அறியும்.

இந்த நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்பத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ள ஆண்ட்ராய்டு இயங்குதளத்தின் கதையும் அதுதான். ஆண்ட்ராய்டு என்றவுடன் நமக்கு மொபைல்கள்தானே நினைவுக்கு வரும்? ஆனால் ஆண்ட்ராய்டு உண்மையில் உருவாக்கப்பட்டது டிஜிட்டல் கேமராக்களுக்காக! ஆனால் இன்று ஸ்மார்ட்போன் மார்கெட்டின் 88 சதவிகிதத்தை ஆண்ட்ராய்டே ஆளுகிறது.

ஸ்மார்ட்போன் தொழில்நுட்பத்தில் ஆப்பிள், பிளாக்பெரி மற்றும் மைக்ரோசாஃப்ட் ஆகியவை கோலோச்சிய காலத்தில்தான் ஆண்ட்ராய்டு அறிமுகமானது. அக்காலத்தில் பல விமர்ச்சகர்கள் ஆண்ட்ராய்டு தேறவே தேறாது என்று அடித்துக் கூறினர். 2008 ஆம் ஆண்டு நடந்த ஒரு ஸ்மார்ட்போன்களுக்கான கருத்தரங்கத்தில் ஆண்ட்ராய்டு பற்றி கேள்வி எழுப்பப்பட்டபோது "அதை தாங்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை" என்று சில தொழில்நுட்ப வல்லுனர்கள் இழிவுபடுத்தி பேசிச் சிரித்த வீடியோ இப்போதும் யூடியூபில் உள்ளது.

இப்போது அதே யூடியூப் வீடியோவின் கீழ் உள்ள கமெண்ட்டுகளில் அந்த அதிமேதாவிகளை மக்கள் விமர்ச்சனங்களால் வறுத்தெடுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆண்ட்ராய்டைக் குறித்து அற்பமாகப் பேசி 10 ஆண்டுகளுக்குள் நிலமை தலைகீழாக மாறிவிட்டது. ஸ்மார்ட்போன்கள் மட்டுமல்லாது டிவி, கைக்கடிகாரம், ஸ்மார்ட்போன் என அனைத்தையும் இன்று ஆண்ட்ராய்டு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. மனிதரின் கணிப்புகள் முற்றிலும் தவறக்கூடும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

ஆவிக்குரிய வாழ்வின் அல்லது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் நம்மையும் குறித்து இப்படிப்பட்ட விமர்ச்சனங்கள் எழும்பியிருக்கக்கூடும். பைத்தியகாரன், பிழைக்கத் தெரியாதவன், பழம், சாமியார் இப்படி பல கிண்டல்களையும் கடந்து வந்திருப்போம். நமது தொடக்ககால பிரசங்கங்களோ, ஊழியங்களோ கடுமையான விமர்சனம் மற்றும் கேலிக்கு உள்ளாகியிருந்திருக்கலாம். ஆனால் நாம் அவற்றை புறந்தள்ளிவிட்டு கிறிஸ்துவை நோக்கி

தொடர்ந்து ஓடும்போது நமது ஆரம்பம் அற்பமாக இருந்தாலும் முடிவு நிச்சயம் சம்பூரணமாக இருக்கும். பூமிக்கு உப்பாக, உலகுக்கு வெளிச்சமாக, அநேகருக்கு சாட்சியாக கர்த்தர் நம்மை முன்னிறுத்துவார்.

நம்மை அழைத்தவர் இன்னார் என்பதை அறிந்திருப்போமானால் புறக்கணிப்புகளும், நிந்தைகளும் நம்மை முடங்கச் செய்ய அல்ல, மாறாக முடுக்கிவிடும்படி தேவனால் அனுமதிக்கப்பட்டவை என்பதை அறிந்துகொள்வோம்.

சிந்தனைக்கு:
செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம்போட்டது; அவன் கைகளே இதை முடித்துத் தீர்க்கும்; அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிவாய். அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப்பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது என்றார். (சகரியா 4: 9,10)

## ட்வீட் - 54

இயேசுவிடம் போனால் நித்தியமாக பரலோகத்தில் இருக்கலாம், எனவே இயேசுவிடம் போயே தீரவேண்டும். இது ஒருவகையான ஆசை, நல்ல ஆசைதான்...

பரலோகத்துக்குப் போனால் நித்தியமாக இயேசுவோடு இருக்கலாம், எனவே பரலோகம் போயே தீரவேண்டும். இது சரியான புரிதலுள்ள, மேலான ஆசை...

நம் நோக்கங்கள் எல்லாம் இயேசுவைச் சுற்றியே இருக்கட்டும்!

## 55. இயேசு - கீழ்ப்படிதலுள்ள ராஜா!

தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது (எபிரேயர் 10:7)

இதோ சீக்கிரம் வருகிறேன் என்றார்...
மணிமுடியணிந்து இஸ்ரவேலை அரசாளவா?
மன்னருக்குரிய மரியாதைகளைப் ஏற்றுக்கொள்ளவா?
அலங்கார மாளிகையொன்றில் இளைப்பாறவா?
பாவிகளை அழித்து பரலோக அரசை நிறுவவா?
இல்லை…இல்லை...இல்லை

மணிமுடி அணிய அல்ல, முள்முடி சூட்டிக்கொள்ள
மரியாதை பெற அல்ல மரத்தில் தூக்கப்பட்டு மரிக்க
இளைப்பாற அல்ல, பாரச்சிலுவை சுமக்க...
பாவிகளை அழிக்க அல்ல, பாவிகளுக்காக தம்மை அளிக்க…

இப்படியொரு சவாலான, யாரும் ஏற்க விரும்பாத பணியை செய்து முடிக்கத்தான் ஏதோ மகிழ்ச்சியான விழாவொன்றுக்கு வருபவரைப்போல உற்சாகமாக "இதோ சீக்கிரம் வருகிறேன்" என்றார்.

அடுத்தவன் பழியைச் தான் சுமந்து கொடூர சாவை ருசிபார்க்கும் மனம் யாருக்கு வரும்! சாதாரண மனிதர்களால் கனவிலும், கனநேரமும் நினைக்க முடியாத செயலொன்றைச் செய்ய இமைப்பொழுதும் தயங்காமல் இசைவாய் இறங்கிவர இந்த இறைமகனை ஏவிய  இயக்கு சக்தி எது?

அதுதான் கீழ்ப்படிதல்…

வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம் (சங்கீதம் 32:9 )

கீழ்ப்படிவதை எட்டிக்காயாக பார்க்கும் மனுவர்க்கதுக்கு கொடுக்கப்பட்ட எச்சரிக்கைதான் மேற்சொன்ன வசனம்.எனவேதான் அவர்களுக்கு உயர்வும் எட்டாக்கனியாக இருக்கிறது. ஆனால் இயேசுவின் கீழ்ப்படிதலோ வற்புறுத்திப் பெறப்பட்டதல்ல, பிதாவின் இதயவிருப்பத்தை அறிந்து இம்மியளவும் மறுக்காமல் இணங்குவதுதான் இயேசுவின் கீழ்ப்படிதல்!

நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது (யோவான் 4:34) என்ற அந்த "உன்னத மனநிலையே" அவரது இறைப்பணியின் இமாலய வெற்றிக்குக் காரணம்!

ரோமர்கள் கையில் சிக்கி அவமானச் சின்னமாம் சிலுவையில் மரிப்பதை விட கொடூரச் சாவு வேறெதுவும் இல்லை. அப்படி இருந்திருந்தால், அது பிதாவின் சித்தமாயிருந்தால் அதையும் ஏற்றுக்கொள்ள அவர் தயாராகவே இருந்திருப்பார். பாவத்தின் கோரமுகத்தையும், மீட்பின் திட்டத்தின் மகத்துவத்தையும் நன்கு அறிந்த அவரால் இறைத்திட்டத்துக்கு கீழ்ப்படியாமல் எப்படி இருந்திருக்க முடியும்?

கேடுகெட்ட விழுந்துபோன மனிதருக்காக தம் கடைசித்துளி இரத்தமும் தந்து மீட்டதே பெரிய கிருபை...இதுவே போதும், இதைவிட என்ன இருக்கிறது என்கிறீர்களா?

பெரிதினும் பெரிது கேளுங்கள்!

ஒரு வீட்டில் இரண்டு சகோதரர்கள் இருந்தாலே அழிந்து போகும் ஆஸ்திகளுக்காய் அடித்துக்கொள்ளும் நிலை இருக்க.. சாக்கடையிலிருந்து மீட்கப்பட்ட நம்மைத் தமது வீட்டின் ஒரு ஓரத்தில் வேலைக்காரனாக வைத்துக்கொள்ளாமல், தமது புத்திரசுவீகாரத்தை பகிர்ந்து கொடுத்து, பிதாவின் மடியில் அவரோடு சேர்ந்து அமர நமக்கும் இடம் கொடுத்தாரே! பிதாவின் இதய விருப்பத்தை அறிந்து இணங்குதல் என்பது இதுதான்!

பலிகளைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமமன்றோ! அவர் எவ்வளவாக தம்மைத் தாழ்த்தினாரோ அவ்வளவாக உயர்த்தப்பட்டார், எவ்வளவாக உயர்த்தப்பட்டாரோ அவ்வளவாக தம்மைத் தாழ்த்தினார். எனவேதான் அவரது தாழ்மையின் ஆழத்தையும் மகிமையின் உயரத்தையும் யாராலும் அளக்க முடியாது!

அவர் ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் பிதாவுக்கு கீழ்படிந்திருப்பவரல்ல, பிதாவே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்கு எப்போதும் கீழ்ப்படிந்தே இருப்பார் (1 கொரி 15:28)

வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் யாவருடைய முழங்காலும் முடங்கும் மேலான நாமத்தையுடையவர் தாமே அன்பின் பிதாவுக்கு கீழ்ப்படிந்திருப்பதிலிருந்து கீழ்ப்படிதலின் மேன்மையை நமக்குக் கற்றுத்தருகிறார்!

மேல் படி ஏறிட கீழ்ப்படி!!

## ட்வீட் - 55

மதவாதிக்கும் சீஷனுக்கும் உள்ள ஒரு வேற்றுமை என்னவென்றால், மதவாதி மனிதரிடம் கற்பவன், அவன் செய்யும் பிரசங்கங்களையும் பேச்சுகளையும் வைத்தே அவன் சபைப்பிரிவை கண்டுபிடித்துவிடலாம். சீஷனோ ஆவியானவரிடம் கற்பவன், அவன் பேசுவது எப்போதுமே எல்லோருக்கும் புதிதாக இருக்கும்.

## 56. துக்கப்படுத்தியது பாவமா, நிருபமா?

பாவம் ஒரு இரயில் இஞ்சின் என கொண்டால் அதைத் தொடர்ந்து வரும் குற்ற மனசாட்சி, துக்கம், தேவசமூகத்தை விட்டு விலகி ஓடும் எண்ணம் அதனால் ஏற்படும் ஆவிக்குரிய பலவீனம், தன் விளைவாக மீண்டும் பாவத்தினால் வீழ்த்தப்படும் நிலை ஆகியவை அந்த இஞ்சினோடு இணைக்கப்பட்ட டிரக்குகள் போல...

கிறிஸ்தவ உலகம் அந்த இஞ்சினை மட்டும்தான் தீமையாகப் பார்க்கிறதேயொழிய அதனோடு இணைக்கப்பட்ட முதல் இரு டிரக்குகளாகிய குற்ற மனசாட்சியையும், அதனால் ஏற்படும் துக்கத்தையும் கொஞ்சம் நல்ல விஷயமாகவே பார்க்கிறது. எப்படியெனில் குற்ற மனசாட்சியும் அதனால் ஏற்படும் துக்கமும் நம்மை மீண்டும் பாவம் செய்யக் கூடாதபடி நமக்கு எச்சரிப்பு உணர்வையும், பயத்தையும் ஏற்படுத்தும் என்று பலர் எண்ணுகிறார்கள். இதற்கு ஆதாரமாக அடிக்கடி சுட்டிக்காட்டப்படும் வசனம் என்னவென்றால்...

2 கொரிந்தியர் 7: 10,11
தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்.

இந்த வசனத்தை முன்பிருக்கும் வசனங்களோடு சேர்த்துப் படித்தால் எழுதப்பட்டிருப்பத்கு என்ன என்பது புரியும்.

வசனம் 8: "நான் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும், அந்த நிருபம் கொஞ்சப்பொழுதாகிலும் உங்களைத் துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனஸ்தாபப்பட்டிருந்தும், இப்பொழுது மனஸ்தாபப்படுகிறதில்லை."

பவுல் தனது நிருபத்தில் எழுதிய சில காரியங்களால் கொரிந்து சபை மக்களுக்கு தேவனுக்கேற்ற துக்கம் உண்டாகியிருக்கிறது. பின்னர் அது "பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை" உண்டாக்கியிருக்கிறது. இதையும் பாவம் செய்தபின் ஏற்படும் மனோதுக்கத்தையும் ஒருபோதும் ஒப்பிடாதீர்கள். இந்த வேதபகுதி அதைக் குறித்து எழுதப்பட்டதல்ல.

இன்று பல கிறிஸ்தவர்கள் தாங்கள் பாவத்தை அனுபவித்ததைவிட பாவம் செய்தபின்னர் வருகிற துக்கத்தை அதிகம் அனுபவிக்கிறார்கள். அப்படி அனுபவித்து துக்கித்து சாம்பலில் உட்காந்து கிடப்பது தனக்குத்தானே கொடுத்துக் கொள்ளும் தண்டனை என்றும், அது ஆவிக்குரியது என்று நம்புகிறார்கள். நிச்சயமாக இல்லை..இரயில் இஞ்சினோடு சேர்த்து அதன் அத்தனை டிரக்குகளும் புறக்கணிக்கப்பட வேண்டியவை. குற்றமனசாட்சி உங்களை தேவசமூகத்தைவிட்டு விலக வைக்கும், அப்படி விலகுவது உங்களை பலவீனப்படுத்தும், அந்த பலவீனம் மீண்டும் உங்களை அதே பாவத்தில் வீழ்த்தும். எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

நான் கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்கப்பட்டேன் என்ற உணர்வு மட்டுமே நம்மை பாவத்தில் இருந்து விடுவிக்கும். உங்கள் தகுதியை மறந்து ஒருவேளை நீங்கள் பாவத்தில் விழுந்துவிட்டாலும் சாக்கடைக்குள் தவறி விழுந்த செம்மறி போல உடனடியாக சிலிர்ந்து எழுந்து, தேவனிடம் அறிக்கையிட்டு, கிறிஸ்துவுக்குள் நீதிமான் என்ற ஸ்தானத்தில் நீங்கள் நிலை நிறுத்தப்பட்டிருப்பதை உங்களுக்குள் நினைப்பூட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் ஏற்னவே ஏற்றுக்கொள்ளப்பட்டாயிற்று. நீங்கள் இனி பழைய மனிதல்ல...

## ட்வீட் - 56

முதலில் நீதிக்கேற்ற கனிகொடுக்கும் வாழ்க்கை வாழு, அதைப் பார்த்து உன்னை ஏற்றுக்கொள்வேன் அதன்பின் என்னிடம் வந்து சேர்ந்துகொள் என்று இயேசு சொல்லவில்லை. நான் உன்னை மனதார ஏற்றுக்கொண்டேன், தயங்காமல் என்னிடம் வந்து சேர்ந்துகொள், அப்பொழுது நீ நீதிக்கேற்ற கனிகளைக் கொடுப்பாய் என்றே சொல்லுகிறார்.

## 57. பழக்கங்கள்

கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி சிக்கி தவிப்பவர்களைப் பார்த்து ஏன் இவர்களால் வெளியே வரமுடியவில்லை என்று ஆச்சரியப்படுபவர்கள் அநேகர். ஆனால் அந்தப் பழக்கம் (habits) என்பதன் உளவியல் சிக்கல் நிறைந்தது.

நமது மூளையின் அடிப்பகுதியில் நியூக்ளியஸ் அக்கும்பென்ஸ் என்ற பகுதி ஒன்று உண்டு. அதை மகிழ்ச்சிக்கான மையம் என்று அழைக்கிறார்கள். உங்களுக்கு மகிழ்ச்சி தரும் எந்த ஒரு செயலை செய்தாலும் அந்த நியூக்ளியஸ் அக்கும்பன்ஸுக்குள் டோப்போமைன் என்ற வேதிப்பொருள் சுரக்குமாம். உடனே மூளை எந்த செயல் செய்யும்போது உங்கள் நியூக்ளியஸ் அக்கும்பன்ஸுக்குள் டோப்போமைன் சுரந்ததோ அந்தச் செயலை நல்ல செயல் என்று கருதி அதை பதிவு செய்து வைத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் அதே செயலை செய்யும்படி உங்களைத் தூண்டும்.

மூளை ஒரு கம்பியூட்டரைப் போன்றது அதற்கு எது நல்ல சந்தோஷம், எது பாவ சந்தோஷம் என்பது தெரியாததால் எதெல்லாம் நமக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறதோ அது அனைத்தையும் பதிவு செய்து வைத்துக்கொண்டு அதை திரும்ப திரும்ப செய்யும்படி நம்மை தூண்டுகிறது. மதுபானம் குடிக்கும்போதோ அல்லது போதைப்பொருட்கள் உட்கொள்ளும்போதோ நமது நியூக்ளியஸ் அக்கும்பன்ஸுக்குள் வழக்கமான அளவை விட 2 முதல் 10 மடங்கு அதிக டோப்போமைன் சுரக்குமாம். எனவே மூளை அது நல்ல செயல் என்று கருதி அதை பதிவு செய்துகொள்கிறது.

திடீரென்று அதிக டோப்போமைச் சுரந்ததால் மூளை இயல்பாக அதே செயலை திருப்பி செய்யும்போது டோப்போமைன் அளவை குறைத்துவிடுகிறது. எனவே மீண்டும் முதல் முறை கிடைத்த அளவு சந்தோஷம்(போதை) கிடைக்க அந்த நபர் இன்னும் அதிக அளவு போதை உட்கொள்ளும்படி தூண்டப்படுகிறார். இப்படித்தான் கெட்ட பழக்கங்களின் பிடி இறுகுகிறது.

இன்று இதுபோன்ற அடிமைத்தனங்களில் இருந்து வெளியே வர தன்னம்பிக்கை மட்டுமே போதாது என்பது நிதர்சனமான உண்மை. சுயமுயற்சிகள் ஒருபோதும் இந்த விஷயத்தில் கைகொடுக்காது. நமது கையிலிருக்கும் அலைபேசி திடீரென பழுதடைந்தால் என்ன செய்வோம். நாமே சரிசெய்ய முயற்சிப்போம், முடியாத பட்சத்தில் அதை உருவாக்கிய நிறுவனத்திடமே கொண்டுபோய் பழுது நீக்கித்தரும்படி தருவோமல்லவா? நமது சரீரமும், மனதும் அப்படிப்பட்டதுதான். நம்மை உருவாக்கிய தேவனால் மட்டுமே நம்மை சரிசெய்ய முடியும்.

அடிமைத்தனத்தில் இருப்பவர்களை மீட்க இரட்சகர் ஒருவர் தேவை, அது இயேசு ஒருவரே! குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவான் 8:36)

## ட்வீட் - 57

உலகத்துக்குரியவை "மாயை" என்பதை உணராமல், அவற்றையே நிலையானவையென்று எண்ணி, அவற்றோடு உறவாடிக்கொண்டு பொன்னான பொழுதுகளை வீணடிக்கிறோம். ஆனால் படைத்தவரோடு உள்ள உறவையோ "மதம்" எனக் கருதும்படி வஞ்சிக்கப்பட்டபடியால் அதைக் குறித்து கிஞ்சித்தும் அக்கறையின்றி காணப்படுகிறோம். நித்தியமானவற்றுக்கு நிமிடங்களையும், மாயைக்கோ மணிப் பொழுதுகளையும் கொடுக்கிறோம். ஆவியானவர் சத்தியத்திற்கு நம் கண்களைத் திறப்பாராக!

# 58. ஆன்மீக பிளாக்மெயில்

வசனம் சொல்லுகிறபடி கணவனுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று மனைவிகளுக்கு போதிக்கும் கணவர்களின் கண்களுக்கு மனைவியை எப்படி நேசிக்க வேண்டும் என்று அதே வேதத்தில் எழுதியிருக்கும் வசனங்கள் தெரியாது…

வசனம் சொல்லுகிறபடி மனைவியை நேசிக்க வேண்டும் என்று கணவர்களுக்கு போதிக்கும் மனைவிகளின் கண்களுக்கு கணவரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று என்று அதே வேதத்தில் எழுதியிருக்கும் வசனங்கள் தெரியாது…

இப்படி பெற்றோர்கள், பிள்ளைகள், இறைப்பணியாளர்கள் , வேலைக்காரர், எஜமான்கள், அதிகாரிகள், குடிமக்கள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். எல்லோருமே நமக்கு ஆதாயம் தரும் வசனங்களை மட்டுமே பிறருக்கு எடுத்து போதிக்கிறோம். வேத வசனங்களைக் கொண்டு சக மனிதனை கட்டுப்படுத்துவதற்கு பெயர் ஊழியமல்ல பிளாக்மெயில்…

வேதத்தை வாசிக்கும்போது அடுத்தவர்களுக்கு புத்தி சொல்ல வாசிக்கிறோம், ஜெபிக்கும்போது நமது நலனுக்காக ஜெபிக்கிறோம். அதை அப்படியே தலைகீழாகச் செய்வதுதான் ஆவிக்குரியது. நாம் திருந்துவதற்காக வேதம் வாசிப்பதும், அடுத்தவர் நலனுக்காக ஜெபிப்பதுமே தேவன் விரும்பும் பக்தியாகும்.

## ட்வீட் - 58

ஜீவனும் மரணமும் நாவின் அதிகாரத்திலுள்ளது என்ற வசனம் நாம் யாவருக்கும் தெரியும்(நீதி 18:21). ஆனால் தேவகுமாரன் மார்பில் சாய்ந்திருந்த உயிர் நண்பன் சொல்லுகிற இன்னொரு விஷயத்தையும் கேளுங்கள் "ஜீவனும் மரணமும் சகோதர சிநேகத்திலுள்ளது". **1யோவான் 3:14**-ஐ வாசித்துப் பாருங்கள்

## 59. சுருக்க ஜெபம்

ஜெபம் என்ற பெயரில் பலர் ஆண்டவரை பிளாக்மெயில்தான் செய்கிறார்கள், அவரது வசனத்தை பயன்படுத்தி அவரையே மிரட்டுவது, இதைச் செய்யும் அதைச்செய்யும் என்று கட்டளையிடுவது. இன்னும் பலர் ஜெபத்தில் அவருக்கு மணிக்கணக்கில் வேத உபதேசம் செய்கிறார்கள், அல்லது இக்கால உலகச் சூழலைக் குறித்து அவருக்கு பாடமெடுக்கிறார்கள். இதில் தினமும் இவ்வளவு நேரம் ஜெபிக்கிறேன் என்ற பெருமை வேறு! பரலோகத்தில் வீற்றிருக்கும் ஆண்டவர் இதற்கெல்லாம் நிச்சயம் செவிகொடுக்கப் போவதில்லை. ஆனால் பக்கத்தில் முழங்காலில் நின்று எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு "ஆமேன்" போட்டுக் கொண்டிருக்கும் சக மனிதர்கள் நிலைதான் பரிதாபம்!

இது மாதிரி ஒருநபர் இன்னொரு சகோதரரிடம் கேட்டிருக்கிறார். தினமும் நீங்கள் எவ்வளவு நேரம் ஜெபிப்பீர்கள்?

அவர் சொன்ன பதில் "சில நிமிடங்கள்".

அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த முதல் நபர் இவரை ஒரு மாபாவியைப் பார்த்ததுபோல பார்த்து "உங்கப்பாவிடம் ஒருநாளைக்கு சிலநிமிடங்கள்தான் பேசுவீர்களா? ஒரு மூணு மணிநேரமாவது பேசமாட்டீங்க?? ஒரு விசுவாசி என்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள் தினமும் சில நிமிடங்கள்தான் ஜெபிப்பேன் என்கிறீர்களே..."

இதற்கு அவர் சொன்ன விளக்கம்: "என் அப்பாவுக்கு சில சமயங்களில் ஒரு காரியத்தை மூன்று மணிநேரம் விளக்கினால் கூட புரியாது அதனால் அவரிடம் ரொம்ப நேரங்கள் பேச வேண்டியிருக்கிறது. என் பரலோகத் தகப்பனுக்கோ நான் வேண்டிக்கொள்ளப் போவது இன்னது என்பதை அவர் நான் கேட்பதற்கு முன்னமே அறிந்திருக்கிறார், எனவே அவருக்கு சில நிமிடங்களே அதிகம். எனவே அதைமட்டும் அவரிடம் சுருக்கமாகத் தெரிவிக்கிறேன். மேலும் அப்படிப்பட்ட ஜெபத்தைத்தான் இயேசுவும் (மத்தேயு 6:7) பரிந்துரை செய்கிறார்.

ஆனால் தேவனுடைய ஆவியானவர் என்னுடைய ஆவியோடு தொடர்புகொள்ளுவதும், நான் அவரிடம் கற்றுக்கொள்ளுவதும் அனுதினமும் 24/7 எனக்குள்ளே நடந்துகொண்டிருக்கும் கிரியையாகும். அப்பாவின் சமூகத்தில் ஆவலாக அமர்ந்து நடக்கும் உரையாடலும் விடிய விடியக்கூடத் தொடரும், இதற்கெல்லாம் மணிக்கணக்குகள் பார்ப்பதில்லை... ஆனால் தேவைகளுக்காக வேண்டிக் கொள்வதை மணிக்கணக்காக செய்தால்தான் அந்த ஜெபம் கேட்கப்படும் என்ற புரிதலே தவறானது.

## ட்வீட் - 59

வேதம் நமக்கு unity - யைத்தான் வலியுறுத்துகிறது, uniformity - யை அல்ல. உங்கள் தனித் தன்மையை இழக்காதிருங்கள்!

கிறிஸ்து நம்மை ஏக சிந்தையுடன் வாழச் சொன்னாரேயொழிய கும்பல் மனப்பான்மைக்குள் வீழச் சொல்லவில்லை. எந்தச் சூழலிலும் சுய சிந்தனையை இழக்காதிருங்கள்!

வேதம் நமக்கு மனத் தாழ்மையைத்தான் கற்றுக் கொடுக்கிறது, தாழ்வு மனப்பான்மையை அல்ல, எனவே தேவ சாயல் தந்த ஆளுமையை இழந்துவிடாதிருங்கள்!

## 60. கிரேக்கனுக்கு கிரேக்கனாக

சத்தியத்தின் அறிவு என்பது ஒரு சக்திவாய்ந்த காந்தம், அது எல்லோரையும் நம்வசம் ஈர்த்துவிடும். சேபா நாட்டின் அரசியை சாலமோன் வசம் இழுத்து வந்தது போல... யோவான் ஸ்நானகனிடமும், இயேசுவிடமும் பெருங்கூட்ட மக்களை இழுத்து வந்தது போல...

மரியாள் இயேசுவின் பாதத்தில் ஆவலாய் அமர்ந்திருந்ததும் அவரது வாயிலிருந்து வரும் ஞானத்தின் நறுமணத்தை நுகரத்தான். ஞானத்தின் மீதுள்ள அந்த தாகம்தான் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொள்ளுதல் என்று பாராட்டுப் பெற்றது.

ஆனால் ஒரு குவளையின் மூடியைத் திறந்து தண்ணீரை உள்ளே ஊற்றுவதைப் போல தேவன் நமது உச்சந்தலையைத் திறந்து இறைஞானத்தை உள்ளே ஊற்றமாட்டார். ஒரு மென்பொருளைப்போல அதை டவுன்லோடு செய்துகொள்ளவும் முடியாது. கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்று வேதம் சொல்லுகிறது. இயேசுவோடு உறவாடியதன், உரையாடியதன் மூலமே சீஷர்கள் சத்தியத்தை அறிந்து அதை நமக்கும் போதித்தார்கள்.

உலக அறிவாகட்டும், ஆன்மீக அறிவாகட்டும் கேள்வி கேட்காமல் எந்த பதிலையும் பெற்றுக்கொள்ள முடியாது. கேள்வி கேட்பது என்றால் எதிர்த்து பேசுவது என்று அர்த்தமல்ல. இயேசு வாழ்ந்த காலங்களில் சீஷர்கள் அவரிடம் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களுமே இன்று வேதமாக நமது கைகளில் தவழுகிறது. ஆவிக்குரிய கேள்விகள் ஆவிக்குரியவனை இன்னும் கூர்மைப்படுத்தி, அவன் தேடலை அதிகமாக்கி அவனது வளர்ச்சிக்கு உதவுகிறது.

ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன் என்பதைப்போல இன்றைய கிறிஸ்தவர்கள் இயேசுவிடம் கேட்பதும், உலகத்தில் நாடுவதும் ஒன்றே! அது உலகப்பொருள். முழு

இருதயத்தோடு தேடுவதால் அவைகளை எப்படியும் கண்டடைந்து விடுகிறார்கள். அதனால்தான் இஸ்ரவேலர் பாளயத்தை அவர்கள் பிடிவாதமாய்க் கேட்ட காடைகள் நிரப்பியிருந்தது போல இன்றைய கிறிஸ்தவர்களின் உள்ளத்தையும் இல்லத்தையும் உலகப் பொருட்களே நிரப்பியிருக்கின்றன…ஆனால் உச்சந்தலையோ வெறுமையாய் இருக்கிறது. பொருளாதார ஆசீர்வாதம் தவறல்ல, அதையும் தேவன் நமக்கு தரத்தான் செய்கிறார். ஆனால் அது மட்டுமே ஆசீர்வாதம் அல்ல என்பதை என்றுதான் புரிந்துகொள்ளப் போகிறோம்?

உலகப் பிரகாரமானவைகளுக்காக ஆயிரம் விசாரிப்புகள் விசாரிக்கிறார்கள், பத்தாயிரம் கேள்விகள் கேட்கிறார்கள். ஆனால் ஆன்மீகம்? அது பெற்றோர் சொல்லிக்கொடுத்ததை, சபை சொல்லிக்கொடுத்ததை, அபிமான பிரசங்கியார் சொல்லிக்கொடுத்ததை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டதோடு நின்றுவிடுகிறது. தனக்கென்று சொந்தமாய் எந்தத் தேடலும் இல்லை, ஆராய்ச்சிகளும் இல்லை; எனவேதான் வளர்ச்சியும் இல்லை. உள்ளே எட்டிப்பார்த்தால் மூடநம்பிக்கைகளின் முடைநாற்றம் வீசுகிறது. தேங்கிய தண்ணீர் நாறத்தானே செய்யும்?!

பொருளாசைக்காரர்கள் என்று அழைக்கபட்ட பரிசேயர் கூட்டத்திலும்கூட நிக்கொதேமு எனப்பட்ட ஒரு மனுஷன் இராத்திரி நேரத்தில் உலகத்தாருக்கு பயந்து, ஒளிந்து மறைந்து இறைஞானத்தைத் தேடி இயேசுவிடம் வந்தான். அத்தனை ஆன்மீகப் பசி அவனுக்கு! ஆனால் இயேசு தங்களோடு கூடவே இருந்தும் இன்று அவரது பிள்ளைகள் ஆன்மீக ஞானத்தை நாடாமல் தேமாவைப்போல இப்பிரபஞ்சத்தை நோக்கியே ஓடுகிறார்கள். என்னவொரு முரண்பாடு! அதனால்தான் நாம் வேதம் வாசிக்கையில் நமது ஆவிக்குரிய கண்களில் பரிசேயனாயிருந்தும் நிக்கொதேமுவின் பெயர் பச்சை எழுத்துக்களிலும், சீஷனாய் இருந்தும் தேமாவின் பெயர் சிவப்பெழுத்துக்களிலும் மின்னுகிறது.

இன்று ஆத்திகர்களைவிட நாத்திகர்களே ஆன்மீகம் குறித்து அதிகம் சிந்திக்கிறார்கள், ஆராய்கிறார்கள். ஆத்திகர்கள் உலகப்பொருள் வேண்டி மூடத்தனமான சடங்கு சம்பிரதாயங்களில் மூழ்கியிருக்கும் வேளையில்; நாத்திகர்கள் தங்கள் மூளையைக் கசக்கி காரியங்களை ஆராய்கிறார்கள். கிடைப்பது இம்மைக்குரிய தர்க்க அறிவுதான் என்றாலும் அதற்கு முன்பாகக்கூட ஆத்திகர்களின் வாதம் மண்டியிட்டு விடுகிறது. ஆத்திகர்களின் மூடத்தனத்தை வென்ற அவர்களும் "மனக்குகையில் சிறுத்தை எழுகிறது, மண்டைச் சுரப்பை உலகு தொழுகிறது…" என்று தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ளுகிறார்கள். மதம் என்பது ஒரே இடத்தில் ஞானமும் மூடநம்பிக்கைகளும் குடிகொண்டிருக்கும் கூடாரம். நாத்திகர்களின் போர்த்தந்திரம் என்னவென்றால் அவர்கள் ஒருபோதும் ஆத்திகர்களின் ஞானத்தோடு மோதுவதில்லை, அவர்களின் மூடநம்பிக்கைகளுடன் மோதித்தான் ஒவ்வொருமுறையும் வெற்றி முரசு கொட்டிக்கொள்கிறார்கள்.

சற்று யோசித்துப் பாருங்கள்! அரிஸ்டாட்டிலும் இயேசுவும் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் இருந்திருப்பார்களானால் யார் மக்களை அதிகம் ஈர்த்திருப்பார்கள்? இயேசுவை விட்டுத்தள்ளுங்கள், அரிஸ்டாட்டிலால் பவுலுக்குக் கூட பதில் சொல்லியிருந்திருக்க முடியாது. ஞானத்தில் இயேசுவும், பவுலும் மற்ற ஆதி அப்போஸ்தலரும் சூரியனைப்போல பிரகாசித்தார்கள். கிரேக்கனுக்கு கிரேக்கனாய் நின்று அவனை ஆதாயப்படுத்த இன்று நம்மிடம் எத்தனை பவுல்கள் உண்டு? கர்த்தர் சுகம் தருகிறார், கடன் பிரச்சனையில் இருந்து விடுவிக்கிறார், வேலை தருகிறார் என்று பிரசங்கித்து கூட்டத்தை சேர்த்து கிறிஸ்தவத்தை 'அகலத்தில் வளர்க்க' பலர் உண்டு. அந்த வளர்ச்சி வளர்ச்சியல்ல, Obesity! பரலோக ராஜ்ஜியத்தின் சத்தியத்தை அழகாக பகுத்து போதித்து சபையை 'ஆழத்தில் வளர்க்க' எத்தனை பேர் இருக்கிறார்கள்?!

சுவிசேஷம் தங்கள் அறிவுக்கு எட்டும் விதத்தில் சொல்லப்படாததால் இன்னும் இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அநேகர் இருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக சிலுவையில் இயேசு சிந்திய இரத்தம் இன்று என்னை எப்படி சுத்திகரிக்க முடியும் என்பது அவர்களது கேள்வி! இந்தக் கேள்விக்கு அவர்களுக்கு புரியும்வகையில் சொல்லத்தக்க சரியான பதில் நம்மிடம் இருக்கிறதா? அவர்களிடம் இந்தக் கேள்வி இருப்பது தவறல்ல நம்மிடம் பதில் இல்லாதிருப்பதுதான் தவறு. இந்தக் கேள்வியின் நிமித்தம் நாம் அவர்களை வணங்காக்

கழுத்துள்ளவர்கள், தலை அறிவின் வழியாக கடவுளை தேடுகிறவர்கள் என்று முத்திரை குத்தி புறம்பே தள்ள முடியுமா?

புதிய ஏற்பாட்டில் "யூதர்-கிரேக்கர்" என்ற வார்த்தை இணைச்சொல்லாகப் 17 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஏனென்றால் இந்த இணைச்சொல் இருவகையான மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறது. யூதர்கள் அடையாளங்களைத் தேடுபவர்கள் , கிரேக்கர் ஞானத்தைத் தேடுபவர்கள் (1 கொரி 1:22,23). அதாவது யூதர்கள் உணர்வின் வழியாக கடவுளைத் தேடும் கூட்டத்துக்கு அடையாளமாகவும், கிரேக்கர்கள் ஞானத்தின் வழியாகக் கடவுளைத் தேடும் கூட்டத்துக்கு அடையாளமாகவும் இருக்கிறார்கள். ஆனால் இருவரது எதிர்பார்ப்போடும் ஒத்துவராத சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பற்றிய சுவிசேஷத்தை பிரசங்கித்ததாகவும் பவுல் சொல்லுகிறார். சுவிசேஷத்தின் வல்லமையால் முன்குறிக்கப்பட்ட யூதரும் கிரேக்கரும் இரட்சிக்கப்படுகிறார்கள்.

தேவனை விட்டு பிரிக்கப்பட்டு அந்தகாரத்தில் உழலும் மனிதர்கள் "அறிவு, உணர்வு" என்ற இந்த இரண்டு வழிகளின் முலமாகத்தான் கடவுளைத் தேட முடியும். அவர்களுக்கு வேறு வழியில்லை. எனவே அது அவர்கள் தவறுமல்ல. ஆனால் இந்த இரண்டு பிரிவுகளையும் சந்திக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. நாம் யூதரோ, கிரேக்கரோ ஏற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக சத்தியத்தை வளைக்காமல், அவர்களுக்கு புரியும் விதத்தில் சத்தியத்தை தெளிவாக சொல்லவேண்டும். அதைத்தான் ஆதி அப்போஸ்தலர் செய்தார்கள். ஆவியின் 9 வரங்களையும் ஆராய்ந்து பார்த்தீர்களானால் விசுவாசமும், ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், அற்புதங்களைச்செய்யும் சக்தியும் உணர்வின் வழியாக கடவுளைத் தேடும் (யூதர்கள்) கூட்டாதாருக்கு பிரயோஜனமாகவும், ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும் அறிவின் வழியாக கடவுளைத் தேடும் (கிரேக்கர்கள்) கூட்டத்தாருக்கு பிரயோஜனமாக அமைந்திருப்பதையும் காணலாம். கர்த்தர் எல்லாவற்றையும் திட்டமிட்டுத்தான் நமக்கு தந்திருக்கிறார். ஆனால் இன்று ஞானவரங்களை யாரும் கேட்பதில்லை, கிரியை வரங்களுக்காகத்தான் உபவாசமிருந்து ஜெபிக்கிறார்கள்...இவை லாபகரமான வரங்களல்லவா!!

இன்று இந்தியா போன்ற அற்புத, அடையாளங்களை நாடும் மக்கள் உள்ள நாடுகளில் அவர்களை வசப்படுத்தும்படி சுவிசேஷத்தை வளைத்து, அதன் தரத்தை குறைத்து, மேடை வித்தைகளை நிகழ்த்தி அந்த மக்களை உள்ளே இழுத்து, உள்ளே வந்த பின்னும் இறைஞானத்தில் வளராதபடி அவர்களை பேதை ஆடுகளாக்கி கடைசிவரை ஊழியக்காரரையும் அவரது குடும்பத்தையும் போஷிக்கும் அடிமைகளாகவே வைத்து விடுகிறார்கள். எப்படிப்பட்ட இழிநிலை இது! ஆனால் அதேவேளையில் அறிவின் வழியாக இறைவனைத் தேடும் கிரேக்கர் சந்திக்கப்படுவதே இல்லை. எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்கும் இவர்களை வைத்து சம்பாதிக்க முடியாது. எனவே இவர்கள் கடினமானவர்கள், மேட்டிமையானவர்கள் என்ற முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்படுகிறார்கள், மொத்தத்தில் யூதர்கள் வஞ்சிக்கபடுகிறார்கள், கிரேக்கர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். எதையும் அறிவின் வழியாக ஆராய்பவர்கள் உள்ள மேற்கத்திய நாடுகளில் பழங்கால சபைக் கட்டிடங்களில் கூடுகைக்கு ஆளில்லாமல் அவை தியேட்டர்களாகவும், குருத்துவாராக்களாகவும் மாற்றப்படுகிறது. இதற்காக யாரை குறை சொல்லுவது? கேள்வியை வைத்திருக்கும் அவர்களையா? பதில் இல்லாத நம்மவர்களையா?

குருடர் பார்க்கிறார்கள், செவிடர் கெட்கிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள் என்று எழுதப்பட்டிருக்கும் மேடைகளில் ஏறி நின்று வீரவசனம் பேசும் ஊழியக்காரர்கள் 'மார்ஸ் மேடைகளில்' ஏறுவதில்லை. ஆனால் பவுல் இந்த இரண்டு மேடைகளிலும் கிறிஸ்துவுக்காக ஏறினார். யூதனுக்கு யூதனாகவும், கிரேக்கனுக்கு கிரேக்கனாகவும் நின்று இருவரையும் ஆதாயப்படுத்தினார். அவர் நோக்கம் ஆடுகளை போஷிப்பது, ஆடுகளால் பிழைப்பது அல்ல.

சத்தியத்தை அறியும் அறிவில் வளர இயலாதபடி நம்மிடம் இருக்கும் சோம்பேறித்தனமே நம்மை நாத்திகர்களிடமும், மற்ற மதங்களின் ஞான மார்க்கத்தாரிடமும் செல்ல முடியாதபடி முடக்கிப்போட்டிருக்கிறது. குறைந்தபட்சம் நமக்குள் இருக்கும் ஆவிக்குரிய சந்தேகங்களைத்

தீர்த்துக்கொள்ளக்கூட நாம் முயல்வதில்லையே! ஆனால் ஒரு வியாதி வந்துவிட்டால் அது தீரும்வரை முழங்காலில் போராடுகிறோம். இதுதான் நம் உண்மை நிலை. நீ அறிவை வெறுத்தாய் (ஓசியா 4:6) என்று தீர்க்கதரிசி அக்கால ஊழியர்களைப் பார்த்து சீறினான். இன்றும் அதே நிலைதான்.

இன்று நாத்திகருக்கும், தங்களை free thinkers என்று அழைத்துக் கொள்ளுபவர்களுக்கும் கிறிஸ்துவை அறிவிக்கிறவர்கள் வேண்டும். இயேசுவால் தீர்க்கமுடியாத பிரச்சனைகள் இல்லை என்று யூதர்களிடம் சொல்லும் நம்மால் இயேசுவால் பதிலளிக்க இயலாத கேள்விகள் இல்லை என்று கிரேக்கர்களிடம் சொல்ல முடியுமா? நமது கரங்களை யூதர்களிடம் பயன்படுத்த முடிந்த தேவனால், நமது நாவை கிரேக்கர்களிடம் பயன்படுத்த முடியாதா? நிச்சயம் முடியும். ஆனால் நாம் அதற்கு ஒரு விலை கொடுக்க வேண்டும். உலக ஓட்டத்தை ஓரங்கட்டிவிட்டு மரியாளைப்போல இயேசுவின் பாதம் அமர்ந்து அவர் சத்தம் கேட்கவேண்டும். பவுல் இந்த அறிவைப் பெறத்தான் தன்னிடமுள்ள அனைத்தையும் நஷ்டமும் குப்பையும் என்று விட்டாராம்!

என் மகனே, என்னை நிந்திக்கிறவனுக்கு நான் உத்தரவுகொடுக்கத்தக்கதாக, நீ ஞானவானாகி, என் இருதயத்தைச் சந்தோஷப்படுத்து (நீதிமொழிகள் 27:11)

## ட்வீட் - 60

எப்போதும் பாவத்தைக் குறித்தே தியானிப்பது, பாவம் செய்து விடுவோமோ என்று அஞ்சி அஞ்சி சாவது, பாவம் செய்தபின் குற்ற உணர்வில் குறுகி நிற்பது, மற்றவர்களுக்குள் இருக்கும் பாவத்தை ஆராய்வது, பாவத்தைக் குறித்தே பிரசங்கிப்பது...நிச்சயமாக இது விரும்பத்தகாத எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும்.

இயேசுவைக் குறித்தே தியானிப்பது, இயேசு சிலுவையில் அளித்த விடுதலையை சுதந்தரிப்பது, அந்த விடுதலை உணர்வோடு அவரை துதித்து ஆராதிப்பது, இயேசுவே எனக்கு நீதியாக இருக்கிறார் என்று விசுவாசிப்பது, அதையே பிரசங்கிப்பது, அவரில் மென்மேலும் பலப்படுவது, இதுவே நம்மை ஆவிக்குரிய வாழ்வை வளமடையச் செய்யும், நம்மைச் சுற்றியுள்ளவர்களும்கூட நம்மிலிருந்து வீசும் ஆவிக்குரிய நறுமணத்தை உணர்வார்கள்.

கிறிஸ்தவம் "Sin" Centered அல்ல, அது "Son" Centered!!

## 61. பவுலின் ஞானம்

வேதாகமத்தில் வெகு சில இடங்களில் வேற்றுமத அறிஞர்கள், கவிஞர்கள் ஆகியோரின் கருத்துக்கள் மேற்கோளாக காட்டப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு தெரியுமா?

உதாரணமாக பவுல் ஏதேன்ஸ் நகரின் (அத்தேனே பட்டணம்) மார்ஸ் மேடையில் நின்று கிரேக்கருக்கு பிரசங்கித்த சம்பவம் அப்போஸ்தலர் 17-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் "ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர்: நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்" (அப் 17:28) என்று பவுல் குறிப்பிடும் புலவர் யார் என்பதை வரலாற்றின் கோணத்தில் பார்க்கலாமா?

கி.மு 3-ஆம் நூற்றாண்டில் மாசிடோனியாவில் (மக்கதோனியா) அராட்டஸ் (Aratus) என்னும் ஸ்தோயிக்க கவிஞரே மேற்கண்ட வசனத்தை சொன்னவர். இவர் பிரபஞ்சம் பற்றி எழுதிய ஃபினாமினா (Phaenomena) என்ற ஜோதிடக் கவிதை நூலில் இந்தக் கருத்து இருக்கிறது.

இன்னொரு இடத்தில் "கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களில் ஒருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான்" என்று தீத்து 1:12-இல் பவுல் குறிப்பிடுவார். அந்த தீர்க்கதரிசியின் பெயர் கிரேத்தாவைச் சேர்ந்த எபிமெனிடஸ் (Epimenides) என்பவர். இவர் கி.மு ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்த எபிமெனிடஸ் 57 ஆண்டுகள் ஒரு குகையில் உறங்கிக் கொண்டிருந்ததாகவும் அதன் முடிவில் கிரேக்கக் கடவுளான ஜீயஸிடமிருந்து சக்தி பெற்று ஏதேன்ஸ் நகரில் ஜீயஸுக்காக தீர்க்கதரிசனம் உரைத்ததாகவும் ஒரு பாரம்பரியம் உண்டு.

இக்காலம் போல அன்று டிஜிட்டல் புத்தகங்களோ அல்லது ஆயிரக்கணக்கில் புத்தகப் பிரதிகளை அச்சிட்டு வெளியிடும் அச்சகங்களோ இல்லை. எனவே ஒரு நூல் கையில் கிடைப்பதும் அதை வாசிக்கும் வாய்ப்பு கிடைப்பது அரிது. அப்படிப்பட்ட காலத்தில்தான் பவுல் நியாயப்பிரமாணத்தை கசடறக் கற்றது மட்டுமல்லாமல், சமகாலத்திய வேற்று மதக் கருத்துக்களையும், தத்துவ ஞானிகளின் தத்துவங்களையும் நன்கு கற்று அறிந்தவராக இருந்திருக்கிறார். அதனால்தான் அவருக்கு எதிராக தர்க்கங்களில் நிற்க இயலாமல் அக்கால அறிஞர்கள் திணறியிருக்கிறார்கள்.

இவ்வளவு ஞானமுள்ள பவுல் தான் கற்றவற்றை வைத்து வாழ்வில் மிகப்பெரிய உச்சத்துக்கு சென்றிருந்திருக்கலாம். ஆனால் அவரோ "எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். (பிலி 3:7,8)" என்று குறிப்பிடுகிறார். ஆம், கிறிஸ்துவை அறிகிற அறிவு என்பது அத்தனை மகத்துவமானது! எந்த ஞானமும் அதற்கு இணையானதல்ல.

## ட்வீட் - 61

தாமதிப்பதுகூட நன்மையை விளைவிக்குமென்றால் அது (நமது பார்வையில்) தேவனுடைய தாமதம் மட்டுமே!

## 62. வேசித்தனம் மட்டும்தான் பாவமா?

"பாவம்", "பரிசுத்தம்" என்று மிக வைராக்கியமாக பேசும், எழுதும் விசுவாசிகள் சிலரைக் கூப்பிட்டு பாவம் என்று எதைத்தான் சொல்லுகிறீர்கள் என்று கேட்டால் நமக்கு அதிர்ச்சியே மிஞ்சும்.

விக்கிரக ஆராதனை, புகைப்பிடித்தல், மது அருந்துதல், ஆபாசப் படம் பார்த்தல், சினிமா பார்த்தல், சுயபுணர்ச்சி, விபச்சாரம், ஓரினச்சேர்க்கை, கண்களின் இச்சை, கெட்டவார்த்தை பேசுதல், ஆபாசமாக உடையணிதல், மேக்கப் போடுதல் என்பனவற்றோடு அவர்களது பாவ லிஸ்ட் முடிந்துவிடுகிறது.

வேதம் "பாவம்" என்று சொல்லுவது இவைகளை மட்டும்தான் என்று நினைப்பதால்தான் இவைகளைச் செய்வதை நிறுத்தியவுடன் அவர்களுக்குள் ஒரு பரிசேயப் பெருமை வந்துவிடுகிறது.

வட்டிக்குக் கொடுப்பது, கடன் வாங்கித் திரும்பச் செலுத்தாதது, தன்னிடம் வேலை பார்ப்பவர்களுக்கு உரிய ஊதியம் தராமல் அவர்களை சுரண்டுவது, அடுத்தவனைக் கவிழ்த்துவிட்டு தான் முன்னேறுவது...

அடுத்தவர்களைக் குறித்து புறம் பேசுவது, நன்மை செய்ய வேண்டிய நேரத்தில் அதைச் செய்யாமல் தட்டிக்கழிப்பது, ஜாதி, சமூக அந்தஸ்து பார்த்து பழகுவது. அடுத்தவர் மனம் நோக கேலி செய்வது, எதிலும் சுயநலமாக இருப்பது என மிக மிக மிகப் பெரிய லிஸ்ட் ஒன்று நீண்டுகொண்டே போகும்…

இவற்றையெல்லாம் இன்னும் வைத்துக் கொண்டிருப்பவர்கள்தான் புகைப் பிடிப்பதையும், சினிமா பார்ப்பதையும் நிறுத்தியவுடன் தன்னை இயேசுவாகக் கருதிக்கொண்டு அடுத்தவர்களை அற்பமாகப் பார்க்கிறார்கள். இந்த மனப்பான்மை கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானது.

"மாம்ச இச்சை"-க்கு மட்டும்தான் நரகம், "மேட்டிமை", "பொறாமை", "சூழ்ச்சி", "சுயநலம்", "பொய்", "பொருளாசை" இவற்றையெல்லாம் பரலோகம் ஏற்றுக்கொள்ளும் என்று எந்த வேதத்தில் போட்டிருக்கிறது?

பாவம் குறித்து வாய்வலிக்க பேசும் கிறிஸ்தவ சமூகத்துக்கு பாவம் பற்றி சரியான புரிதல் இருந்திருந்தால் இந்நேரம் குறைந்தபட்சம் பல நல்ல பழகுவதற்கு இனிமையான,நம்பிக்கைக்குப் பாத்திரமான மனிதர்களையாவது இந்த சமூகம் பெற்றிருந்திருக்கும். ஆனால் இப்போதோ சிடுசிடு முகத்துடன் அடுத்தவர்களை கிட்டே அண்டவிடாமல் பாத்திரத்தின் வெளிப்புறத்தை மட்டுமே சுத்தமாக்கிக் கொண்டிருக்கும் ஒரு மாய்மாலக் கூட்டமாகத்தான் உருவாகியிருக்கிறோம்.

பாவம் என்பது ஒரு மிகப் பெரிய சப்ஜெக்ட்...அதை ஒரு சிறு கட்டுரையில் விளக்க முடியாது. ஆனால் "மாம்ச இச்சை" தொடர்பான காரியங்கள் மட்டுமே பாவம் என்ற பொதுவான மனநிலையில் இருந்து கிறிஸ்தவர்கள் விடுபடவேண்டும். அதுவும் பாவம்தான் ஆனால் அது மட்டுமே பாவமல்ல…

## ட்வீட் - 62

இயேசுவைத்தானே எப்போதும் பேசிக் கொண்டிருக்கிறோம், பின்னே ஏன் இயேசுவுக்குப் பதில் அன்னா காய்பாக்கள் நம்மில் வெளிப்படுகிறார்கள்? சிலுவையைத்தானே பிரசங்கிக்கிறோம்? பின்னே ஏன் நாம் சிலுவையை சுமக்கிறவர்களாய் இல்லாமல் பிறரைப் பிடித்து சிலுவையில் அறைகிறவர்களாய் அலைகிறோம்? சுவிசேஷ விதைகளைத்தானே விதைக்கிறோம்? பின்னே ஏன் பரிசேயச் செடிகள் முளைக்கின்றன?

எதை, எங்கே, எப்படி தொலைத்தோம்?

விடையைத் தேடினால் ஒரே ஒரு காரணி மிஸ்ஸிங்... அதுதான் "அன்பு",

இயேசுவையும் அன்பையும் பிரிக்க முடியாது. அன்பின் உருவமவர்! சிலுவையையும் அன்பையும் பிரிக்க முடியாது, அன்பின் உச்சபட்ச வெளிப்பாடே சிலுவை தியாகம்! சுவிசேஷத்தையும் அன்பையும் பிரிக்க முடியாது, பிதாவின் அன்பைச் சொல்லுவதே சுவிசேஷம்! அன்பற்ற பக்தி அவபக்தி, அன்பற்ற கிறிஸ்தவம் அந்திக்கிறிஸ்தவம்!

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால்…?

## 63. நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்

கிறிஸ்தவர்களையும் சபையையும், ஊழியக்காரர்களையும் இழிவுபடுத்தி பேசும் மதவாதிகள் பெரும்பாலும் கிரிமினல் பின்னனி கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களது கிரிமினல் குற்றங்கள் பற்றி செய்தித்தாள்களில் வந்த செய்திகளை எடுத்து அவற்றை சமூகவலைதளங்களில் பரப்புவதன் மூலம் நாம் அவர்களுக்கு பதிலடி கொடுப்பதாக நினைக்கிறோம். இதன்மூலம் நாம் அவர்களுக்கு கடுகளவுகூட ஒரு அவமானத்தையோ, மனஉறுத்தலையோ ஏற்படுத்த இயலாது. அவர்கள் மான,அவமானங்களைக் கடந்தவர்கள். அவர்களுக்கு அது ஒரு எறும்பு கடித்த அளவு வலியைக் கூட ஏற்படுத்தாது.

மாறாக நாம்தான் நமது நேரத்தையும், சக்தியையும் விரயம் செய்து கொண்டிருக்கிறோம். இவர்களெல்லாம் நமக்கு சமமான எதிரிகள் அல்ல. இவர்களோடு நாம் போராடுவது நமது தளபதியாகிய ஆவியானவருக்கு அவமானம். “மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபே 6:12)”. அந்தப் போராட்டத்தை ஒழுங்காகப் போராடினால் இந்தப் போராட்டங்களெல்லாம் தன்னால் அடங்கிவிடும்.

நாம் ஏன் இவர்களை நமக்கு சமமான எதிரிகளாக பாவித்து பதறுகிறோமென்றால் நாம் எலிசாவின் வேலைக்காரனைப் போல பிரச்சனைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எலிசாவைப் போல கர்த்தருடைய முகத்தை மாத்திரம் பார்த்துக் கொண்டிருந்தால் நம்மைச் சுற்றிலும் அக்கினிமயமான இரதங்களும் குதிரைகளும் பாளயமிறங்கியிருப்பதை நம்மால் காணமுடியும்.

பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் (2 இராஜா 6:16)

## ட்வீட் - 63

**நியாயப்பிரமாணம்:**
நான் நீதிக்கேற்ற கிரியை செய்தால் தேவன் என்னிடத்தில் அன்பாயிருப்பார்

**கிருபை:**
தேவன் என்னில் முந்தி அன்புகூர்ந்து, அவரே எனக்கு நீதியாக மாறியதால் அவரில் நிலைத்திருந்து கனிகொடுப்பேன்

## 64. தேவ அன்பையா, மனித அன்பையா எதைப் பறை சாற்றுவது?

வெற்றிகரமாக ஊழியப்பாதையில் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ஊழியக்காரர் தான் தேவன் மீது வைத்த அன்பையும், தான் அவருக்காக ஊழியத்தில் செய்த தியாகங்களையும் சாட்சியாகச் சொல்லி பிரசங்கிக்கும் போது அதைக் கேட்கும் மக்கள் மனதில் ஒரு சவால் பிறக்கிறது. இது நல்ல விஷயம்தான், ஆனால் அந்த சவால் விரைவிலேயே அவரவர் மாம்சத்தால் விழுங்கப்பட்டு கடைசியில் குற்றஉணர்வும், என்னால் முடியவில்லையே என்ற புலம்பலுமே மிஞ்சுகிறது.

ஒரு நல்ல ஊழியர் தேவனுக்காக தான் செய்த தியாகங்களைக் குறித்து நல்ல நோக்கத்தில் பிரசங்கித்தாலும் தானும் அதுபோல வாழ வேண்டும் என்று விரும்பும் ஒரு பலவீனமான விசுவாசிக்கு அது வெறும் ஏக்கத்தைத் தருமேயன்றி எழுச்சியைத் தராது.

ஆனால் தேவன் மனிதன் மீது வைத்திருக்கும் அளவற்ற அன்பை விசுவாசிகளுக்கு திரும்பத் திரும்ப சொல்லிக் கொடுக்கும்போது, தான் தகுதியற்றவனாக இருந்தும் எவ்வளவாக கர்த்தரால் நேசிக்கப்பட்டிருக்கிறோம் என்று அறிய அறிய அந்த பெலவீனமான விசுவாசியின் மனதில் ஒரு விசுவாசம் துளிர் விடுகிறது. அந்த விசுவாசம் கடுகுவிதையளவு இருந்தாலும் ஆயிரம் அணுகுண்டுகளுக்குச் சமமானது. அந்த விசுவாசமே நான் முதலில் கூறிய ஊழியரைப் போல கர்த்தரை அளவின்றி நேசிக்கும் ஒரு சாட்சியான வாழ்க்கை வாழ அந்த விசுவாசியையும் பெலப்படுத்தும்.

தேவமனிதர்கள் தேவன்மீது வைத்த அன்பையும் அவர்கள் தியாகத்தையும் அறிவது நல்லதுதான். ஆனால் பிதாவானவர் மனிதர்கள் மீது வைத்த அன்பையும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனிதருக்காக செய்த தியாகத்தையும் அறிவதே பயனுள்ளது. அதை மட்டும் பிரசங்கிப்பதே சரியானது.

## ட்வீட் - 64

சட்டத்தின் மிகக் கொடூர தண்டனைகூட குற்றவாளியைத்தான் அழிக்கும், குற்றத்தை அல்ல. பாவத்தை சின்னாபின்னமாக சிதறடித்தது சிலுவை மட்டுமே!

## 65. கண்ணால் காண்பதும் பொய்

பாவம் இந்த உலகத்துக்குள் நுழைந்தபோது கூடவே வந்த இன்னொரு விஷயம் மாயை. அதை வஞ்சகம் அல்லது போலித்தோற்றம் என்று எப்படி வேண்டுமானாலும் புரிந்துகொள்ளலாம். பாவம், மாயை என்ற இரண்டுமே நமது ஐம்புலன்களைப் பயன்படுத்தித்தான் நம்மை ஆளுகின்றன.

இருளானது பொருட்களை மறைக்கிறது. ஆனால் அந்தப் பொருட்களை மறைப்பது இருளாகிய தாம்தான் என்பதை காட்டிக்கொடுத்துவிடும். நம்மால் இருளைப் பார்க்க முடியுமல்லவா? ஆனால் மாயை என்பதோ பொருளையும் மறைத்து அதை மறைப்பது தாம்தான் என்பதையும் மறைத்துவிடும். எனவேதான் கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய் என்பதை கிறிஸ்தவர்களாகிய நாமே அதிகமாக பிரசங்கிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான் (பிரசங்கி 1:2 )

நீங்கள் கர்த்தருடைய ஆலயம், கர்த்தர் உங்களுக்குள் வசிக்கிறார் அவர் உங்களைச் சூழ்ந்திருக்கிறார் என்பது ஆணித்தரமான உண்மை. ஆனால் நமது ஐம்புலன்கள் நமக்கு எதைக் காட்டுகின்றன? இன்று இரகசிய பாவங்களுக்கு விரோதமாக பிரசங்கிக்கும்போது கர்த்தர் உன்னுடன் அந்த அறையில் இருக்கிறார் என்றால் நீ அந்த பாவத்தை செய்வாயா? கர்த்தர் உன்னுடன் இருக்கிறார், அவர் கூடவே வருகிறார் என்று கற்பனை செய்துகொள் அப்போது பாவம் செய்ய மாட்டாய் என்று போதிக்கும் அளவுக்கு வந்து விட்டோம்.

ஆனால் அதைக் கற்பனை செய்ய வேண்டிய அவசியமில்லை. இல்லாத ஒன்றைத்தான் நாம் கற்பனை செய்ய வேண்டும். கர்த்தர் நமக்குள்ளும் நம்மைச் சூழ்ந்தும் இருக்கிறார் என்பதுதான் உண்மை. ஆனால் நாம்தான் நமது ஐம்புலன்களை நம்பி “அவர் இங்கே இல்லை” என்று கற்பனை செய்துகொண்டு மாயையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள் (யோனா 2:8)

ஆவிக்குரிய வாழ்க்கையில் உச்சநிலை என்றால் நமது ஐம்புலன்கள் வழியாக தேவனை உணரும் நிலைக்கு வளர்வது என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம் ஐம்புலன்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உதவாது. நமக்குத் தேவை விசுவாசக் கண்கள். அந்தக் கண்களைக் கொண்டு மட்டுமே நாம் உன்னதத் தளங்களுக்குள் ஏறிச்செல்ல முடியும்.

நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் (II கொரிந்தியர் 5:6)

## ட்வீட் - 65

பாவத்தையும், எதிர்மறையானவற்றையும் பூதக்கண்ணாடி கொண்டு பார்த்து அவைகளையே தியானித்து பயந்துகொண்டிராமல், கிறிஸ்துவின் சிலுவை வெற்றியை விசுவாசித்து, அதையே எப்போதும் தியானித்து கொண்டிருப்பதே நமது வாழ்வை ஜெயமுள்ளதாக மாற்றும்

## 66. பிதாவின் சிங்காசனம்

நாட்டில் நடக்கும் அநியாய அக்கிரமங்களுக்கு எதிராக சபையாக ஜெபிப்பதும், சட்டத்துக்கு உட்பட்டு ஜனநாயக முறையில் எதிர்வினையாற்றுவதும் விசுவாசிகளின் கடைமை. பல நாடுகளில் கருக்கலைப்பு மற்றும் ஒருபால் திருமணத்துக்கு விரோதமாக சபை தனது எதிர்ப்பை அந்தந்த நாட்டு அரசிடம் கடுமையாக பதிவு செய்திருக்கிறது. ஆனால் நம்மை சுற்றி நடக்கும் காரியங்கள் நமக்குள் இருக்கும் தேவசமாதானத்தை குலைக்கும் அளவுக்கு நம்மை பாதிக்கக்கூடாது.

எல்லாவற்றையும்போல் இதற்கும் ஆண்டவராகிய இயேசுவே நமக்கு சிறந்த முன்னுதாரணமாக இருக்கிறார். உலக வரலாற்றிலேயே மோசமான கொடுங்கோல் ஆட்சி ஒன்று இருந்திருக்குமானால் அது ரோம ஆட்சிதான். ரோம ஆட்சிக்கு அடிமையாக யூத இனம் வாழ்ந்த பொழுதிலும்கூட, அந்த நெருக்கடியான அரசியல் சூழலில் அதைவிட கொடுமையாக கடலும் கொந்தளித்துக் கொண்டிருந்தபோதும்கூட அந்த கடல் பயணத்தில் இயேசுவால் நிம்மதியாக உறங்க முடிந்தது. என் பிதாவின் வலுவான கரத்தினுள் அத்தனையும் அடங்கியிருக்கிறது என்ற அவரது விசுவாசமே அவர் பெற்றிருந்த மன சமாதானத்துக்கும், நிம்மதிக்கும் காரணம். நமக்கும் அதே விசுவாசம் இருக்கிறதா?

தேசத்தில் நடைபெறும் சம்பவங்கள் நமது நிம்மதியை குலைக்குமானால் நாம் “கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார் (சங் 93:1 )” என்ற உண்மையை மறந்துவிட்டோம் அல்லது அதை நம்பவில்லை என்று அர்த்தமாகிறது. அண்ட சராசரங்களும் அவரது கைக்குள் அடங்கியிருப்பதுபோலவே, நமது தேசமும் சூழ்நிலைகளும், இயற்கையும் பிதாவின் கைக்குள் அடங்கியே இருக்கிறது. இன்னும் வருங்காலத்திலும் அப்படியே இருக்கும்!

அவரது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது (சங் 93:2)

## ட்வீட் - 66

ஜெபம், வேதவாசிப்பு, ஆவிக்குரிய கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் அனைத்தும் தேவைதான். ஆனால் அவற்றின் மூலம் பேட்டரி சார்ஜ் ஏற்றிக் கொண்டு அந்த சார்ஜ் தீர்ந்தவுடன் மீண்டும் அதே ஆன்மீகக் கிரியைகளை நாடி ஓடுவதல்ல புது சிருஷ்டியின் அனுபவம்!

நாம் பேட்டரியில் இயங்கும் பொம்மையல்ல, ஜீவனுள்ள தேவ புத்திரர்! நம்மை இயக்கும் ஆவியானவர் “நமக்குள்ளே நித்திய் ஜீவகாலமாக ஊறுகிற நீரூற்று” என்று வேதம் சொல்லுகிறது.

## 67. ஆகூரின் ஜெபம்

தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும். (நீதி 30: 8,9)

ஆகூர் என்ற மனிதன் தேவனிடம் வைத்த விண்ணப்பத்தைத்தான் மேற்கண்ட வசனத்தில் பார்க்கிறோம். ஆகூர் மூன்று விதமாக மனிதர்களைப் பிரிக்கிறார். ஐசுவரிய போதையினால் கர்த்தரை மறுதலிக்கிறவர்கள், வறுமையின் கொடுமையால் திருடி கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்பட காரணமாய் இருப்பவர்கள் மற்றும் மூன்றாவதாக தேவனிடத்தில் தேவைகளை மாத்திரம் அளவாகப் பெற்று அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழுகிறவர்கள்.

ஐசுவரிய போதையும், வறுமையின் கொடுமையும் ஒரு மனிதன் தேவனைவிட்டுப் பிரிய காரணமாக இருக்கின்றன என்பதற்கு வேதாகமத்திலும், நிஜத்திலும் ஆயிரக்கணக்கான சாட்சிகள் இருக்கின்றன, உண்மையில் அவர்களை தேவனிடமிருந்து பிரித்தது என்ன என்பதை இக்கட்டுரையின் இறுதியில் பார்ப்போம். ஆனால் தேவனிடம் அளந்து பெறுபவர்கள் எல்லோரும் கர்த்தருக்கு பிரியமாக நடந்துகொள்வார்கள் என்ற பார்வை சரியாக இருக்குமா?

நிச்சயம் இல்லை என்பதே நிதரிசனமான உண்மை! இஸ்ரவேல் ஜனங்களை தேவன் வனாந்திரத்தில் நடத்தினபோது 40 வருடங்களாக அவர்களுக்கு அவரவர்கள் படியை அளந்தே போஷித்தார். ஆனால் எகிப்திலிருந்து கிளம்பியவர்களில் யோசுவாவையும், காலேபையும் தவிரமற்ற அனைவரும் தேவகோபத்துக்கு ஆளாகி வனாந்திரத்திலேயே பிணமானார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆகவே அளந்து பெறுவது என்பது ஆண்டவரிடம் நம்மை நிலைத்திருக்கப் பண்ணும் என்ற கூற்று நடைமுறைக்கு ஒவ்வாதது.

மிகுந்த ஐசுவரியத்திலும் தேவனை உண்மையாக சேவித்த பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள், புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்கு ஆஸ்திகளால் ஊழியம் செய்த ஸ்திரீகள் (லூக் 8:3), கொர்நேலியு, பிலமோன் போன்ற சமுதாய அந்தஸ்துள்ளவர்களையும் நாம் வேதத்தில் பார்க்கிறோம்.

அதே போல கடும் தரித்திரத்திலும் தேவனை மறுதலிக்காத யோபு, மிகுந்த தரித்திரத்திலும் உதார குணமுள்ளவர்களாக விளங்கிய மக்கதோனிய சபையினர் (2 கொரி 8:1,2) மேலும் தங்கள் ஆஸ்திகளையெல்லாம் துச்சமென உதறிவிட்டு ஏழைநாடுகளுக்கு மிஷனரிகளாக களமிறங்கிய சி.டி ஸ்டட் போன்ற இன்னும் ஏராளமான கடந்த நூற்றாண்டின் பரிசுத்தவான்கள் என

அனைவரையும் நாம் நினைத்துப் பார்க்கத்தான் வேண்டும். அவர்களும்கூட மிகுந்த ஐசுவரியமுள்ளவர்களாக இருந்தபோதுதான் அதின்மேல் மனதை வைக்காமல் தேவனை நேசித்து ஐசுவரியத்தை விட்டுவிட்டு ஊழியத்தில் களமிறங்கியவர்கள்.

ஆக இதிலிருந்து தெரிந்துகொள்வது என்ன? தேவனை சேவிப்பவன் ஐசுவரியத்திலும், வறுமையிலும், அளந்து போஷிக்கப்பட்டாலும் எல்லா நிலையிலும் தேவனோடுள்ள அன்பு மாறாதவனாகத்தான் இருக்கிறான். உலகப்பொருளை சேவிப்பவன் ஐசுவரியத்திலும், வறுமையிலும், அளந்து போஷிக்கப்பட்டாலும் எல்லா நிலையிலும் தேவனை இரண்டாம் இடத்தில்தான் வைத்திருக்கிறான். இவர்களே ஐசுவரியம் பெருகும்போது கர்த்தரை மறுதலிக்கிறவர்கள், வறுமையின் பிடி இறுகும்போது திருடி, தேவநாமம் தூஷிக்கப்பட காரணமாக இருப்பவர்கள்.

எனவேதான் ஆண்டவராகிய இயேசு சொல்லுகிறார் “தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது” (லூக்கா 16:13)

நமது பொருளாதார நிலை அல்ல, நமது இருதயத்தின் நிலையே நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவின் ஆழத்தைத் தீர்மானிக்கிறது. Heart Matters!

## ட்வீட் - 67

**“கிறிஸ்துவுக்குள்”** என்ற அனுபவத்துக்குள் சகல நீதியும். சுதந்திரமும், பரிசுத்தமும், மகிழ்ச்சியும், பாதுகாப்பும், செழிப்பும், வளர்ச்சியும், நித்திய ஜீவனும் அடங்கியிருக்கிறது

## 68. ஒரு செக்லிஸ்ட் தேவையா?

தேவனைப் பிரியப்படுத்தி அவரது அன்பைப் பெற வேண்டுமா? என்னவெல்லாம் செய்யணும், என்னவெல்லாம் செய்யக்கூடாது?

தேவனோடு உள்ள உறவை தக்கவைத்துக் கொள்ள என்னவெல்லாம் செய்யணும், என்னவெல்லாம் செய்யக்கூடாது?

தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற என்னவெல்லாம் செய்யணும், என்னவெல்லாம் செய்யக்கூடாது?

ஆபத்திலும், பிரச்சனையிலும் இருக்கும் தருணங்களில் தேவனுடைய ஒத்தாசையைப் பெற என்னவெல்லாம் செய்யணும், என்னவெல்லாம் செய்யக்கூடாது?

இப்படி ஒரு செக்லிஸ்ட் உங்களிடம் இருந்தால் அதை எடுத்து முதலாவது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் இருக்கும் உறவில் பொருத்திப் பாருங்கள்... பொருந்துகிறதா?

நாம் நமது பிள்ளைகளை நேசிப்பதும், அவர்களோடு உறவு கொள்வதும், அவர்களது தேவைகளை சந்திப்பதும், அவர்களுக்கு உதவிகள் செய்வதும் “இதையெல்லாம் செய்யணும், இதையெல்லாம்

செய்யக்கூடாது" என்ற Rules-இன் அடிப்படையில் இல்லை, உங்களுக்கும் அவர்களுக்குமான "பெற்றோர்- பிள்ளை" என்ற அடிப்படையில்தான் இருக்கிறது என்பதை நமது சுபாவமே நமக்கு போதிக்கிறதல்லவா? பின்னர் இது தேவனிடம் மட்டும் எப்படி பொருந்தும்?

அப்படியானால் எப்படி வேண்டுமானாலும் வாழலாமா பிரதர்?

நிச்சயமாக இல்லை...உங்கள் பிள்ளை மோசமானவனாக இருந்தால் ஒரு நல்ல பெற்றோராக அவனை உங்கள் அருகில், உங்கள் கண்காணிப்பிலும் அரவணைப்பிலுமே வைத்து திருத்தி நல்ல மனிதனாக்க விரும்புவீர்கள். தேவனும் அதையேதான் செய்கிறார். புதிய ஏற்பாட்டு புத்திரசுவீகார உறவின் மேன்மை அது!

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபிரெயர் 4:16 )

## ட்வீட் - 68

**நம்மையெல்லாம் நமது எதிரிகளை மன்னிக்கச் சொல்லும் தேவன் தனது எதிரியான சாத்தானை ஏன் மன்னிக்கக்கூடாது?**

உங்கள் வீட்டுக்குள் ஒரு விரியன் பாம்பு நுழைந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். என்ன செய்வீர்கள்? அந்தப் பாம்பை அடித்துக் கொல்லுவீர்கள் அல்லவா? ஏனனில் அதற்குள் விஷம் இருக்கிறது. ஒருவேளை அந்தப் பாம்பு உங்கள் குழந்தையைக் கடித்துவிட்டால் என்ன செய்வீர்கள். கடிபட்ட குழந்தைக்குள்ளும் இப்போது அதே விஷம் புகுந்து விட்டதே! பிள்ளையையும் அடித்துக் கொல்வீர்களோ? நிச்சயமாக இல்லை அல்லவா?

விஷம் ஒன்றானாலும் நபர்கள் வேறு. அது சர்ப்பம், கொல்லப்படவேண்டியது. இது பிள்ளை, குணமாக்கப்பட வேண்டியது. மேலும் சாத்தான் தனது சுய சித்ததில் முடிவெடுத்து தேவனை விட்டுப் பிரிந்து கலகம் பண்ணினான். ஆனால் மனிதனோ சாத்தானால் வஞ்சிக்கப் பட்டான். இரண்டையும் ஒன்று போல அணுக முடியாது. கிருபை காட்டினால் மனிதன் மனம் திரும்புவான். கிருபையைக் கொட்டினாலும் சாத்தான் மனந்திரும்ப மாட்டான். அது அவனது சுபாவத்திலேயே இல்லை. இது தேவனுக்குத் தெரியும். எனவேதான் அவனுக்கு மன்னிப்பு இல்லை.

## 69. தேவதூதரும் மனித தூதரும்

தேவதூதர்கள் தேவன் சொல்லும் தகவலை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை செய்பவர்கள். ஊழியக்காரர்களாகிய நாமும் அதையேதான் செய்கிறோம் ஆனால் ஒரு வித்தியாசமுண்டு. சோதோம் கொமாராவை அழிக்கப்போவதாக தேவன் தேவதூதர்கள் வழியாக ஊழியக்காரனாகிய ஆபிரகாமிடம் தகவலை அனுப்புகிறார். தேவன் சொன்னதைக் கேட்டு தூதர்கள் பதறியிருக்க வாய்ப்பில்லை ஆனால் ஆபிரகாம் பதறினார், அதுதான் அந்த வித்தியாசம்.

தீர்க்கதரிசியாகிய மோசே "என் பெயரை ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கிப் போடும்" என்று மக்களுக்காக தேவனிடம் கதறினார். பரலோகத்தில் தேவதூதர்களுக்கு பணிக்கான பயிற்சி வகுப்புக்கள் இருக்கிறதோ இல்லையோ, ஒரு மனிதனை ஆவியானவர் நன்கு பயிற்றுவிக்காமல்

ஊழியத்தில் பயன்படுத்த மாட்டார். யாருக்கு ஊழியம் செய்கிறோமோ அவரையும் (தேவன்), யாருக்காக ஊழியம் செய்கிறோமோ (மக்கள்) அவர்களையும் நன்கு புரிந்துகொண்டு நேசிப்பதுதான் அந்தப் பயிற்சியின் திட்டம்.

மக்களின் சீர்கெட்ட நடத்தையை மேலோட்டமாக பார்த்துவிட்டு பழைய ஏற்பாட்டிலிருந்து சாபத்தின் எச்சரிப்புகளை எடுத்து பிரசங்க மேடையில் நின்று சத்தத்தை உயர்த்தி பிரசங்கிப்பது மக்களிடம் மாற்றங்களை ஏற்படுத்தாது.

ஒரு நல்ல தகப்பனிடம் அவரது மகன் படிக்கும் பள்ளியின் பிரின்ஸிபல் “உங்கள் மகன் சரியில்லை அவனை கண்டித்து, ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுங்கள்” என்று சொன்னால் மகனிடம் அந்த தகப்பனார் நடந்து கொள்ளும் விதத்திற்கும், ஒரு ஹாஸ்டல் வார்டனிடம் அதே பிரின்ஸிபல் “உங்கள் ஹாஸ்டல் மாணவர்கள் சரியில்லை, அவர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுங்கள்” என்று சொன்னால் அந்த வார்டன் அந்த மாணவர்களிடம் நடந்து கொள்ளும் விதத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. இருவருமே ஒழுங்குபடுத்தும் முயற்சியில் இறங்குவார்கள் ஆனால் தகப்பன் தன் மகனுக்காக பதறுவார், வார்டன் பிரின்ஸிபலுக்காக மாணவர்கள் மீது பாய்வார். ஒரு ஊழியக்காரன் தகப்பனைப் போல நடந்துகொள்ள வேண்டும், தேவன் அதைத்தான் எதிர்பார்க்கிறார்.

## ட்வீட் - 69

வேதாகமம் முழுவதும் குடும்ப ஐக்கியத்தை, ஒற்றுமையை வலியுறுத்தும் தேவன் பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினை உண்டாக்க வந்தேன். (மத் 10:34,35) என்று சொல்லுகிறாரே ஏன்? இதை எப்படி புரிந்து கொள்வது?

ஒரு நிறுவனத்தில் பணியாளர்களுக்குள் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். அந்த ஒற்றுமை அவர்கள் ஒருங்கிணைந்து உழைத்து நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்ற உதவியாக இருக்கும்.

ஆனால் அதே நிறுவனம் அருகருகே அமர்ந்து வெட்டிக் கதை பேசிக்கொண்டிருக்கும் இரு பணியாளர்களை பிரிக்கவும் செய்யும். காரணம் அவர்களது ஐக்கியம் அங்கே நிறுவனத்தின் நோக்கத்துக்கு எதிராக இருக்கிறது. உன்னத அனுபவங்களுக்குள்ளாக ஓடிக்கொண்டிருக்கும் உங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரை மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து மீண்டும் உலகத்துக்குள்ளாக இழுக்கிறீர்களா?

உங்கள் குடும்ப ஐக்கியமாகட்டும், அல்லது நட்பாகட்டும் அதில் இணைக்கும் பரிசுத்த ஆவி இறங்குவாரா, அல்லது பிரிக்கும் பட்டயம் இறங்குமா என்பது நீங்கள் சேர்ந்திருக்கும் நோக்கத்தைப் பொருத்தது. உங்கள் தலை யார் என்பதைப் பொறுத்தது… உங்கள் குடும்ப ஐக்கியத்தில் இயேசுவே தலையாக இருக்கட்டும்!

## 70. பொங்கி வழியும் பரிபூரணம்

ஏதேன் தோட்டத்தில் தேவன் ஏன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை வைத்தார் என்று எல்லோரும் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால் ஏன் தேவன் அங்கு ஜீவ விருட்சத்தை வைத்தார் என்று யாரும் கேட்பதில்லை. ஆதாமும் ஏவாளும் மரணிப்பவர்களாகப் படைக்கப்படவில்லையே! அவர்கள் நித்தியமாக ஜீவிக்கிறவர்களாகத்தானே படைக்கப்பட்டார்கள் பின்பு ஜீவ விருட்சத்துக்கான அவசியம் அங்கு ஏன் வந்தது?

ஜீவன் என்றால் மரணம் அற்ற நிலை என்பது நமது பூமிக்கேற்ற சிற்றறிவின் புரிதல். ஆனால் இறையரசில் ஜீவன் என்பது பெருகிக் கொண்டே இருக்கும் ஒரு உன்னத ஆசீர்வாதம். ஜீவ விருட்சத்தின் கனி நம்மில் ஜீவனைப் பெருகச் செய்கிறது. எனவேதான் கர்த்தராகிய இயேசு நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது "பரிபூரணப்படவும்" வந்தேன் என்றார் (யோவான் 10:10).

நித்திய இராஜ்ஜியத்தின் புதிய எருசலேமில் பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருப்பதாகவும், அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள் என்றும் வெளி 22:2 சொல்லுகிறது. நோயே இல்லாத இடத்தில் ஆரோக்கியத்தைத் தரும் இலைகள் எதற்கு? நோயால் தாக்கப்படாத நிலைதான் ஆரோக்கியம் என்பது நமது பூமிக்கேற்ற சிற்றறிவின் புரிதல். ஆனால் இறையரசில் ஆரோக்கியம் என்பது பரலோகவாசிகளின் இயல்பான, ஆனால் உன்னத தெய்வீக ஆசீர்வாத நிலை.. இந்த ஆசீர்வாதம் எல்லையில்லாமல் பெருகிக் கொண்டே இருக்கும்.

பாவமே செய்ய முடியாத, பாவமே அண்டாத ஒரு இடத்தில் ஏன் கர்த்தரை பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஆராதிக்கிறார்கள்? பாவத்தை விட்டு விலகி ஜீவிப்பதுதான் பரிசுத்தம் என்பது நமது பூமிக்கேற்ற சிற்றறிவின் புரிதல். பரிசுத்தமும் பெருகக்கூடியது...எனவேதான் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்று வெளி 22:11 சொல்லுகிறது. "கர்த்தருடைய பரிசுத்தம்" என்பதோ மொழிகளால் விவரிக்கப்பட முடியாத உச்சபட்ச தெய்வீக நிலை! எனவேதான் இந்நிலை பயபக்தியுடன் ஆராதிக்கப்படுகிறது!

சபிக்கப்பட்டு, மாயைக்குள் கட்டுண்டு கிடக்கும் பூமியில் வசிக்கும் நாம் எப்படி பரிசுத்தம் என்றால் பாவம் அற்ற நிலை என்று எப்படி பாவத்தை வைத்து பரிசுத்தத்தைப் புரிந்துகொள்ளுகிறோமோ அப்படித்தான் பரலோகவாசிகள் பாவம் என்றால் பரிசுத்தமற்ற நிலை என்பறு பரிசுத்தத்தை வைத்து பாவத்தைப் புரிந்துகொள்வார்கள் போலும்..

வெறும் ஜீவனல்ல பரிபூரண ஜீவன்...வெறும் மகிமையல்ல
மகிமையின்மேல் மகிமை... எங்கும் எதிலும் பொங்கி வழியும் பரிபூரணம்...இதுதான் நம் அப்பாவின் இராஜ்ஜியம்!

## ட்வீட் - 70

ஒருவருடைய ஜெப நேரம் குறைவதற்கு இரு காரணங்கள் இருக்கலாம். விசுவாசம் குறைந்து போவதால் சோர்ந்து போய் ஜெபநேரம் குறையலாம். அல்லது விசுவாசம் கூடியதால் இதுவரை அலப்பிவந்த வீண் வார்த்தைகளையும், புலம்பல்களையும் தவிர்த்து சுருக்கமாக ஆனால் விசுவாசமாக ஜெபிப்பதால் ஜெபநேரம் குறையலாம்.

ஒருவருடைய ஜெப நேரம் அதிகரிப்பதற்கும் இரு காரணங்கள் இருக்கலாம். விசுவாசம் குறைந்து போவதால் வார்த்தைகளை அதிகப்படுத்தி, உணர்ச்சிகளைக் கூட்டி, அழுது புலம்புவதன் மூலம் ஜெப நேரம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அல்லது விசுவாசம் அதிகரிப்பதால் தேவன்பால் ஈர்க்கப்பட்டு அவரது சமூகத்திலேயே மணிக்கணக்கில் விழுந்து கிடக்கவும் வாய்ப்பிருக்கிறது.

எது எப்படியிருந்தாலும் உங்கள் ஜெப நேரம் கூடியிருக்கிறதா என்று பார்ப்பதைவிட விசுவாசம் கூடியிருக்கிறதா என்பதை கருத்தாய் ஆராயுங்கள்.